தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்

தொகுதி – XXX

திருவள்ளூர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி – II



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை – 600 008
2025 – திருவள்ளுவர் ஆண்டு 2056

தமிழ் நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண் : 69

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி – XXX

(திருவள்ளூர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி – II)

தமிழ் நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண்: 69

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி – XXX

(திருவள்ளூர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி – II)

பதிப்பாசிரியர்

ச. கிருஷ்ணமூர்த்தி

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை – 600 008

2025 – திருவள்ளுவர் ஆண்டு 2056

BIBLIOGRAPHICAL DATA

Title	:	TAMILNADU INSCRIPTIONS – VOL. XXX (Thiruvallur District Inscriptions - Vol. II)
Editor	:	S. Krishnamoothy
Copy right	:	Tamil Nadu State Dept. of Archaeology
Subject	:	Epigraphy
Language	:	Tamil & English
Edition	:	First
Publication No	:	369
Year	:	2025
Type point	:	12
No. of pages	:	424
No. of copies	:	1000
Paper used	:	80 Gsm Elegant Maplitho paper
Publisher	:	Tamilnadu State Department of Archaeology, Tamil Valarchi Valaagam, Thamizh Salai, Egmore, Chennai - 600 008.
Printed by	**:**	Chengalpattu MGR District Small Printers Service Industrial Co-operative Society Ltd., No.14-A, Sheiket North (Kavarai) Street, Kanchipuram - 631 501.
Price	**:**	Rs.280 /-

பொருளடக்கம்

	பதிப்புரை	...	i
	முன்னுரை	...	iii
1.	திருவேற்காடு	...	1
2.	கோயம்பேடு	...	58
3.	கொரட்டூர்	...	81
4.	முகப்பேர்	...	88
5.	கடம்பத்தூர்	...	95
6.	ஆரிக்கம்பேடு	...	97
7.	வளசரவாக்கம்	...	99
8.	பாடி	...	101
9.	திருமுல்லைவாயில்	...	130
10.	செஞ்சிப்பனப்பாக்கம்	...	192
11.	மேலூர்	...	210
12.	குத்தம்பாக்கம்	...	227
13.	மாங்காடு	...	257
14.	வெளியகரம்	...	262
15.	ஈச்சம்பாடி	...	264
16.	பெருமாநல்லூர்	...	265
17.	கொளத்தூர்	...	267
18.	மேல்பூடி	...	271
19.	ஆர்.கே.பேட்டை	...	272
20.	விளக்கணாம்பூண்டி	...	274
21.	வெள்ளாத்துக்கோட்டை	...	286
22.	போந்தவாக்கம்	...	287
23.	சுருட்டபள்ளி	...	290
24.	கக்சூர்(நம்பாக்கம்)	...	292

25. ஊத்துக்கோட்டை ... 295
26. இருளஞ்சேரி ... 299
27. அருகத்துறை(அ)அரியத்துறை ... 310
28. சத்தியவேடு ... 312
29. கும்மிடிப்பூண்டி ... 314
30. விலாங்காடு ... 316
31. நேமம் ... 319
32. திருமழிசை ... 325
33. நிழற்படங்கள் ... 369
34. சொல்லடைவு ... 397

த. உதயச்சந்திரன், இ.ஆ.ப.,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (ம)
ஆணையர் (மு.கூ.பொ.)

தொல்லியல் துறை
தமிழ் வளர்ச்சி வளாகம்,
தமிழ்ச்சாலை,
சென்னை - 600 008.

பதிப்புரை

வரலாற்றினை எழுதுவதற்கு துணைபுரியும் சான்றுகளாகத் திகழ்பவை அகழாய்வுத் தொல்பொருட்கள், கல்வெட்டுகள், காசுகள், செப்பேடுகள், வரலாற்றுச்சின்னஙகள், இலக்கியங்கள் போன்றவையாகும். வரலாற்றினை அறிய உதவும் கல்வெட்டுகளைப் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும். தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையானது தமிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்து, படித்து, பதிப்பித்து, நூலாக வெளியிடும் பணியினைத் தனது முதன்மைப் பணிகளில் ஒன்றாக செய்து வருகிறது.

இத்துறைக் கல்வெட்டுப்பிரிவு வாயிலாக இதுவரை 10346 கல்வெட்டுகள் 68 தொகுதிகளாக வெளிவந்துள்ளன. 2025-ஆம் ஆண்டில் இந்நூல் கல்வெட்டு வரிசை எண் 69- ஆவது நூலாக வெளியிடப்படுகின்றது. திருவள்ளுர் மற்றும் பிற ஊர்களிலிருந்தும் படி யெடுக்கப்பட்ட 225 கல்வெட்டுகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள. ஊர் கல்வெட்டுகள் திருவேற்காடு, கோயம்பேடு, கொரட்டூர், முகப்பேர், கடம்பத்தூர், ஆரிக்கம்பேடு, வளசரவாக்கம், பாடி, திருமுல்லைவாயில், செஞ்சிப்பனப்பாக்கம், மேலூர், குத்தம்பாக்கம் மாங்காடு, வெளியகரம், ஈச்சம்பாடி, பெருமாநல்லூர், கொளத்தூர், மேல்பூடி, ஆர்.கே.பேட்டை, விளக்கணாம்பூண்டி, வெள்ளாத்துக்கோட்டை, போந்தவாக்கம், சுருட்டப்பள்ளி, கக்சூர்(நம்பாக்கம்), ஊத்துக்கோட்டை, இருளஞ்சேரி, அருகத்துறை(அ) அரியத்துறை, சத்தியவேடு, கும்மிடிப்பூண்டி, விலாங்காடு,நேமம், திருமழிசை ஆகியவை இடம்பெற்றுள்ளன. இந்நூல் தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி XXX (திருவள்ளுர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி - II) என்னும் தலைப்பில் வெளிவருகின்றது.

இக்கல்வெட்டுகளைப்படித்துத் திருத்திய இத்துறைதிருச.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும், இக்கல்வெட்டுகளைப் பதிப்பித்து நூலாக வெளிக்கொணரும் பணியில் ஈடுபட்ட இணை இயக்குநர் இரா. சிவானந்தம் அவர்களுக்கும் உதவி இயக்குநர் (தொழில்நுட்பம்) திருமதி. கி. பாக்கியலட்சுமி அவர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினை தட்டச்சு, D.T.P. மற்றும் நிழற்படங்கள், அட்டைப்படம் வடிவமைத்த அச்சுக்கோர்ப்பாளர் திரு. கு. கோகிலா, அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

துறை அலுவலர்களின் உழைப்பாலும், பெரும் முயற்சியாலும் இது போன்ற நூல்களை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். முதன்மைச் சான்றாக உள்ள இக்கல்வெட்டு

வாசகங்களை ஆய்வாளர்கள், ஆர்வலர்கள், மாணவர்கள் பயன்படுத்தி இப்பகுதியின் வரலாற்றினை எழுதுவதற்கு உதவும் என்ற நோக்கில் இந்நூலினை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அரசு கூடுதல் தலைச்செயலாளர் (ம)
ஆணையர் (மு.கூ.பொ.)

முன்னுரை

'திருவள்ளூர் மாவட்டக் கல்வெட்டுகள்', முதல் தொகுதி போல் புகழ் பெற்ற பல பெரிய ஊர்க்கல்வெட்டுகள் மட்டுமின்றிச் சிற்றூர்களில் உள்ள கல்வெட்டுகளும் இதில் இடம் பெறுகின்றன.

இத்தொகுதியில் முதலில் இடம் பெறும் திருவேற்காடு, கருமாரியம்மன் கோயில் பலருமறிந்த ஊராக உள்ளது. இத்திருவேற்காட்டில் வேதபுரீஸ்வரர் கோயில் சோழர்காலக் கட்டட அமைப்பில் அமைந்த பழமையான கோயிலாகும். இக்கோயிலில் 20க்கு மேற்பட்ட கல்வெட்டுகளைத் தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை படியெடுத்துள்ளது.

இரண்டாம் இராசேந்திரனுடைய மெய்க்கீர்த்தியுடன் உள்ள இம்மன்னனின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டே இக்கோயிலில் தொன்மை வாய்ந்தது. எனவே இக்கோயில் 1056-க்கு முன் கட்டப்பட்ட கோயில் எனலாம். வேலமரத்தின் அடிப்படையில் ஊர்ப்பெயர் ஏற்பட்டது.

63 நாயன்மார்களுள் ஒருவரான மூர்க்கநாயனார் பிறந்த ஊர் இவ்வூராகும். அவர் மரபில் வந்தவரும் திருவேற்காட்டில் பிறந்தவருமான இராமலிங்கம் என்பவரின் மகன் புலிப்பாக்கம் வியாக்ரபுரீஸ்வரர் கோயில் திருப்பணியில் ஈடுபட்டுள்ளதை அங்குள்ள சாசனம் கூறுகிறது. திருப்பணி புரிந்தவர் துளுவ வேளாள மரபினர் ஆவார். எனவே மூர்க்கநாயனார் துளுவ வேளாளர் எனலாம். உமாபதி சிவாச்சாரியார் மூர்க்கநாயனார், வேளாளர் என்பார். மேலும் இக்கல்வெட்டு பொ.ஆ. 19-ஆம் நூற்றாண்டு என்பதால் உண்மை நிலையை வாசகர் முடிவிற்கே விட்டு விடுகிறேன் (காண்க தொல்லியல் நோக்கில் காஞ்சிபுர மாவட்டம் பக்கம்369).

வீரராஜேந்திரன் கல்வெட்டின்படி இறைவனுக்குத் திருவமுது காட்டுவதுடன் அடியார்களுக்குச் சட்டிச்சோறு வழங்க 3 குறுணி அரிசி தினமும் வழங்கப்பட்டுள்ளது. அர்த்த சாமபூசையும் கோயிலில் நடைபெற்றுள்ளது.

தொல்லியல் துறை திருவிந்தளூரில் இருந்து வரலாற்றுச் சிறப்புமிக்க மிகப்பெரிய செப்புப்பட்டயமான திருவிந்தளூர்ச் செப்பேட்டுத் தொகுதியைக் கண்டறிந்து நூலாகவும் வெளியிட்டுள்ளது. இந்தத் திருவிந்தளூரைச் சேர்ந்த கிளிநல்லூர் கிழவன் ஆதித்தன், வேதபுரீஸ்வரர் கோயிலில் விளக்கு வைத்துள்ளான்.

திருவேற்காடு கோயிலை ஆய்வு செய்ய வந்த அதிகாரி, திருவொற்றியூர்க் கோயில் திருக்காவனம் ஜனவாரத்தில் இருந்தபடி கோயில் நிதிநிலைமையை ஆராய்ந்துள்ளார். கோயிலுக்கு 29300 குழி நிலமும் 1357 கல நெல் வருவாயும் இருப்பதை அறிந்து கூடுதல் வருவாய்க்கு வழிவகைச் செய்துள்ளார். கோயிலில் மூன்று வகையான விளக்குகள் எரிக்கவும் உற்சவத் திருமேனிகள் பூசைக்கும் விழாச் செலவினத்துக்கும். ஏற்பாடு செய்துள்ளார். திருவேற்காடு, மும்முடி சோழநல்லூர் எனவும் அழைக்கப்பட்டது. இவ்வூரின் ஒரு பகுதியைத்

தனியாகப் பிரித்துத் திருச்சிற்றம்பலநல்லூராகத் தோற்றுவிக்கப்பட்டதை ஒரு கல்வெட்டு கூறுகிறது.

முதலாம் குலோத்துங்கனுடைய 46 ஆவது ஆட்சியாண்டின் போது, உத்தராயண தக்ஷிணாயன, ஆனித் திருவிழா போன்ற விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளன என சாசனங்கள் கூறுகின்றன.

வீரராஜேந்திரனுடைய மூன்றாவது ஆட்சியாண்டின்போது காஞ்சிபுரத்து மயானமுடையார் கோயிலின் கங்கை கொண்டசோழன் திருமண்டபத்தில் திருவேற்காடு கோயில் காரியம் ஆராயப்பட்டது. கோயிலுக்குரிய நிவந்தம் போதாமையால் 73 காசுகள் வழங்கப்பட்டதுடன் 146 கலம் நெல் கூடுதலாகப் பெறவும் வழிவகை செய்யப்பட்டது.

முதலாம் குலோத்துங்கனுடைய ஆட்சியின்போது பாண்டி குலாசனி வளநாட்டு ஆத்ரேயன் கங்கை கொண்ட விச்சாதிர பல்லவரையன், திருவேற்காட்டில் நிலங்களை விலைக்கு வாங்கி மடப்புறமாக ⅔ பாகம் விட்டுள்ளான். அவ்வூர் சபை 16 காசுகளைப் பெற்றுக் கொண்டு நிலங்களை இறையிலியாக்கியுள்ளது. மடப்புறத்தார் உணவிற்காக நிலம் விலைக்கு வாங்கப்பட்ட விவரம் ஒரு சாசனத்தில் உள்ளது.

மாங்காட்டைச் சேர்ந்த வெள்ளாளன் கேசவன், அத்தியூர்செல்வன் கந்தமன் பெருமாள் நங்கை ஆகியோர் கோயிலில் விளக்குகள் வைத்துள்ளனர். பஞ்சநதி வாணபுரத்து வாணியன்மங்கலங் கிழான் குலத்துணை கொம்மன் என்பவனும் நிலக்கொடை அளித்துள்ளான். வல்லம் குடைவரைக் கல்வெட்டில் கொம்மை என்ற பெண் இடம் பெறுகிறாள்.

திருமுனைப்பாடிப் பனையூர் நாட்டு உறத்தூர் வெளிப்பாக் கிழான் பொன்னம்பலக்கூத்தன், காலிங்கராஜன், தேவன் வேளான் போன்றோர் விளக்குகள் வைத்துள்ளார்கள். கோயிலுக்குத் திருமஞ்சனநீர் கொண்டு வருபவர், 'நந்தவனக் காவலர்', திருமெய்க்கிடுவார், இசைக் கருவிகள் ஒலிப்பவரான உவச்சர்கள் ஆகியோருக்கு மொத்தம் 1886 கலம் நெல் வருடம் ஒன்றிற்கு என ஒதுக்கப்பட்டது. தடிகை, செகண்டிகை போன்றவை இசைக் கருவிகள் ஸ்ரீபலியின்போது ஒலிக்கப்பட்டன. ஈக்காடுக்கோட்டத்துக் கருப்புழான் சாத்தான் மகன் ஆகாண்டையும் இவன் சிறியதாய் நங்கை ஆண்டாளும் சேர்ந்து கொடை அளித்துள்ளனர்.

சோழர் காலம் தொடங்கி விஜயநகரப் பேரரசர் காலம் வரை நீலகங்கரையர் என்ற குடிப்பெயருடன் பலர் அதிகாரிகளாக இருந்து வந்துள்ளனர். சிலர் மன்னர் போன்றே நாட்டை நிருவகித்துள்ளனர். வரிச்சலுகைகளையும் அளித்துள்ளனர்.

கொரட்டூர் என்ற ஊர், சோழர் காலத்தில் குறட்டுர் என்றும் குறட்டூரான செம்பியன் மாதேவி சதுர்வேதிமங்கலம் என்றும் அழைக்கப்பட்டுள்ளது. குறட்டூரில் உள்ள செம்பியன் மாதேவி ஈஸ்வரர்கோயிலே ஜம்புகேஸ்வரர் என்று தற்போது அழைக்கப்படுகிறது. இராஜராஜனின் மெய்க்கீர்த்தி, சாசனத்தின் தொடக்கத்தில் வரும். ஆனால் குறட்டூர் சாசனமொன்றில் நடுவில் வருகிறது. செப்பேடுகளில் இவ்வாறு வருவதைக் காணலாம்.

முகப்பேரில் சந்தான சீனிவாசப்பெருமாள் கோயில், சுந்தரபாண்டியன் காலத்தில் திருவேங்கடமுடையான் கோயில் என வழங்கப்பட்டது. ஊர்ப்பெயரும் நுளம்பியாற்றூர் எனக் கூறப்பட்டுள்ளது. வேறு ஊர்க் கல்வெட்டுகளிலும் இப்பெயர் உள்ளது. பாடியில் உள்ள கல்வெட்டும் இப்பெயரைச்சுட்டுகிறது.

வள்ளிசேர்பாக்கம் என்று அழைக்கப்பட்ட ஊர் தற்போது வளசரவாக்கம் என்று வழங்கப்படுகிறது. திருவேள்வீஸ்வரர் கோயில் மற்றும் அகத்தியர் கோயில் ஒரே சமயத்தில் இரட்டைக் கோயிலாகக் கட்டப்பட்டது. மூன்றாம் குலோத்துங்கனுடைய பொ. ஆ. 1182 - இல் கூடிய கல்வெட்டு இதனை உறுதிபடுத்துகிறது.

அம்பத்தூர் அருகேயுள்ள காமராசபுரம் அம்பலவாணர் கோயில் சாசனம் பொ. ஆ. 1520 ஆகும். இக்கல்வெட்டில் சந்தையின்போது வசூலிக்கப்படும் உள்ளாயம், அள்ளும் பண்டம், அடிக்காசு போன்ற வரிகள் கூறப்பட்டுள்ளன. இக்கல்வெட்டில் கிருஷ்ணதேவராயரின் மந்திரியான பெத்தராசன், சாளுவ மகாராஜா மல்லை ஆகியோர் கூறப்பட்டுள்ளனர்.

புழல் என்ற ஊர் தொன்மைவாய்ந்தது. இங்குள்ள திருமூலஸ்தானமுடையார் கோயில் கட்டடக் கலையால் மேம்பட்டு நிற்கிறது. இங்கிருக்கும் எட்டுக் கல்வெட்டுகளில் முதலாம் குலோத்துங்கன் கல்வெட்டே தொன்மையானதால் இக்கோயில் இவன் காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம். இராசநாராயண சம்புவராயன் காலத்தில் திருப்பணி நடந்துள்ளது. இராசசுந்தரிநல்லூர் எனவும் ஊர் வழங்கப்பட்டது. இவ்வூரில் சமணர்க் கோயிலும் உண்டு.

திருவாரூர்க் கீழை மடத்து சந்தானம் (பெரும் பெற்ற புலியூரில் இருந்த போது) வாகீஸ்வர தேவருக்குச் சபையார் நிலவிலைப்பிரமாணம் பண்ணிக் கொடுத்து, மடப்புறமாக நிலம் அளித்துள்ளனர். விஜயநகர அரசன் இரண்டாம் தேவராயன் ஆட்சியின்போது காஞ்சிபுரம் செல்லப்ப சாளுவதண்ட நாயக்கன் அத்திப்பட்டு, கோவிந்தபுரம் போன்ற ஊர்களில் புழல் திருமூலஸ்தானமுடையார்க்கு நிலங்கள் அளித்துள்ளார். காளத்தி முதலியார் வில்லிபாக்கத்தில் கோயிலுக்கு நிலம் அளித்துள்ளார். வில்லிபாக்கமே வில்லிவாக்கம் என்று தற்போது வழங்கப்படுகிறது. புழல் ஊராக மட்டுமின்றிக் கோட்டமாகவும் இருந்துள்ளது.

மாங்காடு திரௌபதி அம்மன் கோயிலில் உள்ள பொ.ஆ.1517-இல் கூடிய கல்வெட்டு வீரநரசிங்கராயன் தழுவக்குழந்தான் தம்பி செல்லப்பன் தந்த நன்கொடையைக் கூறுகிறது. மற்றோர் கல்வெட்டு தண்டலை, நொச்சிப்பாக்கம் மற்றும் காட்டூர்பாக்கத்தில் நிலக்கொடை தந்ததைக் கூறுகிறது. இரண்டு தானமும் மாங்காடு நயினார் பரமநயினார்க்கு வழங்கியவையேயாகும்.

கோயம்பேடு குறுங்காலீஸ்வரர் கோயிலில் இருந்து 15 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன. பெரும்பாலும் மூன்றாம் குலோத்துங்கன் மற்றும் மூன்றாம் இராசராசன் காலத்தில் பொறிக்கப்பட்டவையே இவைகள் ஆகும். நடுநாட்டுத் திருநாவலூர் முதலிப்பிள்ளை சூரியக்கோன் என்பவன் விளக்கு வைக்க காசு தந்துள்ளான். சிவமதிசூதன் வானவநாயக்கனுடைய மனைவி உய்யவந்தாள் இரண்டு விளக்குகளைக் குறுங்காலண்டார் கோயிலில் வைத்துள்ளாள். அரிகுலநாயகன் வடுகநாதனுடைய மனைவி தேவாண்டை 1234 புஜபலமாடை என்ற காசுகளைக் கோயிலுக்கு அளித்துள்ளாள். நந்தவனம் உருவாக்க

1000 குழி நிலம் தந்ததுடன் இவளே கோயிலில் திருமஞ்சனக் கிணறும் ஏற்படுத்தினாள். இவளுடைய மகள் எறியாண்டாள் கோயிலுக்கு 24 புஜபலமாடை என்ற பொற்காசுளை அளித்துள்ளாள்.

மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் நன்செய் நிலத்தில் நெல்லும் புன்செய் நிலத்தில் எள்ளு, வரகு, கமுகு, கேழ்வரகு போன்றவையும் பயிரிடப்பட்டுள்ளன. நஞ்சைக்கு 2 கல நெல்லும் புன்செய் நிலத்துக்கு 5 புதுக்காசும் வரியாக இருந்துள்ளது. பொ.ஆ.16-ஆம் நூற்றாண்டில் திப்பைய்யா இப்பகுதியில் ஆட்சி செய்து வந்துள்ளார். இவர் குறுங்காலீஸ்வரர்க்குக் காலை சந்தி நடைபெற கொடையளித்துள்ளார்.

பாடல் பெற்ற தலமான திருவலிதாயம், திருவல்லிதாயம் என்றும் பாடி என்றும் முன்பு வழங்கப்பட்டது. கோபார்த்திவேந்தர வர்மன் காலத்தில் 1350 குழி நிலம் கோயிலுக்கு விற்று தரப்பட்டதை ஒரு சாசனத்தின் மூலம் அறிகின்றோம்.

முதலாம் இராசராசனுடைய 10 ஆம் ஆட்சியாண்டு சாசனம், புலியூர்கோட்டத்துத் துடமுனிநாட்டுத் திருவலிதாய மகாதேவர் என்று இறைவனைச் சுட்டுகிறது. பொத்தப்பிச்சோழன் கோயில் முழுமைக்கும் திருப்பணி நடத்த ஊற்பாடு செய்துள்ளான் என்று ஒரு சாசனம் கூறுகிறது.

காஞ்சிபுரம் தங்கச்சியார் மகளார் கரிகால சோழப்பிள்ளையார் என்ற தேவரடியார் கோயிலுக்குரிய பாத்திரங்களுடன் திருவணிகலன்களும் அளித்துள்ளார். காஞ்சிபுரம் சொக்கீஸ்வரர் கோயிலில் கரிகால சோழ விநாயகர் சிலை உள்ளது.

மற்றொரு தேவரடியார் பொன்னாண்டை என்பவள் அம்மனுக்குத் திருமங்கலநாண், திரிசரம், பட்டம், திருவிளம்பறை முதலிய அணிகலன்களை அளித்துள்ளார். பொன்னகைகளில் பவழமும் சேர்க்கப்பட்டது. திருக்களர்ச் செப்பேடு ஒன்றும் அம்மனுக்கு வழங்கிய தாலி முதலிய அணிகளைச்சுட்டும்.(தமிழ்நாட்டுச் செப்பேடுகள் தொகுதி-1)

நாங்கூர் நாட்டுத் திருவெண்காட்டுத் திருமடைவிளாகத்திலிருக்கும் திருவிடை திருஇராமீஸ்வரமுடையான் என்னும் திருப்பதியம் பாடுபவன் ஆச்சர்யலிங்கமாக நாயனாரையும் அழகிய திருச்சிற்றம்பலமுடையாரையும் பிரதிஷ்டை செய்ததுடன் பூசை, அமுதுபடி, சந்தி விளக்கு போன்றவற்றிற்காக 10 நற்பழங்காசினையும் அளித்துள்ளான்.

இரண்டாம் தேவராயன் ஆட்சியின்போது 6.6.1427 அன்று சந்திரகிரி சூழ்ந்த பல பற்றில் இடங்கையில் உள்ளாரும் வன்னியரும் கூடி சில தீர்மானங்களைக் கொண்டு வந்துள்ளனர். அதாவது வரிநீக்கம் அல்லது வரிச்சலுகை வழங்க முடிவெடுத்தனர். வரிச்சலுகை பெறும் சாதியைக் குறைவுறுப்பு என்று சாசனம் கூறுகிறது. பள்ளிகள் பேரில் உள்ள இடங்கை வரி நீக்குதல், திருமெய்க்காப்பாளற்கு ½ பாகம் வரி, குடிக்கு ¾ பாகம் வரி என நிர்ணயிக்கப்பட்டது. பள்ளிவேறு, வன்னியர் வேறு என்ற குறிப்பு இச்சாசனம் மூலம் தெரிகிறது.

வாணிக ஊரான நியமம் தற்போது நேமம் என வழங்கப்படுகிறது. இங்குள்ள இறைவன் ஆவுண்டீஸ்வரர் என வழங்கப்படுகிறார். ஆன் உடையார் திருவகத்தீஸ்வரமுடையார் என்ற பெயர் சோழர் காலத்தில் இருந்துள்ளது. ஆன் என்பது பசுவைக் குறிக்கும்.

கொளத்தூர் முன்பு குளத்தூர் என வழங்கப்பட்டது. இவ்வூரில் உள்ள திருமூலஸ்தானமுடையார் கோயில் சோழர்காலக்கோயில் ஆகும். மும்முடி சோழகங்கன் கினையின் அகமுடையாள் மாந்தை என்ற பெண், விளக்கு ஒன்று வைத்துள்ளார் (பொ. ஆ. 1127) அகமுடையாள் - மனைவி என்ற பொருளுடன் குறிப்பிட்ட சாதியையும் குறிக்கும்.

விளக்கனாம் பூண்டியிலிருந்து பத்துக்கு மேற்பட்ட கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன. பல சிதைந்தும் பொறிந்தும் உள்ளன. ஒரு கல்வெட்டில் விஜயாதித்தன் பாணநாயகம் என்ற தொடர்வருவதால் கோயிலின் பெயர் விஜயாதித்தன் என்ற பெயரிலிருந்தே வந்தது எனலாம். திருமலை தேவஸ்தானம் வெளியிட்ட முதல் கல்வெட்டுத் தொகுதியிலும் இவனுடைய சாசனமுள்ளது. எனவே விஜயாலய சோழனுடன் இப்பெயரைத் தொடர்பு படுத்தக் கூடாது. குங்குலியக்கலியனார் என்ற அடியார் இவ்வூரில் வாழ்ந்துள்ளார். தருமியான் மடமுடையதிண்டீபரன் சேவகர் கோயிலுக்குத் தானம் புரிந்துள்ளார். இடங்கை மகாசேனை என்ற பெயர் ஒரு கல்வெட்டில் வருகிறது.

பொன்னேரி வட்டம் மேலூரில் 7 கல்வெட்டுகளைப் படியெடுத்தோம். இரண்டாம் இராஜாதிராஜன் கல்வெட்டே தொன்மை வாய்ந்தது என்பதால் பொ.ஆ. 1150க்கு முன்பு இக்கோயில் கட்டப்பட்டது எனலாம். மேலூர் முன்பு வல்லூர் என்றே வழங்கப்பட்டது. திருமணங்கீஸ்வரர் என இறைவன் வழங்கப்படுகிறார். பொ.ஆ. 16-ஆம் நூற்றாண்டில் திருமலைநாயக்கர் என்ற சிற்றரசர் அங்கு நிர்வாகம் செய்துள்ளார். இவருடைய பெயரும் ஒரு சாசனத்தில் உள்ளது. மதுரை திருமலை நாயக்கர் பொ.ஆ. 17-ஆம் நூற்றாண்டாகும். எனவே இருவரும் வெவ்வேறானவர் எனலாம்.

பள்ளிப்பட்டு வட்டம், வெளியகரம் என்ற ஊரில் சோமநாதஈஸ்வரர் கோயில் உள்ளது. இக்கோயிலில் வீரநரசிங்க யாதவராயன் என்ற சிற்றரசரின் சாசனம் உள்ளது.

பஞ்சவன் மாதேவிச்சேரியில் வாழ்ந்த வள்ளுவராயன் என்பவன் ஐம்பொன்சிலை ஒன்று செய்து வைத்ததைச் சாசனம் கூறுகிறது.

காக்கலூர் நடுகல் கல்வெட்டு, வள்ளுவ வீரன் ஒருவனைக் குறிப்பிடுகிறது. எனவே வள்ளுவர் பெயர் வைப்பது பரவலாக முன்பு இருந்துள்ளது எனலாம்.

செஞ்சிப்பனம்பாக்கம் என்ற ஊரில் ஜலகண்டீஸ்வரர் என்ற சிவன் கோயில் உள்ளது. இங்கிருக்கும் பதிமூன்று கல்வெட்டுகளில் தொன்மை வாய்ந்தது விக்கிரம சோழன் கல்வெட்டே என்பதால் கோயில் 1128-க்கு முற்பட்டது எனலாம். கோயில் ஜயமேதீஸ்வரர் என அழைக்கப்பட்டுள்ளது. வெண்பாக்கத்து கொற்றமங்கலமுடையான்கிழான் வடவாயில் செல்வன் அகமுடைய நங்கை 2 விளக்குகள் எரிக்கக் காசு தந்துள்ளாள். காடுவெட்டி மணிச்சரில் திருவன்செல்வன் விளக்கு வைக்க 2 ½ நற்பழங்காசு தந்துள்ளான்.

வீரநரசிங்கராயன் என்ற மன்னரும் கொற்றமங்கலம் ஜகத்தண்டநாயகன் வெள்ளபிள்ளைகளில் கூந்தலாழ்வானும் தனித்தனியே விளக்கு வைத்துள்ளனர்.

சுந்தரபாண்டியன் ஆட்சியின்போது வடுகுபாளை மகன் ஒரு விளக்கு வைத்துள்ளான். வடுகுபாளை - தெலுங்குச் சாணாரைக்குறிக்கும் போலும். பாளை என்ற சொல் தென்னை, பனை பாளையுடன் தொடர்புடையது. வடுகன் - தெலுங்கன்.

காஞ்சி ஏகாம்பரநாதயீஸ்வரமுடைய நாயனார் கோயிலில் பூக்கள் பறித்து மாலைகட்டும் நபர்களின் ஊதியத்திற்கு இங்கே வசூலிக்கப்படும் உவச்சர் பேரால் வந்த வரி, பறையர் பேரால் வந்த இனவரி, பறைத்தறிக் காசு ஆகியவை அப்போதிருத்தன.

கும்மிடிப்பூண்டி வட்டம் அருகத்துறைக் கோயிலில் உள்ள மடைப்பள்ளி கல்வெட்டு, கன்னிகைப் பேரூர் நாச்சியப்ப முதலியார் பாரியாள் வள்ளியம்மாள் பேரால் கட்டப்பட்டது. இவரும் துளுவ வேளாளர் மரபினர் ஆவார். (பாரியாள் - மனைவி)

சத்தியவேடு மதங்கீஸ்வரர் கோயில் கல்வெட்டு, பல்லவ மன்னன் அபராஜிதன் காலத்தில் கட்டப்பட்டது. காடுபட்டி பேரரையன் மனைவி நங்கை என்பவள் மதங்கப்பள்ளி மாதேவர் கோயிலில் விளக்கெரிக்க ஆடுகள் அளித்துள்ளாள். 'விடேல் விடுகு' என்ற முகத்தல் அளவு பயன்படுத்தப்பட்டது. இப்பெயரில் எடைக்கல் கண்டறியப்பட்டது.

இருளஞ்சேரியில் உள்ள காலிங்கநாதேஸ்வரர் கோயில் பொ.ஆ.13-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இருங்கனூர்க் கிழவன் தன் பிதாக்களுக்கும் உடன்பிறந்தார்களுக்கும் நலம் வேண்டி, கோயிலுக்கு நிலக்கொடை அளித்துள்ளான். சுவாமி பெயர் கலியஞ்சீஸ்வரமுடையார். மூன்றாம் இராசராசனுடைய 22-ஆவது ஆட்சியாண்டின்போது கலியஞ்சீஸ்வரமுடையார் கோயிலில் தன் கணவன் நலம் வேண்டி, சிந்தனையுடையாள் என்பவள் விளக்கொன்று வைத்துள்ளாள். சிந்தனை உடையாள் என்ற பெயரே புதுமையானது அன்றோ?

சயனக்கோலத்தில் உள்ள சுருட்டப்பள்ளிச் சிவன் கோயிலுக்கு இரண்டாம் ஹரிஹரராயன் காலத்தில் 400 பணம் மதிப்புள்ள நிலம் அளிக்கப்பட்டது.

ஊத்துக்கோட்டைச் சுந்தரராஜ பெருமாள் கோயிலில் தூண்கள் அமைத்தவர்களின் பெயர்களில் கல்வெட்டுகள் உள்ளன.

குத்தம்பாக்கத்தில் திரிபுரசுந்தரி சமேத திரிபுராந்தகர் கோயிலும் துறையாத்தம்மன் என இன்றழைக்கப்படும் திருவையாறுடையார் கோயிலும் உள்ளன. இரண்டிலும் மொத்தம் 20 கல்வெட்டுகள் உள்ளன. இங்குள்ள கோயில்களின் கட்டக்கலை, சிற்பங்கள் மற்றும் கல்வெட்டுகள் தொடர்பாக இந்நூலாசிரியர் கல்வெட்டுக் காலாண்டிதழில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இருபது கல்வெட்டுகளும் திருவையாறுடையாரையே குறிப்பிட்டுள்ளன. திரிபுராந்தகர் கோயிலில் கல்வெட்டுகள் இருப்பினும் அவைகள் இக்கோயிலைக் குறிக்கவில்லை. துறையாத்தம்மன் கோயில் பொ.ஆ. 1191க்கு முன் கட்டப்பட்ட திருவையாறுடையார் கோயிலாகும். பையூர் நாடாள்வான், குத்தம்பாக்கம் கோயிலுக்கு விளக்குவைக்க ஏற்பாடு செய்துள்ளான்.

நீலகங்ரையன் பெயரில் பலர் இருந்துள்ளனர். அவர்களில் சிலர் இக்கோயிலுக்குக் கொடையளித்துள்ளனர். திருவையாறு விளாகம் என்ற பெயரிலேயே இவ்வூரில் நிலம் இருந்தது. பூந்தமல்லியிலும் இக்கோயிலுக்கு நிலம் இருந்தது.

திருமழிசையில் ஒத்தாண்டீஸ்வரர் என்ற சிவன் கோயில் உள்ளது. இதில் சோழர் கால சாசனம் ஒன்று கோயில் பெயரை அகத்தீஸ்வரமுடையார் என்று கூற, இரண்டாம் ஹரிஹரன் கல்வெட்டு ஒத்தாண்டீஸ்வரர் என்ற சிவன் கோயிலைச் சுட்டுகிறது. திருமழிசை எம்பெருமாள் கோயிலில் 20-க்கு மேற்பட்ட சாசனங்கள் உள்ளன. நீலகங்கரையன், கோப்பெருஞ்சிங்கன்

போன்றோரின் சாசனங்கள் உள்ளன. சோழர் சாசனங்கள் மிகுதியாகும். திருமழிசை எம்பெருமானுக்கு விசயகண்டகோபாலன் ஆட்சியின்போது பஞ்சநதிவாணன்திருவண்ணாமலைப் பெருமாள் என்ற இலிங்கேஸ்வரன், திருவிடையாட்டமாக நிலம் வழங்கியுள்ளான். இரண்டாம் ஹரிஹரராயன் காலத்தில் வென்று மாலையிட்டான் என்பவன் நிலக்கொடை தந்துள்ளான். பல தனிநபர்கள் கொடைகளை அளித்துள்ளனர். திருமுல்லைவாயிலில் 30க்கு மேற்பட்ட சாசனங்களை ஒன்றிய அரசு, மாநிலத் தொல்லியல் துறைகள் படியெடுத்துள்ளன. இறைவன் ஒன்றிய காசு பெயர் மாசிலாமணியீஸ்வரர் ஆகும். அம்பாள் பெயர் கொடியிடை நாச்சியார் ஆகும். தொன்மையான கல்வெட்டுகள் அதாவது கோபார்த்திவேந்திரவர்மன், முதலாம் இராசராசன் போன்றோரின் சாசனங்கள் தனித்தனிக் கற்களில் உள்ளன.

மூன்றாம் குலோத்துங்கனுடைய பொ. ஆ.1208-ஆம்ஆண்டு சாசனம், பதிபாதமூலபா பட்டுடைய பஞ்சாசாரியர், தேவகன்மி, ஸ்ரீமாஹேஸ்வரர், கண்காணி ஸ்ரீகாரியம் செய்வோர் ஆகியோர் பொறுப்பில் நிருவாகம் இருந்துள்ளதைக் கூறுகிறது. பொத்தப்பிச்சோழன் காலத்தில் திருமுல்லைவாயிலில் 10 வேலி நிலத்திற்கு மேல் உள்ளவர்களிடமிருந்தே வரி வசூலிக்க வேண்டும் என்றும் குற்றப்பட்டி, ஸ்ரீகாரியப்பேறு போன்ற வரிகளைக் கோயில் திருப்பணிக்கு வழங்க வேண்டும் என்றும் மன்னன் ஆணையிட்டுள்ளான். திருவோத்தூரில் உள்ள இவனுடைய கல்வெட்டு வரிக்குறைப்பையே கூறுகிறது. பொ.ஆ. 1388-இல் கோழிப்பதாகைச் சதுர்வேதிமங்கலச் சபை, கோயிலுக்குரிய நிலத்தை 60 புள்ளிமாடைக்கு விற்று, பாடிவேட்டை விழாவிற்குப் பயன்படுத்திக் கொண்டது. தற்போதும் இவ்வூர் உள்ளது.

சுந்தரபாண்டியன் ஆட்சியின்போது கோயிலில் திருவமுது படைக்க 148 காசுகளை மன்னன் அளித்துள்ளான். திருமஞ்சனம் கொண்டு வருபவருக்குப் புழல் கோட்டநாட்டாரும் ஈக்காடு கோட்டநாட்டாரும் சில ஊர்களைக் கொடையாக அளித்துள்ளனர். பொ.ஆ. 1251-இல் கூடிய சாசனம் சித்திரை விழாவைக் குறிப்பிடுகிறது.

முதலாம் இராசேந்திரன் காலத்தில் (பொ.ஆ. 1016) ஸ்ரீபாசுபததேவரான முல்லை அழகரையும் அஸ்திரதேவரையும் தனிநபர்கள் தாபித்துள்ளார்கள்.

பொ.ஆ. 1727-இல் கொடியிடைநாயகியாகிய அம்மன் கோயில் திருப்பணி நடந்துள்ளது. கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், திருமாளிகை ஆகியவைக் கட்டி முடிக்கப்பட்ட விவரம் ஒரு கல்வெட்டில் உள்ளது.

புழல்கோட்டத்துத் தன்கூற்று தேவதானமாகிய கலிகேசரி சதுர்வேதிமங்கலம் என்றும் புழல் கோட்டத்து வெள்ளனூர் நாட்டு தேவதானமாகிய திருமுல்லைவாயில் என்றும் ஊர் கூறப்பட்டுள்ளது.

செம்பியன் மாதேவியார் 9300 குழி நிலம் 85 கழஞ்சுக்கு வாங்கி இறையிழிச்சிக் கோயிலுக்கு அளித்துள்ளார். வில்லிவாக்கத்தில் உள்ள நிலங்கள் கோயிலுக்கு அளித்துள்ளார். 1021 கலம் நெல் பெற ஏற்பாடு செய்யப்பட்டது. பூரத்திருவிழா பொ.ஆ. 1452 -ஆம் ஆண்டு சாசனத்தில் இடம் பெறுகிறது.

பாடல் கல்வெட்டு

பிற்காலச் சோழர் காலத்தில் நீலகங்கரையர் என்ற பெயரில் சிற்றரசு வலிமை பெற்றது. பேரரசு நலிந்தபோது நீலகங்கரையர் போன்றோர் எழுச்சி பெற்றனர். கோயில் குருக்களுக்கு வரி விலக்குகளும் அளித்துள்ளனர். திருமழிசையில் ஒரு கல்வெட்டு, பாடல் சாசனமாக அமைந்துள்ளது.

பாடல் வருமாறு

வேந்தர்க்கு வாய்க்குமோ மேலாய மாலைவழி
போந்துமடங் கென்று புலவனுக்கு வாய்த்தபுண்யம்
ஊராள விட்டா னுயர்நீல கங்கனேழ்
பாராளும் பஞ்சன் பதம்

பஞ்சன் என்ற சொல் பஞ்சநதிவாணன் என்ற அடைமொழியின் முதல் பகுதியாகும். அரசனையும் புலவனையும் ஒப்பிடும் இவ்வெண்பா இயற்றிய புலவர் பெயர் தெரியவில்லை. எனினும் 13-ஆம் நூற்றாண்டு என்பதில் ஐயமில்லை. நீலகங்கரையனே தன்னைப் படர்க்கையில் வைத்துப் பாடியிருக்கலாம்.

பல்லவர் காலம் தொடங்கி ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் வரை உள்ள இக்கல்வெட்டுகள் கோயில் வரலாறு மட்டுமின்றிப் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களை அறியவும் துணைபுரிகின்றன.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தமிழகத்தில் உள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்து வல்லுநர்கள் மூலம் படிக்கப்பட்டுப் பல நூல்களைப் பதிப்பித்துள்ளது. அவ்வகையில் திருவள்ளூர் மாவட்டக் கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதியாக இந்நூல் வெளிவருகிறது.

இப்பணியைச் செம்மையாக நடைபெற வழிநடத்தி வரும் துறையின் ஆணையர் திரு. த. உதயசந்திரன் இ.ஆ.ப. அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இணை இயக்குநர் திரு. இரா. சிவானந்தம் அவர்களுக்கும் பதிப்புப்பணியில் தொடர்புடைய அலுவலர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்.
ச. கிருஷ்ணமூர்த்தி

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர்எண் : 252/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 44
வட்டம்	: அம்பத்தூர்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1113
ஊர்	: திருவேற்காடு	இ.க. ஆண்டறிக்கை	: 392/1958-59
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: இல்லை
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 1, 1.அ, 1.ஆ, 1.இ
அரசன்	: முதலாம் குலோத்துங்கன்s		

இடம் : வேதபுரீஸ்வரர் கோயில் கருவறை வடக்கு அதிட்டானம் - பட்டி.

குறிப்புரை : இக்கல்வெட்டு மூன்று மைப்பிரதிகளாக இருப்பினும் ஒரே கல்வெட்டாகும். முதலாம் குலோத்துங்கனுடைய 44-ஆம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்ட இக்கல்வெட்டின் மெய்க்கீர்த்தி முதலில் இடம் பெறுகிறது. பாண்டிய குலாசனி வளநாட்டு ஆத்ரயன் கங்கைகொண்ட சோழ விச்சாதிர பல்லவரையன் என்பவன் நிலங்களை விலைக்கு வாங்கி மூன்றாகப் பிரித்து 2/3 பாகம் மடப்புற நிலமாக வழங்க ஊரவை இறையிலியாக்கியுள்ளது. இதற்காகத் தானம் தந்தவன் 16 காசுகளை அளித்துள்ளான். தற்போதுள்ள நெய்தவாயில், இராஜராஜநல்லூர் என்றும் வழங்கப்பட்டுள்ளது. போரூர் நாட்டு ஆண்டியார் ஞாயிறுகிழவன் ஆடவல்லான் திருவிசயாலயமுடையான், சபையில் உள்ளவர் வேண்ட, இச்சாசனத்தை எழுதியுள்ளான். சபை உறுப்பினர்களின் பெயர்கள் கல்வெட்டில் உள்ளன.

இக்கல்வெட்டில் டண்ணகரம் வர வேண்டிய இடங்களிலும் றன்னகரம் வரவேண்டிய இடங்களிலும் தந்நகரமே வந்துள்ளது. ற்ற என்பது த்த என வந்துள்ளது. இவ்விரண்டு பிழைகள், சிற்பியின் தவறால் வந்தவை எனலாம். ஸ்ரீ என்றும் சிரீ என்றும் வந்துள்ளது. கல்வெட்டின் இறுதிப் பகுதி சிதைந்துள்ளது. நில எல்லை விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ஒரு விளக்கு வைக்கவும் சபை இசைந்துள்ளது.

Summary : Tiruvēṟkādu Vēdapurīśvarar temple central shrine around the walls from north to South. Chōḻa King Kulōttuṅga I. Regnal year 44. Commences with the prasasti 'Pugaḻ māduviḷaṅga' etc.
Records a gift of land by purchase from the ūrār of Neydavāyil alias Rājarājanallūr in Vēṟkāḍnāḍu as maḍappuram by Atraian Gaṅgai konḍān Sōḻa Vichchādira Pallavaraiyaṉ of Iṟaiyūr in Ārkkāṭṭu Kūṟṟam in Pāṇḍi Kulāsani Vaḷanāḍu for Tiruvēṟkāḍu uḍaiya Mahādēva. The land also made tax free by the ūrār inḻieu of 16 kāsu received by them from the donor.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ புகழ் மாது விளங்க
2. ஜயமாது விரும்ப நிலமகள் நில -
3. வ மலர்மகள் புணர உரிமையில்
4. சிறந்தன மணிமுடி சூடி வில்லவர் குலைத
5. ர மீநவர் நிலைகெட ஏனை மன்னவ-
6. ரிரியலுற்றி ழிதர திக்கனைத்துந்
7. தநி சக்கர நடாத்தி வீரஸிஹாஸ–
8. னத்து புவன முழுதுடையாளொடும் வீற்றி-
9. ருந்தருளிய கோவிராஜகெஸரி பர்மரான
10. திரிபுவனச் சக்கரவத்திகள் ஸிரிகுலோத்துங்க சோழ
11. ஹெவற்கு யாண்டு சயசவது ஜயங்கொண்–
12. டசோழ மண்டலத்துக் குலோத்துங்-
13. க சோழ வளநாட்டு வேற்கா-
14. டு நாட்டு நெய்தல் வாயில் (இ)
15. ராஜராஜ நல்லூர் ஊர்க்குச் சமைந்த-
16. னை ஆந ஆடவலாந் வலிதிர பெருமாநேம
17. ந் கண்ணந் இரவி உடைய நம்பியே நு ம-
18. ண்நவுடையாந் அம்பலக் கூத்தநேந்
19. சீ கிழாந் தாழி ஆதித்தநேநும் சேவிட-

20. ற்றி சோம மண்டையேந் சிறுபோச்சி-

21. மநேநும் உள்ளிட்ட இவ்வனைவோ-

22. ம் பாண்டி குலாசநி வளநாட்டு

23. இக் கூற்றத்து இண்கயூருனா -

24. ன் ஆத்ரையன் கங்கை கொ -

25. ண்ட சோழவிச்சாதிரப் பல்லவரைய-

26. ன் கழுவல ஆளும் தாமோதரன் விடவமு-

27. டைய மூந்று கூறிட்டு இரு கூறும் இத . .

28. எட்டாறும் ஆக குழி ஆயிரமும் கீழ்பாற்க்கெல்லை கீழ்நெல ம-

29. ங்க சோழ வளநாட்டு வேற்காடு நாட்டு நெய்தல் வாயிலாந ராஜராஜ நல்லூர் ஊர்க்குச் சமைந்த வெட்சிகிழான் தாழி ஆதித்தஜெவநும் மாக் கண்ணந் இரவி உடைய நம்பியும் மாக்கண்ண-

30. சோம மண்டையும் உள்ளிட்டவரோம் எங்களூர்க் கீழ்க்கழனியில் நாகந்தையேத்தம் முந்[து]மடைச் செறுவும் மணிப்புலத்து மேல் கூறும் நாகந்தை யேத்தத்தில் மேற்கடைந்த கி

31. [ழ]க்கு சேநவரப்புக்குத் தெற்க்கும் மேல்பாற்க்கெல்லையும் மடப்புறத்துக் கிணறுக்கு மேற்க்குக் கிழக்கும் தெந்பாற்கெல்லை தாமோதர வரம்புக்கு வடக்கும் மணிப்புலத்துக்கு மேலாம் . . . .

32. . . . இவ்வனைவோம் இந்த தேவற்கு ஒரு நந்தாவிளக்கு எரிக்கக் கடவோமாக ஸம்மதித்தோம் இவ்வனைவோம்.

33. இநா . . . . . கொண்டோம்.

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர்எண் : 253/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: அம்பத்தூர்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 12-ஆம் நூற்.
ஊர்	: திருவேற்காடு	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 2
அரசன்	: முதலாம் குலோத்துங்கன்		
இடம்	: வேதபுரீஸ்வரர் கோயில் கருவறை வடக்குச் சுவர்.		

குறிப்புரை : இக்கல்வெட்டின் தொடக்கப் பகுதி இல்லாததால் அரசன் பெயர் ஆட்சியாண்டு அல்லது சக ஆண்டு அறிய முடியவில்லை. ஊர்க் கல்வெட்டு எண் 1-இல் இடம்பெறும் சிவப்பிராமணன் மாக்கண்ணன் போன்றோர் இதிலும் வருவதால் முதலாம் குலோத்துங்கன் காலமாக இது இருக்கலாம் என்று கருதுகிறேன். மடப்புறத்தார் உண்பதற்காக 3 காசில் நிலம் விலைக்கு வாங்கி வழங்கப்பட்டுள்ளது. செம்பியன் சேகரன் என்பவன் ஆவணம் எழுதியவன் ஆவான். சபை உறுப்பினர்களின் ஒப்பங்களைக் காண்கிறோம்.

Summary : On the north wall of the central shrine in the same temple. Sabha members purchased lands as Maḍappuṟa land worth was 3 kāsu. Sempiyan Jegan wrote this document. Sabha exempted taxfree for this land.

கல்வெட்டு :

1. ராதுக்கும் இட்ட பொந்நும் விலைக் காண 'ந' காசு
2. மாறுங் குடிநீங்கா மடப்புற முண்பதா -
3. க முற்சொல்லப்பட்ட மாக்கண்ணன் ஆடவல்லா -
4. ந் வலிநிதிப் பெருமாநேனும் மாக்கண்ந -
5. ன் இவ்வூருடைய நம்பியேனும்
6. மாக்கண்ணந் உடையாந் அம்பலக் கூத் -
7. தநேனும் வெட்சி கிழாந் தாழி ஆதி-
8. த்தநேனும் செவிடற்றிவான் ஒற்றி கொ-

9. ண்ட பாண்டியமாந் குஞ்சரனும் நன்றாக

10. நமநேநும் உள்ளிட்ட இவ்வனைவோம்

11. இந்நிலமுன் சுட்டிய நாங்களும் எங்களுடைய-

12. [வற்]கத்தாரும் சந்திராதித்தவற் விரோதமின்றி-

13. யே உடையார் திருவேற்காடுடையார் மஹா-

14. தேவற்க்கு இறையிழிச்சி இறையிலியாக நிலம்

15. விற்றுக் குடுத்தோம் இவ்வனைவோம் இன்நாட்டு

16. நிலமு கூறி விலை உள்ளிட்ட அந . . . .

17. . . (நன்றாக) திருவாணை மங்கை இடைக் குமரியி-

18. டைப் பட்டான் பட்ட பாவம் அனுபவிப்போமா . .

19. ஒரு காலாவது இருகாலாவது முக்காலாவ -

20. தும் முற்சொல்லப்பட்ட இவ்வனைவரோம் இவ்வாணை இ-

21. வர்கள் வேண்ட எழுதிநேன் செம்பியந் சேகரநும் நா . . . சந்திராதித்தவரை

22. க்கும் சிவப்பிராமணந் கௌவசியந் நீறணிந்தான் பட்டநேன்

23. எழுத்து இப்படிக்கு இவ்வூர் இராய பட்டன் எழுத்து இப்படி கு -

24. டுத்தோம் மாக்கண்ணன் ஆடவல்லாந் வலிநிதி பெருமானெழுத்து சே

25. .. விடற்றி . . . கொம்மண்டதேவன் தாழி எழுத்து சிறுபோசந் சிங்களாந்தகன் வே -

26. ற்காடுடையாரைப் பூசிக்குமாக்காளபட்டந் எழுத்து இப்படிக்கு

27. . . ம் பாலம்பில் எழுத்து இப்படிக்கு செம்பரம்பாக்கம்மாந இரவி ஆரவனெழுத்து

28. இப்படிக்கு அனந்தகாளிபட்டன் இது இக்குடிக்கு சிவப்பிராமண.

29. பட்டந் எழுத்து

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர்எண் : 254/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: அம்பத்தூர்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 12-ஆம் நூற்.
ஊர்	: திருவேற்காடு	இ.க. ஆண்டறிக்கை	: 390/1958-59
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 3
அரசன்	: முதலாம் குலோத்துங்கன்?		
இடம்	: வேதபுரீஸ்வரர் கோயில் கருவறை வடக்குச் சுவர்.		

குறிப்புரை : 'கல்வெட்டின் தொடக்கப் பகுதி இல்லாததால் அரசன் பெயர், ஆட்சியாண்டு, சக ஆண்டு போன்றவை அறிய முடியவில்லை. எனினும் கல்வெட்டு வாசக அடிப்படையில் பிற்காலச் சோழர் காலம் எனலாம்.

திருவேற்காடான மும்முடி சோழ நல்லூர்க்குச் சமைந்த வேளான் சிங்கூருடையான், ஆதிச்சன் சென்னிக்கி விச்சாதிரன், நந்திமான், அம்பலமுடைய தேவன், மூலங்காத்த பரந்தேவன், மலகந்தை கம்பசாமணன் ஆகியோர் திருவேற்காட்டின் ஆற்றுக்குக் கீழ்க்கரையில் திருச்சிற்றம்பலநல்லூரில் 250 குழி நிலம் விற்க முடிவு செய்தனர். பாணபுரத்து வாணியன் மங்கலங்கிழான் விலைக்கு வாங்கினான். மங்கலங்கிழான் தூதுவன் கொம்மையன் எனவும் அழைக்கப்பட்டுள்ளான். சாசனம் எழுதியவன் பேறூர் நாட்டு விசயாலயன் ஆவான். பேறூர் இன்றுள்ள போரூர் ஆகும்.

Summary : On the north wall of the central shrine in the Vēdapurīśvarar temple of Tiruvēṟkāḍu. King-Kulōttuṅga I.?

Records a gift of land in Tiruchchiṟṟambalanallūr on the east bank of the river in Tiruvēṟkādu by the donor Tūduvan Kommaiyan for a Sandi lamb to God Tiruvēṟkāḍu Uḍaiyār. The land was made taxfree by ūrār of Tiruvēṟkāḍu.

கல்வெட்டு :

1. ஜெயங்கொண்ட சோழமண்டலத்துக் குலோத்துங்க சோழ வளநா[ட்டு]
2. வேற்காடு னாட்டு வேற்காடான மும்முடி சோழநல்லூர்க்குச் சமை-
3. ந்து தேவன் வேளான் சிங்கூருடையான் ஆதித்தன் சென்னிக்கி விச்சாதிர-

4. னும் நந்திமான் பறந்தேவனும் மலகந்தை கம்பன் சாமனனும் . . .
5. ண்டாரோம் எங்கள் ஊர் ஆற்றுக்குக் கீழ் கரையில் திருச்சிற்றம்பல-
6. நல்லூரில் வரப்பட்ட நிலம் குழியிருனூற்றஞ்[ம்]பதும் இறையிழிச்சிச் சந்திராதித்த வரை
7. தேவதானமாக உடையார் திருவேற்காடுடையாற்க்கு ஸந்தி ஒன்றுக்கு ஸந்தி வி-
8. ளக்கு தடியொன்றினால் குழியிருனூறஞ் [ம்]பதும் இதற்குக் கீழ்பாற்கெல்-
9. லை கணபதி குண்டிலுக்கு மேற்க்கு வடபாற்க்கெல்லை மஸநத (வாய்க்கால்) ஆக னாற்பாற்கெல்லை-
10. க்கும் மேல்பாற்க்கெல்லைய் வாய்க்காலுக்கு[க்]கிழக்கும் தென்பாற்க் கெல்லை பாடிக்-
11. காப்பான் பட்டியிக்கு வடக்கும் இன்னான்கெல்லைக் குள்ளும் குழி இருனூற்றைம்பதும்
12. கீழ்னோக்கிய கிணறும் மேனோக்கிய மரமும் ஆறனக்கு பாய்வதாகவும் இது சந்திரா-
13. தித்தவரைச் சந்தி விளக்கெரிக்கச் செல்வதாகவும் மாங்காடு னாட்டு உய்யக்கொண்டான்
14. சோழபுரத்துப் பிறிந்தெறிய பனாக நெதி பாணபுரத்து வாணியன் மங்கல-
15. ங்கிழான் தூதுவன் கொம்மையன் இன்னிலத்திற்குப் பெறுவிலைக் காணம்
16. கிழிகையில் செல்லத் தந்து விற்கக் கொண்டான் முற்ச்சொல்லப்பட்ட தேவன்
17. வேளான் ஸ்ரீகுருகுருமநந்தியான சென்னிக்கு
18. . . . விச்சாதிரநும் நந்திமான் [அம்பல]முடைய தேவனும் மூலங்காத்த இவ்வ-
19. னைவோம் ஒரு காலாவது இருகாலாவதும் முக்காலாவதும் சந்திராதித்தவற்கு திருவேற்காடு-
20. டையாற்கு இந்த ஸந்தி விளக்குச் செல்வதாக வாணியந் தூதுவன் கொம்மையனுக்கு வி-

21. ற்றுக் குடுத்தோம் இவ்வனைவோம் இன்னிலஞ் சுட்டிய நீர் விலை சில்லிறை உள்ளிட்ட-

22. விரோதம் நினைப்பன் விரையக் கலி திருவானையே கெங்கையிடைக் குமரியிடைச்-

23. செய்தார் செய்தப் பயன னுபவிப்பாராக இப்படி ஸம்மதித்து இவ்வாணியந் தூதுவன்-

24. கொம்மையனுக்கு விற்றுக் குடுத்தோம் மும்முடி சோழநல்லூர்த் தேவன் வேளான் சிங்கூர் பன்ம-

25. ரும் நந்திமான் சென்னிக்கி விச்சாதிரனும் மாறன் தேவனும் மூலந்தை கம்பன் சாணனும்

26. இவர்கள் வேண்ட எழுதிநேன் பேறூர் நாட்டு ஆன ந[ல்]லூர் ஞாய[யி]று கிழவன் ஆடவல்லாந் திருவிச-

27. யாலமுடையநேன் இவை என் எழுத்து இப்படி[கி] இவை தேவன் வேளான் சீசிகு கூருடையான்-

28. எழுத்து இப்படிக்கி இவை சென்னிக்கி விச்சாதிரன் எழுத்து இப்படிக்கி இவை மாறன் தேவன்-

29. . . . . .(கன) விஜையாண்டிக்கு ஞாயிறு கிழான் திருவரங்கமுடையான் எழுத்து இப்படிக்கிவை மூலந்தை-

30. கம்பந் சாணன் எழுத்து இப்படிக்கி எழுத்து இவ்வூர் தவச்சந் விச்சாதிரந் திருவேங்கடத்தாந் ஒப்பு இப்படிக்கிவை -

31. ஸ்ரீ வசுகுடையாந் ஸ்ரீ வின்னாதந் வசூஉணன் எழுத்து இவ்வூர் பாரசிவன் ஒப்பு இக்கோயிலில் ஸிவவசூஉணன்

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர்எண் : 255/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: அம்பத்தூர்	வரலாற்று ஆண்டு	: 12-ஆம் நூற்
ஊர்	: திருவேற்காடு	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 4-1, 4-2
அரசன்	: முதலாம் குலோத்துங்கன்?		
இடம்	: வேதபுரீஸ்வரர் கோயில் கருவறை வடக்குச் சுவர்.		

குறிப்புரை : முதலாம் குலோத்துங்கனுடைய கல்வெட்டாகத் தோன்றுகிறது. சிதைந்த நிலையில் மெய்க்கீர்த்தியின் முதல் வரிக்குப்பின் எல்லைகள் கூறப்பட்டுள்ளன. மாங்காடு நாட்டு உய்யக் கொண்டான் சோழபுரத்தில் இருக்கும் வெள்ளாளன் கேசவன் ஆன அத்தியூர் செல்வன் நிலம் விலைக்கு வாங்கி, நந்தா விளக்கெரிக்க விளக்குப்பட்டியாக நிலம் விட்டுள்ளான். கோயில் பட்டர்கள் ஆவணத்தில் ஒப்பமிட்டுள்ளார்கள். இக்கல்வெட்டு மூன்று துண்டுகளாகக் கல்வெட்டு படியெடுக்கப்பட்டாலும் ஒரே கல்வெட்டு எனலாம். செல்வன் என்ற சொல் செல்வந் என வந்துள்ளது.

Summary : On the north wall of the central shrine in the same temple. Chōḻa - Kulōttuṅga I. 12th century c.c.

Records a gift of land in Vēṟkādu nāḍu by purchase by Kēsavaṉ Attiyūr selvaṉ a Veḷḷāla resident of Uyyakkoṅḍān Sōlapuram in Māṅgādu nāḍu for a perpetual lamp to the God Tiruvēṟkāḍu Uḍaiyār. The ūrār (sabha) made the lands tax free in lieu of a lamp some of money received from the donor.

கல்வெட்டு :

4-1

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. புகழ்மாது வி-
3. ளங்க (ஜயமாது) . . . . . .
4. க்கு வடக்கும் ம . .

5. ப் புலிதலைக்கு மேல்
6. வரப்புக்குக் கிழக்குமி-
7. ந் நாந்கெல்லைக்கு
8. நடுவுபட்ட நிலமும் . .
9. கந்தை ஏத்தத்து முருமா . .
10. யிற்றுரவு கிணறுட்பட
11. மேநோக்கிய மரமுங்
12. கீணோக்கிய கிணறு மிறை-
13. யிழிச்சி இறையிலி தேவதான-
14. மாகத் திருவேற்காடுடையார்-
15. க்குத் திருநந்தா விளக்குப் (பட்டி)-
16. யாக விட்ட நிலத்துக்கு ஏரி(நீர்ப்)

4-2

1. பாயப் பெறுவதா-
2. கவும் இந்நிலத்துக்(கு)
3. . . .
4. ச் சநூ̮ாதித்தவரை தி-
5. ரு நந்தா விளக்கு செல்வ-
6. தாக மாங்காடு நாட்டு உ-
7. ய்யக் கொண்டாந் சோழ
8. புரத்து இருக்கும் வெள்ளா -
9. ளந் கேசுவந் அத்தியூர் செ -
10. சல்வந் இந்நிலத்துக்கு பெ -

11. று விலை கொண்ட கிழிகை -

12. யிற் செல்வவிற்றுக் கொண்டக

13. . . .

14. கல சொல்லப்பட்ட விச்சாதிரக் -

15. கிழாந் தாழி ஆதிச்ச தேவ -

16. ந் மாக்கண்ணந் இரவி வி -

17. டைய நம்பியுமாக் கண்ண(ற்)

18. உடையாந் நம்பியாந்-

19. கூத்தந் செவிட்டு வாந்

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர்எண் : 256/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 17 ஆண்டு
வட்டம்	: அம்பத்தூர்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1056
ஊர்	: திருவேற்காடு	இ.க. ஆண்டறிக்கை	: 386/1958-59
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 5
அரசன்	: இரண்டாம் இராசேந்திரன்		

இடம் : வேதபுரீஸ்வரர் கோயில் கருவறை அதிட்டானம் வடக்கு, மேற்கு ஜகதி.

குறிப்புரை : இரண்டாம் இராசேந்திரனுடைய மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் இக்கல்வெட்டு விரிவாக எழுதப்பட்டுள்ளது. கோயிலுக்கு உரிய வருவாய், செலவு, கணக்கு அதிகாரிகளால் கேட்டறியப்பட்டது. இரண்டு இடங்களில் மொத்தம் 29,300 குழி நிலங்களில் இருந்து 1,357 கலம் நெல் நிவந்தம் ஏற்படுத்தப்பட்டது. கோயில் விழாக்களுக்கான நிலங்களின் அளவுகள், வருவாய்கள் கூறப்பட்டுள்ளன. நந்நவனப் பராமரிப்பு, விளக்கெரிப்பதற்காக விளக்குப்பட்டியாக விடப்பட்ட நில அளவு, வருவாய், திருமேனிகளுக்குரிய அமுதுபடிக்கான நில அளவு, வருவாய் ஆகியவை ஆராயப்பட்டுக் கூடுதல் வருவாய்க்கு ஏற்பாடு செய்யப்பட்டு, புதிய நிவந்தம் ஏற்படுத்தப்பட்டது. விளக்குகள் மூவிதமாக அதாவது நந்தா விளக்கு, ஸ்ரீபலி விளக்கு, தூப விளக்குகள் கோயிலில் ஏற்றப்பட்டுள்ளன. கோயிலில் இருந்த உற்சவ திருமேனிகளின் விவரமும் சிவப்பிராமணர்களின் பெயர்களும் இக்கல்வெட்டில் காண்கிறோம். சகித திருமேனி - தேவியுடன் கூடிய சிவன் உற்சவர் சிலை எனலாம். திருவொற்றியூர் உடையார் கோயிலில் திருக்காவனம் ஜனவார் கற்பகத்தில் இருந்து அதிகாரிகள் கோயில் காரியம் தொடர்பாக ஆய்ந்து முடிவெடுத்துள்ளனர்.

Summary : On the north, west, south base of the central shrine in the Vēdapurīśvarar temple at Tiruvēṟkāḍu. Chōḻa King Rājēndra chōḻa II. Regnal year 17.

Commences with the prasasti 'Iraṭṭapādi ēḻarai' etc., Records that while adhikārigal Sōḻamūvēnda Vēḻār was examining the accounts of the temple from his camp in the Tirukkāvaṉam at Tiruvoṟṟiyūr, he specified the details of various items of expenditure (nivandam) out of the produces from lands in Tiruchchiṟṟambalanallur and Mummudi Chōḻanallūr.

கல்வெட்டு :

1. இரட்டபாடி ஏழரை இலக்கமுங் கொண்டு கொல்லாபுரத்து ஜயஸ்தம்ப நாட்டிப் பேராற்றங்கரைக்கொப்பத்து ஆமவ மல்லனை அஞ்சுவித்து அ(று)ளி ஆனையுங் குதிரையும் பெண்-

2. . . . . லிங்கமக் கொண்டு விஜய அபிஷேகம் பண்ணி வீரசிங்காஸனத்து வீற்றிருந்தருளின கோப்பரகேசரி பந்மரான உடையார் வீரராஜேந்திர சோழ தேவற்கு யாண்டு மூன்றாவது நாள் ஐயாயிரத்து . . .

3. (அதி)காரிகள் சோழ மூவேந்தவேளார் உடையார் திருவொற்றியூருடையார் கோயிலில் திருக்காவணம் ஜனவார கற்பகத்தில் கோயிற்கார்யா விருந்த சயங்கொண்ட சோழமண்டலத்து (புலியூர்கோட்ட)-

4. த்து வேற்காடு நாட்டு மும்முடி சோழநல்லூர் திருவேற்காடுடைய ஊஹாதேவர் கணக்கு கேட்டு இத்தேவர் தேவதானமாய் இவ்வூரில் பிறந்த திருச்சிற்றம்பலநல்லூர் கீழ்ப்பாற்கெல்லை

5. தும்பூர் நாட்டு ராஜசுந்தரிச் சருப்பேதிமங்கலத்தெல்லைக்கு மேற்கும் தென்பாற்கெல்லையில் பாவூர்க்கு வடக்கும் வடபாற்கெல்லை . . . . மணிமரத்து எல்லைக்குத் தெற்கும் நடுவுபட்ட

6. ஆக குழி பதின் அய்யாயிரத்து இரு நூற்று ஐம்பத்தெட்டே ஆறுமாவரை அரைக்காணிக் கீழ்முக்காலே அரைமா வரைக்காணிய . . . . வ மாப்பு குழி பதின் மூவாயிரத்து நானூற்று முன் . . . .

7. மந் அரைக்காணிக் கீழ் ஒரு மா முக்காணி அரைக்காணியும் ஆகப் பரப்புக் குழி இருபத்தெண்ணாயிரத்து முன்னூறு . . காணி மாக்காணி அரைக்காணி முந்திரிகை -

8. க் கீழ் முக்காலே ஒரு மா முக்காணி அரைக்காணியினால் நெல்லு ஆயிரக் கலமும் மும்முடி சோழநல்லூரில் முன்பு இத்-

9. தேவற்கு தேவதானமாய் அனுபவித்து வருகிற தூணி நிலம் பொன்படு குட்டமும் கழனிப்புலமும் பேரேத்தமும் ஆக ஊர் -

10. ப் பொத்தகப்படி நீர்நிலங் குழி இரண்டாயிரத்து முன்னூற்று எண்பத்து ஆறரையே நாலு மாக்காணியரைக் காணியும் மே -

11. ல்கரை மலையப்பாடி ஏத்தம் இரண்டும் தனி ஏத்தம் இரண்டு விரலாஞியன் ஏத்தமும் ஆக ஏத்தம் ஐஞ்சினால் பொத்தகப்ப -

12. டி குழி ஐய்யாயிரத்து மூன்றிநாலும் இப்பாக . . . கமெட்டக் கெல்லை விளக்குப்பட்டி குழி ஆயிரமும் தளிக்கொல்லையும் க-

13. மேலங்கும் திருச்சுற்றாலையும் திருநந்தவானமு மனைப்படிக்கும் ஆயிரத்து அறு நூற்று ஐம்ப[தி]ன் அரைக்காலும் ஆக முட்டந்தே . . .

14. துணம் கொல்லை உட்படக் கு[ழி] பதினாயிரத்து நாற்பதே கோலினால் தரம்படி நெல்லு முன்னூற்றைம்பத்தேழு கலநே தூ -

15. ணி ஆறு நாழியும் ஆகத் தூணி நிலங்களுட்பட நெல்லு ஆயிரத்து முன்னூற்றைம்பத்தேழு முக்கலநே குறுணி அறுநாழியும் இவை நிவ-

16. ந்தம் செய்யப் பரகேசரியால் கல்லகலநே தூணி நானாழியாக நெல்லு யெந்நூற்றெண் கலநே இருதூணிப்பதக்கு நானாழி-

17. யும் ஆக பங்கிற்றிப் பரகேஸரிய[ா]ல் முதலான நெல்லு ஆயி[ரத்து] முன்னூற்றறு பதிநென் கலநே இருநாழியும் இத்தேவற்கும் இக்கோயிலில்

18. திருமேனிகளுக்கும் உத்திராயந தெக்ஷணநயனமும் ஆனித்திருவிழா உத்தரநாளுக்கு . . . விளக்கும் வேண்டும் நிவந்தஞ் செய்-

19. து குடுக்கவென்று திருவெற்றியூர்ப் பிராவஞ்சிகள் ஜகதிந்து பண்டிதனையும் சோமீஸ்வரபிடாரனையும் சோமபிடாரனையும் காராணை விடங்கபிடாரனையும் வேநலன் இரு நாழியும் கணவதியார்க்கு ஸந்தி ஒன்றினுக்கு திருவமிர்தரிசி இருநாழியும் க்ஷேத்ரபால தேவற்க்கு ஸந்தி ஒன்றி(னு)க்குத் திருவமிர்தரிசி இரு நாழியும் ஸூர்ய தினகலமும் ஸந்தி ஒன்றுக்கு பருப்பமிர்து உழக்காக ஸந்தி மூன்றினுக்கு பருப்பு முக்குறுணிக்கு நாள் ஒன்றுக்கு நெல்லு முன் நாழியாக ஓர் ஆண்டினுக்கு நெல்லு பதின் ஒரு கலநே முக்குறு -

20. ணி நிமந்தஞ் செய்தபடி திருவேற்காடுடைய உஹாதெவற்கு ஸந்தி ஒன்றினுக்குத் திருவமுதுக்கு அரிசி குறுணியாக ஸந்தி மூன்றினுக்கு அரிசி முக்குறுணியும் திருவர்த்தயாமத்துக்கு திருவமிர்துக்கு அரிசி காலறக்கு ஸந்தி ஒன்றுக்கு திருவமிர்தரிசி இருநாழியும் அன்னபலிக்கு அக்ஷரவர்க்கு ஆழாக்கும் சட்டிச் சோறு ஒன்றுக்கு அரிசி நாழி உரியாக சட்டிச் சோறு இரண்டு குறுணியும் உடையார்க்குப் பலி திருமேனிகளுக்கும் கறியமிர்துக்கு அரிசி நாழிக்குப் பல கறி நிறை முப்பலமாக நாள் ஒன்றுக்குப் பல கறி நிறை நூற்றைய்ம்பதின் பலத்துக்கு நெல்லு ஆறுநாழியாக ஒரு-

21. (நாளுக்கு) நானாழியும் இத்தேவர் பின்பு எழுந்தருளி இருக்கும் உற்சவ ஸமித மூர்த்திகளுக்கு ஸந்தி ஒன்றினுக்குத் திருவமிர்தரிசி இருநாழியும் இத்தேவர் நம் பிராட்டியார்க்கு ஸந்தி ஒன்றினுக்குத் திருவமிர்துக்கு அரிசி நானாழியும் ஆக நாள் ஒன்றுக்கு பத்தெட்டுக்குத்தலரிசி இரு தூணி முன்னாழிக்கு . . . ண்டு வண்ணத்தால் னெல்லு கலநே இரு தூணி ஏழு நாழியுரியாக ஓராண்டினுக்கு நெல்லு இருபத்திருகலநே தூணிப்பதக்கும் உடையார்க்கு நாள் ஒன்றுக்குத் தயிரமிர்து நாழி உரியாக நாள் ஒன்றுக்குநெல்லு முன்னாழியாக ஓராண்டினுக்கு நெல்லு பதின்ஒரு கலநே முக்குறுணி-

22. ய[ரி]சி நாழி உரியும் திருச்சிற்றம்பலமுடையாற்கு ஸந்தி ஒன்றினுக்குத் திருவமிர்தரிசி ஒரு நாழியாக ஸந்தி மூன்றிநுக்குத் திருவமிர்தரிசி ஆறு நாழியும் இத்தேவர் நம்பிராட்டியார்க்கு ஸந்தி ஒராண்[டு]க்கு நெல்லு அறுநூற்றுபத்தென் கலநே குறுணி க நாழியும் உடையார்க்கு ஸந்தி ஒன்றுக்கு யிரு செவிடரையாக ஸந்தி நாலுக்கு நெய் ஆழ[ா]கே யிச்செவிடரையும் உடையார்க்கு கறியமிர்துக்கு நாள் ஒன்றுக்கு மிளகு முச்செவிடுக்கு நெல்லு நாழியாக ஒராண்டினுக்கு நெல்லு முக்கலநே இரு தூணிக்கு தூணியும் கறியமுமிர்த்துக்கு நாள் ஒன்றினுக்கு உப்பு உழக்கினாக ஸந்தி மூன்றுக்கு வெறுங்காய-

23. மர்தினுக்குத் திருவமிர்து அரிசி நாழி உழக்காக ஸந்தி மூன்றினுக்குத் திருவமிர்தரிசி முன்னாழி முழக்கும் திருவிழா எழுந்தருளும் தானதாயக தெவற்கு ஸந்தி ஒன்றுக்குத் திருவமிர்தரிசி இருநாழி ஸந்திக்கு அமிர்த்துக்கு நெய் இச்செவிடரையும் அங்ஙிகாரியத்துக்கு நெய் இச்செவிடரையும் ஒன்றுக்கு நெய் உழக்கே இருச்செவிடரையாக ஒராண்டினுக்கு ஸந்தி நெல்லுநாழியாக ஒராண்டினுக்கு நெல்லு கலநே இருதூணிப் பதக்கு நானாழியும் உடையார்க்கு அடைக்காயமிர்துக்கு ஸந்தி ஒன்றுக்கு வெறுங்காய் நாலாக ஸந்தி மூன்றுக்கு வெறுங்காய -

24. ஸந்தி மூன்றினுக்குத் அரிசி ஆறு நாழியும் இத்தேவர் நம்பிராட்டியார்க்கு ஸந்தி ஒன்றினுக்குத் திருவமிர்தரிசி நாழி உழக்கே ஸந்தி மூன்றினுக்கு அரிசி முன்னாழிய்மூவுழக்கும் ஸ்ரீபலி எழுந்தரு[ளு]ம் நெய் நானூற்றிருபத்திருநாழி உரிக்கு நெல்லு முப்பத்தேழு கலநே தூணி பதக்கும் திருநந்தா விளக்கு இரண்டுக்கு எண்ணை உழக்கு ஸ்ரீபலி விளக்கு ஐஞ்சும் தூப விளக்கு பன்றிரண்டுக்கும் இலையமிர்து நாற்பத்தெட்டுக்கும் ஆக நாள் ஒன்றுக்கு நெல்லு இருநாழியாக ஓராண்டினுக்கு நெல்லு ஏழு கலநே தூணி பதக்கும் உடையார்க்குத் திருமெய்ப்பூச்சுக்கு

25. திருவேலை நாயக தேவற்கு ஸந்தி ஒன்றினுக்குத் திருவமிர்தரிசி நாழி உழக்காக ஸந்தி மூன்றினுக்கு அரிசி முன்னாழி முழக்கும் ஸுப்பிரஹ்மணிய தேவற்க்கு ஸந்தி ஒன்றினுக்குத் திருவமிர்தரிசி இரண்டும் ஆக விளக்கு ஏழிநுக்கு எண்ணை உழக்கும் ஆக நாளொன்றுக்கு எண்ணை நாழியாக ஸந்தி விளக்கு எண்ணை முன்னூற்றுபதிந் நாழிக்கு னெல்லு னூற்றிரு கலனே உரிக்கும் ஆக நாள் ஒன்றுக்குச் சந்தனம் அரைப் பலமாக நாள் ஓராண்டுக்குச் சந்தனம் நூற்றெண்பதின் பலத்துக்கு நெல்லு முப்பதின் கலமும் உடையார்க்குச் சார்த்தியருளத் திருப்பணி

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர்எண் : 257/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 4 நாள் 239
வட்டம்	: அம்பத்தூர்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1067
ஊர்	: திருவேற்காடு	இ.க. ஆண்டறிக்கை	: 387/1958-59
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 6 மற்றும் 7
அரசன்	: வீரராஜேந்திரன்		

இடம் : வேதபுரீஸ்வரர் கோயில் கருவறை அதிட்டானம் - குமுதப்படை வடக்கு, மேற்கு.

குறிப்புரை : வீரராஜேந்திர சோழனுடைய ஆட்சியின்போது வெட்டப்பட்ட இக்கல்வெட்டு ஊர்க்கல்வெட்டு எண் 6 மற்றும் 7 எனப்படியெடுத்திருப்பினும் ஒரே சாசனத்தின் தொடர்ச்சியாகும். எயிற்கோட்டத்து நகரம் காஞ்சிபுரத்து மயானமுடையார் கோயிலில் கங்கைகொண்ட சோழன் திருமண்டபத்தில் இருந்து திருவேற்காடு உடையார் கோயில் காரியம் ஆராயும் பணியில் அதிகாரி ஈடுபட்டுள்ளார். ஆனி மாதம் நடைபெறும் திருவாதிரைத் திருநாள் விழா நடத்த நிவந்தம் போதாமல் இருந்ததை அறிந்து கூடுதல் வருமானம் வரும்படி நிமந்தம் உருவாக்கினார். மேலும் அரசுக்குரிய பல வரிகள் கோயிலுக்கு இறையிலியாக வழங்க ஏற்பாடு செய்தார். கோயிலுக்கு 73 காசுகள் தந்து அதன் வட்டியாக 146 கலம் நெல் வரும்படி செய்தார். கோயில் சார்பாகக் கலந்து கொண்ட பட்டர்களின் பெயர்கள், கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலங்கள் ஆகியவை கூறப்பட்டுள்ளன. பூந்தமலி என்றே இன்றுள்ள பூவிருந்தவல்லி கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. பூந்தமலியே சரியான சொல்லாகும்.

Summary : On the north and west walls of the central shrine in the same temple. Chōḻa - Vīra-Rājēndra Sōḻan. Regnal year 3 days 239. Commences with prasasti 'Vīramētunaiyāgavum' etc.,

Records that on representation to the officer who was examining the accounts of the temple of Tiruvēṛkāḍu in Mummuḍi Sōḻanallūr in Vēṛkāḍu nāḍu from his camp in the Kāñchipuram Tirumayānam udaiyār temple at Gaṅgaikoṇḍa Chōḻa maṇḍabam. The provision made firmerly by adhikārigaḷ Sōḻa mūvēnda vēḻār for conducting the seven day festival ending on the day of Tiruvādirai in Āni having seen found in sufficient he assigned the income from various taxes including Rājādhirājan taragu kuḻi for the purpose and also for feeding the Srimāhēśvarās attending the festival.

கல்வெட்டு :

1. வீரமேதுணையாகவும்தியாகமேயணியாகவும்செங்கோலோச்சிக்கருங்கலி கடிந்து கூடல் சங்கமத்தாமவ மல்லனை ஐஞ்சுவித்து விக்கலனையும் சிங்கணனையும் உடைபுறம் கண்டு மற்றவர் மாதேவியரோடும் வஸ்து வாமனங் கைக்-
2. கொண்டு விசயஸிஂஹாஸனத்து உலக முழுதுடையாளோடும் வீற்றிருந் தருளிய கோவிராஜகேஸரி வநூராந உடையார் ஸ்ரீவீரராஜெநூ ஷெவற்கு யாண்டு நாலாவது நாள் இருநுற்றுமுப்பத்தொன்றினால் நடு இருக்கும் கண்டி யரசி . . . .
3. . . . ட்டா ஜயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற்கோட்டத்து நகரம் காஞ்சிபுரத்து திருமயானமுடையார் கோயிலில் கங்கைகொண்ட சோழன் திருமண்டபத்திலிருந்து கோயில் காரியமாராயவிருக்கும் புலியூர்கோட்டத்து வேற்காடு நாட்டு மும்முடி
4. சோழநல்லூர் திருவேற்காடுடைய ஊஹாஷெவர்க்கு அதிகாரிகள் சோழ மூவேந்த வேளாந் முன்பு செய்த நிவந்தங்கனுக்கு . . . . இத்தில் ஆனித்திருவாதிரைத் திருநாள் . . கார்ய . . . மா . . . செய்த நெல் நாலாவது . . .

ஊ. க.எண் 7

1. நித்தம் பத்துக் கலம் சந்திராதித்தவரையும் உண்பதாக இந்நிலம் ஒற்றி கொம்மண்டையு முள்ளிட்ட இவ்வனைவோம் நாலாவது . . . பது முக்காலாவது திருநந்தாவிளக்குச் செல . . . கருநிலத்துக்கு நிரவி . . சிலங் . . . . மாட்ருர நவதீணயபார்தி பொய்யிலி பட்டன் எழுத்து இப்படிக்கு இவை மாறபட்டன் எழுத்து இப்படி அறிவேன் தேவன் வேளான் சீ குருகூன் எழுத்து இவ்வூர்ப் பாரசிவன் விச்சாதிரன் ஒப்பு இப்படி அறிவேன் குணபேறன் எழுத்து இக்கோயிலில் இவ்வூரா . . . ட்டு சனவது ட்ட . . . .
2. குமரியிடை செய்தார் செய்த பாவம் அநுபவிப்பாந் மாக்கண்ணந் உடையாந் நம்பிக்கூத்தநெழுத்து மாக்கண்ணந் இரவி உடையம்பி யெழுத்து . . . ஒரு காலாவது இரு காலாவது முக்காலாவது திருநுந்தா விளக்கு செல்வதாக இ[ந்]நிலத்துக்கு நீர் விலை சில்லிறை சோறுமாட்டு நறு நினைப்பார் திருவானை திருவிராயாரிலி . . . கல்லக யறிவேன் நந்திமான் செந்நிக்கு விச்சாதிரன் எழுத்து இப்படி அறிவேந் நந்திமான் வேளான் ஒற்றிக்கொண்டான் எழுத்து இப்படி அறிவேன் பூந்தமலி வெள்ளான் சீ முத்தந்குலைக்கு இவை சிற்றேரி ஏறை ஒப்பு இவர் கோசிகன் பொய்யிலி

பட்டநும் கோசிகன் திருவிதரபட்டநும் கோசிகன் திருக்கழிப்பாலை மகநும் கோசிகன் மாறபட்டநும் . . . .

3. ஸகலமும் ஸாஙூத்தின்படி செய்ய போகாமையில் இதனில் மேல் ஏற்றம் . . . த்தேவதானம் திருச்சிற்றம்பலநல்லூர் ஊர்க்கீழ் . . . . . ணன் உடையாந் மாதவபட்டனெழுத்து வேழ்ச்சி கிழான் தாழி ஆதித்த தேவந் எழுத்து இப்படி அறிவேந் ஶிவஙூாஹ்ணநேந் வருணூயந் திருநாகீசுரப்பட்டனநெழுத்து இப்படி யறிவேந் கடிகையார் பட்டன் ஒப்பு இப்படி அறிவேந் தேவாந்தை அருளாளன் ஒப்பு இப்படிக்கு இவை செந்நீக்கி தே[வன்]தி எழுத்து ஒப்பான்மைக்கு இவை சேதி எழுத்து இப்படிக்கு திருபாலை ஒப்பான் இவ்வனைவோம் இத்தேவர்க்கு ஒருதிருநுந்தா விளக்கு இப்பிரமி செறுக்குழி ஆயிரமும் கொண்டு சந்திராதித்தவரை செலுத்த . . . .

4. குமர ஆச்சாண பூப்பிளை பாட்டமும் வெள்ளூரும் பாட்டமும் உள்ளிட்ட கீழிறையிலி பாட்டமும் வேலி கால்லு திங்கள் மே . . . எழுத்து வரண முத்தந் . . ளடி . மாசிலாமணி ஆதிச்சதேவநெழுத்து இளம்மைப்பட்டந் சிங்கப[நிரா]ந் எழுத்து வேழ்ச்சி கிழான் நீறணிந்தாந் தாழி கோவிந் எழுத்து . . . ழ செய்வித்த விளக்கு . . . திருவிழாவுக்கும் செயத்திவக நெல்லு நூற்று நாற்பத்தைந் கலமும் ஆக நெல்லு இந்நூற்றுத்தொணூற்று ஒருகலம் ஆனித்திவகளத்தவர்களாக திருநாள் ஒன்பதுக்கு நி . தஞ்செ. மைக்கு இவை நாராயணந் மயி எழுத்து . . த்த கடவொமாநோம் இ[ட]ங்கைவோம் இந்நிலக்கொண்டு இவை சொட்டையப்பன் எழுத்து இவை கணபதி பட்டன் எழு[த்து]

5. தியகதக்கும் உள்ளிட்ட வேண்டுவனவற்றுக்கும் அழியும் நெல்லு இப்படிக்கு இக்கோயிலில் பாரசிவாதியார் பெரு . . . இவை பொயிலிபட்டன் எழுத்து இப்படிக்கு இவை திருக்கழிப்பாலை நாயகன் எ[ழு]த்து இவை திருவாரூர் பட்டன் எ[ழு]த்து

6. குடிமை வெட்டி உள்ளிட்ட பாட்டங்களுக்கு இறுக்கக் கடவதாக காசு எழுபத்து மூன்று இக்காசு எழுபத்து மூன்றும் இறையிலியாய் இத்தேவற்க்கே பெற உ . . . . விட்டு இறையிலிகைக்கு எழுபத்து மூன்றினால் காசா[க] ஒன்றுக்கு நெல்லு பரகேசரியால் இருகலமாக வந்த நெல்லு நூற்று நாற்பத்தாறு கலமும் அதிகாரிகள் சோழ . . . இந்நூற்றுதொண்ணூற்று ஒரு கலம் . . . க்க சந்திரன் திருவேங்கடத்தின் . . ப . . .

7A. துண்டுக் கல்வெட்டு

1. மெல்ல மேற்கடையக் குழி ஐய்ம்பத்தேழு . . . . உள்பட்ட நிலம் பதினாறு சாண்கோ-

2. லாலே மூவாயிரம் குழியும் இறையிழிச்சி இறையிலியாகத் தாநமாகக் குடுத்த
3. . . . . யமாதேவர் கோயிலில் எழுத்து இப்படிக்கு இவை செந்நீக்கி தேவன் ஒப்பான்மைக்கு
4. இளம்மைப்பட்டந் சிங்கப[னிரா]ந் எழுத்துது / ழ செய்பித்த விளக்கு . . . திருவிழாவுக்கும் செயத்திவக நெல்லு நூற்றுநாற்பத்தைங்கலமும் ஆக நெல்லு இந்னூற்றுத்தொணூற்று ஒருகலம் ஆனித்திவகளததவர்களாக திருநாள் ஒன்பதுக்கு நி .தஞ்செ. மைக்கு இவை நாராயணந் மயி எழுத்து . . த்த கடவோமாநோம் இடங்கைவோம் இந்நிலங்கொண்டு இவை சொட்டையப்பன் எழுத்து இவை கணவதி பட்டன் எழு[த்து].

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர்எண் : 258/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 40
வட்டம்	: அம்பத்தூர்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1110
ஊர்	: திருவேற்காடு	இ.க. ஆண்டறிக்கை	: 391/1958-59
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 8-1
அரசன்	: முதலாம் குலோத்துங்கன்		

இடம் : வேதபுரீஸ்வரர் கோயில் கருவறை வடக்குச் சுவர்.

குறிப்புரை : 'புகழ்மாது விளங்க' என்ற மெய்க்கீர்த்தியுடன்' தொடங்கும் இக்கல்வெட்டு முதலாம் குலோத்துங்கனுடைய நாற்பதாவது ஆட்சியாண்டின்போது வெட்டப்பட்டதாகும். திருவேற்காடு உடையார்க்குத் திருச்சிற்றம்பல நல்லூரில் இருக்கும் வெள்ளூரடிக் கந்தமன் பெருமான் நங்கை விளக்கெரிக்க கொடை அளித்துள்ளாள் இவளிடமிருந்து சிவப்பிராமணர்கள் பசுக்களைப் பெற்றுக் கொண்டு நெய் வழங்க உடன்படிக்கை செய்துள்ளனர். கொடை குறித்த கல்வெட்டும் வெட்டி வைக்கின்றனர். கோயில் பட்டர்களின் பெயர்களும் கல்வெட்டு வெட்டிய சிற்பியின் பெயரும் சாசனத்தில் காண்கிறோம்.

நங்கை போன்று மயன் பெருமாள் என்பவரும் கோயிலுக்குப் பசுக்களை வழங்கி நெய் அளிக்க சிவப்பிராமணர்களிடம் உடன்பாடு கண்டுள்ளார். ஆவணத்தில் பட்டர், வேளார் அகம்படி எனப் பல சாதி பிரமுகர்களும் ஒப்பமிட்டுள்ளனர். இதன் தொடர்ச்சி 8-2 ஆக இருக்கலாம்.

Summary : On the north wall of the central shrine in the same temple. Commences with the meykkīrtti. 'Pugal̲ mādhu viḷaṅga' etc. Records a gift of cows for a perpetual lamp to god Tiruvēṟkāḍu Uḍaiyār by Konḍama peruma naṅgai native of Tiruchchiṟṟambalanallūr'. Mayan also donated cows to the temple.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ புகழ்மாது விளங்க ஜயமாது விரும்ப நிலமகள்
2. வளர மலர்மகள் புணர உரிமையிற் சிறந்த மணிமுடிசூடி மீ-
3. னவர் நிலைகெட வில்லவர் குலைதர ஏனை மன்னவர் இரியலு-
4. ற்றிழிதர திக்கனைத்துந் தன் சக்கர[ம்] நடாத்தி வீரஸிംஹாஸநத்து அவநி-
5. முழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோவிராஜகெஸரி பந்மரான

திரிபுவன சக் -

6. ரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு சயி ஆவது ஜயங்கொ-
7. ண்ட சோழ மண்டலத்துக் குலோத்துங்க சோழ வளநாட்டு வேற்காடு நா-
8. ட்டு திருவேற்காடுடையார் தேவதானமான திருச்சிற்றம்பலநல்லூரில் இருக்கு-
7. ம் திருக்காற் சரிக்கு இட்ட வெள்ளி இருபதின் கழஞ்சு உடையாற்குச் சாத்தின கெங்காதேவி நாச்சியாற்கு வெள்ளி எண் கழஞ்சு இக்கோயில் தேவரடியாரில் பொன்னாண்டை இட்டபட்டம் 'க'னால் பொன் ஏழு கழஞ்சு மாற்று-

8. ஒன்பதும் இவை இத்தனையும் கைக்கொண்டோம் ஸாக்ஷாஜி நாற்ப்பத்-

9. [தெ]ண்ணாயிரபட்டனும் அழக ஞாநசம்பந்த பட்டனும் காஸ்யபன் திருச்சிற்றம்பல-

10. [பட்]டனும் குலோத்துங்க பட்டனும் இவ்வனைவோம் இது பன்மாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர்எண் : 311/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 28
வட்டம்	: அம்பத்தூர்	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1244.
ஊர்	: பாடி	இ.க. ஆண்டறிக்கை	: 216/1910
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: XXXVI/216
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 8
அரசன்	: மூன்றாம் இராசராசன்		

இடம் : திருவல்லீஸ்வரர் கோயில் அர்த்த மண்டபத் தெற்குச் சுவர்.

குறிப்புரை : மூன்றாம் இராசராசன் ஆட்சியின் போது பாடியைச் சேர்ந்த மாம்பாக்கிழான் பெருமாள் என்பவன் திருவல்லீஸ்வரர் கோயிலில் க்ஷேத்ரபால பிள்ளையாரை எழுந்தருளிவித்துடன் திருவமுதுக்காக ஐந்து நற்பழங்காசினை இக்கோயில் சிவப்பிராமணர்களிடம் அளித்துள்ளான். அளக்கும் நாழியின் பெயர் திருஞானசம்பந்த நாழி.

Summary : On the south wall of the maṇḍapa infront of the central shrine in the same temple. King Rājarāja Chōḻa III. Regnaḻ year 28. Gift of money (5palañkasu) for offerings to the shrine of Kshetra Pālapiḻḻaiyār built in the same temple by a resident of Pādi. Donor's name was Māmpākkiḻāṉ Perumāl.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு உ௰அ வது ஜயங்கொண்ட சோழமண்டலத்து புழற்கோட்டத்தம்பத்தூர் நாட்டு உடையார் திருவல்லிதாய மு-
2. டைய நாயனார் கோயிற் காணியுடைய ஶிவப்ராஹ்மணர் ஹாரதூஜி நிஷ்நாநந்த பட்டன் உள்ளிட்டாரும் காஶ்யவன் குலோத்துங்க ஹட்டன் உள்ளிட்டாரும் இவ்வனைவோமும் உபையங்கொண்டபடி பாடியில் யிவ்வூர்-
3. உடையான் மாம்பாக்கிழான் பெருமாள் இன்னாயனார் கோயிலுக்கு இவர் எழுந்தருளிவித்த க்ஷேத்ர ஹாலஹிள்ளையாற்கு இட்ட சந்திவிளக்கு 'க'ம் இட்டு திருஞானசம்பந்தனாலே நாழி அரிசியும் கறியும் அமுது-
4. செய்வித்துக் கொள்ளக் கடவோமாக இவர் பக்கல் நாங்கள் கைக்கொண்ட அன்றாடு நற்பழங்காசு 'ரு'க்கும் இப்பிள்ளையாற்கு இப்படி உபையம் சந்த்ராதித்த வரை செலுத்தக் கடவோம் இக்கோயிற்-
5. திருவுண்ணாழிகையரோம் இது பன்மாஹெஶ்வர ரக்ஷை.

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர்எண் : 312/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: பிலவங்கு ஆண்டு
வட்டம்	: அம்பத்தூர்	வரலாற்று ஆண்டு	: 6-6-1427.
ஊர்	: பாடி	இ.க. ஆண்டறிக்கை	: 215/1910
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.இ.க. தொகுதி.36 எண்.215
எழுத்து	: தமிழ்		
அரசு	: விஜயநகர அரசர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 9-I, II, III
அரசன்	: இரண்டாம் தேவராயர்		

இடம் : திருவல்லீஸ்வரர் கோயில் அர்த்த மண்டபத் தெற்குச் சுவர்.

குறிப்புரை : சந்திரகிரி ராஜ்யத்தைச் சேர்ந்த பலவற்றில் இடங்கையில் உள்ளாரும் வன்னியரும் திருவல்லிதாயமுடைய நயினாற்கு பாடியில் உள்ள பள்ளிகள் பேரில் இடங்கை வரி நீக்கி ஸர்வமான்யம் வழங்கியுள்ளனர். மற்றவரிடம் வசூலிக்கும் இடங்கை வரி இறைவன் திருவேட்டை திருவிழாவுக்கு வழங்கப்பட்டது. குறைவுறுப்பு வேறு கல்வெட்டுகளிலும் வந்துள்ளது. திருமெய்காப்பார்க்கு ½ அளவு வரி செலுத்தினால் போதும். குடிகளுக்கு ¾ அளவு வரி செலுத்தினால் போதும் என நிர்ணயக்கப்பட்டது. கல்வெட்டுத் தொகுதி 36-இல் எண் 215-கடைசி 3 வரிகள் இடம் பெறவில்லை. வன்னியர் வேறு, பள்ளி வேறு என்று இக்கல்வெட்டு கூறுகிறது. இனி, வன்னியப்பெரும்பிரிவில் பள்ளிகள் குறைவுறுப்பு என்றும் கூறலாம். தனிப்பிரிவாகக் கூறுகிறது.

Summary : On the south wall of the maṇḍapa infront of the central shrine in the same temple. King Devaraja II. Year Plavanga. (Tamil rotating year)1427C.E.

Gift of the tax idangai vari payable by paḻḻis of the village of pāḍi to the same temple by the community of īḍangai classes and the Vaṉṉi-yars living in the villeges surrounding Chandragiri. No tax for people of Paḻḻigal living in Padi village. Other idengai sect ½ or ¾ tax was fixed. Tiruvēṭṭai festival also mentions in this inscription.

கல்வெட்டு :

1. ஸ்ரீமன்மஹாமண்டலேசுரன்
2. பாஷைக்குத் தப்புவராய-
3. ர் கண்டன் மூவராயர் கண்-

4. டன் பூவ்வுபக்ஷி(ம)தெக்ஷிண உத்திராபதி
5. வீர ஸ்ரீ தேவராயற்குச் செல்லாநின்ற பில-
6. வங்க வருஷத்து மிதுன நாயாற்று பூறுவபக்க்-
7. ஷத்து ஹூாஉஸியும் வெள்ளிகிழமையும் பெ-
8. ற்ற அனிழத்து நாள் ஜயங்கொண்ட சோ-
9. ழ மண்டலத்து புழற் கோட்ட[ம்]
10. ஆன விகூஉ சோழ வளநாட்டு அம்பத்தூர் நாட்டு
11. திருவல்லி தாயத்து உடையார் திருவல்லி-
12. தாயமுடைய நயினார் ஸ்ரீபண்டாரத்துக்-
13. கு சந்திரகிரி சூழ்ந்த பல பற்றில் இடங்கையி-
14. ல் உள்ளாரும் வன்னியரும் நாயனார் திருவல்-
15. லிதாயமுடைய நாயினாற்கு பாடியிலிருக்கு-
16. ம் பள்ளிகள் பேரில் இடங்கை வரி உள்ளதுக்கு ஸவ்வு-
17. மாநூஉாக கல்வெட்டி குடுத்தபடி இவர்கள் பேரில் இடங்கை வரிப் ப-
18. ணமுள்ளது நாயனார் திருவேட்டை எழுந்தருளுகிற உப-
19. யத்துக்குச் செல்லும் குறைவுறுப்புக்கு
20. இந்த ஊர் இடங்கைவரி ஸவ்வுமாநூஉாகவும் இதிலே திருமெ-
21. ய் காப்பாற்கு நாட்டில் ஒன்று பாதியும் குடிக்கு ஒன்று முக்காலு-
22. ம் கொள்ளக் கடவர்களாகவும் இப்படி சம்மதித்து கல்வெ-
23. ட்டிக் குடுத்தோம் நாயனார் திருவல்லிதாயமுடைய நாயனாற்கு
24. சந்திரகிரி சூழ்ந்த பலபற்றில் இடங்கையில் உள்ளாரும்
25. வன்னியரும் இப்படிக்குச் சம்மதித்துச்சுத் தன்ம சாதன-
26. ம் பண்ணிக் குடுத்தோம் இத்தன்மத்துக்கு அகுத-
27. ம் நினைத்தாருண்டானால் கெங்கை-
28. க் கரையில் குரால் பசுவைக் கொன்றாள் பாவத்திலே போக-
29. க் கடவராகவும் இத்தன்ம சாதனம் குமுதப்படையிலே கல்வெட்டிக்-
30. குடுத்தோம் இப்படிக்கு இவை இடங்கை மீகாம வேளான் எழுத்து

*இறுதி வரியில் ஒப்பம் தெலுங்கில் உள்ளது.

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர்எண் : 313/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 16
வட்டம்	: அம்பத்தூர்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ.1232.
ஊர்	: பாடி	இ.க. ஆண்டறிக்கை	: 214/1910
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: S.I.I. 36. 214
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 10
அரசன்	: மூன்றாம் இராசராசன்		

இடம் : திருவல்லீஸ்வரர் கோயில் அர்த்த மண்டபத் தெற்குச் சுவர்.

குறிப்புரை : மூன்றாம் இராசராசனுடைய 16-ஆவது ஆட்சியாண்டின்போது திருவல்லிதாயமுடைய நாயனார் கோயில் சிவப்பிராமணர்கள் ஒன்று கூடி உபயம் பெற்று கோயில் பணி செய்துள்ளனர். மேலும் சோழமண்டலத்து நாங்கூர் நாட்டுத் திருவெண்காட்டுத் திருமடைவிளாகத்திலிருக்கும் திருவிடையான் திருவிராமீசுரமுடையான் என்ற திருப்பதியம் விண்ணப்பம் செய்யும் திருச்சிற்றம்பலமுடையான், ஆச்சர்யலிங்கமாக நாயனாரையும் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் (நடராசர்) சிலையையும் செய்து வைத்துள்ளான். பூஜை, அமுதுபடி, சந்திவிளக்கு போன்றவற்றிற்காக அன்றாடு நற்பழங்காசு பத்துக் காசினையும் அளித்துள்ளார். மேலும் கோயில் சிவப்பிராமணர் மூவர் பெயர்களும் சாசனத்தில் உள்ளன. திருஞானசம்பந்தன் நாழி பயன்பாட்டில் இருந்தது.

Summary : On the south wall of the maṇḍapa infront of the central shrine in the same temple. King Rājarāja Chōḻa III. Regnal year 16 (1232 C.E.).

Records that a brahmana of Tiruveṇkaḍu set up the god Aḻagiya Tiruchichiṟṟambalam udaiya nāyanār (Naḍarāsar) in the enclousure of the temple of Tiruvallidāyamudayaṉ in Ambattūr nāḍu a sub-division of Puḻaṟ kōṭṭam in Jayaṅgoṇḍasōḻa maṇḍālam and provided for offerings. Mentions the grain measure Tiruġnānasampandaṉ nāḻi.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ-
2. தேவற்கு யாண்டு 'யசு' ஆவது ஜயங்கொண்ட சோ-
3. ழமண்டலத்து புழற்கோட்டமான விக்கிரம சே-
4. சாழ வளநாட்டு அம்பத்தூர் நாட்டு திருவல்லிதா-

5. யத்து உடையார் திருவல்லிதாயமுடைய நாயனா-
6. ர் கோயிற் காணி உடைய ஶிவஸ்ராஹ்மணரில் ஸாரஷஜா-
7. ஜிநித்ர நங்ஸட்டன் வ்ரம்மீசுரமுடையானான நாற்-
8. பத்தெண்ணாயிர ஸட்டன் உள்ளிட்டாரும் காஶ்வ ே-
9. ாதரத்துத் திருச்சிற்றம்பல ஸட்டன் ஆழ்வான்னான நா-
10. ற்பத்தெண்ணாயிர ஸட்டன் உள்ளிட்டாரும் இக்குடித்-
11. திருவல்லிதாயமுடையானான குலோத்துங்க ஸட்டன் உ-
12. ள்ளிட்டாரும் இவனை வோமும் உஷெயங் கொண்டு சில-
13. ாலெஷெவெ பண்ணினபடி இன்னாயனார் கோயிற் திருச்சுற்-
14. றுக்கு உள்ளுச் சோழமண்டலத்து நாங்கூர் நாட்டுத் தி-
15. ருவெண்காட்டுத் திருமடைவிளாகத் திருக்கும் வ்ராஹ்மணரி-
16. ல் ஸாரஜ்வாஜி திருவிடையான திருவிராமீசுரமுடையான்னே-
17. ன் திருப்பதியம் விண்ணப்பம் செய்யும் திருச்சிற்றம்பலமு-
18. டையான் ஆஶ்ரயஷீங்கமாக எழுந்தருள்வித்த நாயனார்
19. அழகிய திருச்சிற்றம்பலமுடைய நாயனார்க்கும் வூஜையும்
20. அமுதுபடியும் சந்திவிளக்கும் சந்ராதித்யவரை செலுத்துவ-
21. தாக இத்திருவிராமீசுரமுடையானான திருச்சிற்றம்பலமுடையான்
22. பக்கல் நாங்கள் உஷையமாக்கி கைக்கொண்ட அன்றாடு நற்பழங்-
23. காசு 'ம' இப்பழங்காசு பத்துக்கும் இன்னாயனாரைப் பூஜித்து ஒரு
24. ஸந்தியிலே திருஞானசம்பந்த நாழியாலே இருநாழி அரிசியும் கறி-
25. அமுதும் அமுது செய்வித்துகொள்ளக்கடவோமாகவும் ஒரு சந்தி-
26. விளக்கு எரிக்க கடவோமாகச் சம்மதித்தோம் இக்கோயிற் திருவுண்-
27. ணாழிகையாரோம் இதுபன்மாஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர்எண் : 314/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 8
வட்டம்	: அம்பத்தூர்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ.1224.
ஊர்	: பாடி	இ.க. ஆண்டறிக்கை	: 219/1910
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: 36 /219
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 11
அரசன்	: மூன்றாம் இராசராசன்		

இடம் : திருவல்லீஸ்வரர் கோயில் அர்த்த மண்டபத் தென்புறச் சுவர்.

குறிப்புரை : மூன்றாம் இராசராசனுடைய 8 -ஆவது ஆட்சியாண்டின்போது செம்பூர் கோட்டத்துப் பரமேசுர மங்கலமுடையான் சிலம்பணிந்தான் யாதவராயர் பாக்கம் பாண்டார், திருவல்லிதாயமுடைய நாயனார் கோயிலில் விளக்கொன்று வைத்ததுடன் தொடர்ந்து எரிவிக்க அன்றாடு நற்பழங்காசு மூன்றினைக் கோயில் சிவப்பிராமணரிடம் தந்துள்ளார்.

Summary : On the south wall of the central shrine in the same temple. King Rājarāja III. Regnal year 8. Gift of money (3 Paḻaṅkāsu) for lamp by a certain Silambaṇindāṉ Yādavarāyar Pākkampāndār of Paramēsvara maṇgalam in Sempūr kōṭṭam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச் சக்கரவத்திகள் சிரீ இராசராசதேவற்கு யாண்டு அ வது புழல்கோட்டத்து உடையார் திருவல்லிதாயமுடைய-
2. நாயநாற்கு செம்பூற் கோட்டத்து பரமேசுரமங்கலமுடையாந் சிலம்பணிந்தான் யாதவராயன் பாக்கம் பாண்டார் இநா-
3. யநாற்கு சந்திராதித்தவரை செல்வதாக வைத்த சந்தி விளக்கொந்று இவ்விளக்கு ஒன்றும் இக்கோயிலில் சிவப்பிராம-
4. ணரில் பாரத்துவாசி கோத்திரத்து நித்யா நந்த பட்டன் உள்ளிட்டாரும் காசிவகோத்திரத்து சீகண்டநுந்பட்டந் உள்ளிட்டாரும்-
5. கைக்கொண்ட அன்றாடு நற்பழங்காசு மூன்று இப்பழங்காசு மூன்றுக்கும் சன்திவிளக்கொன்றும் சந்திராதித்த வரை எரிப்பதாகக் கைக்-
6. கொண்டோம் இது பன்மாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர்எண் : 315/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 6
வட்டம்	: அம்பத்தூர்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ.972
ஊர்	: பாடி	இ.க. ஆண்டறிக்கை	: தெ.க.தொ.225/1910
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: 36 /225
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழரின் சிற்றரசர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 12
அரசன்	: பார்த்திவேந்திரவர்மன்		

இடம் : திருவல்லீஸ்வரர் கோயில் மதில் அருகே தனிப்பலகையில் உள்ளது.

குறிப்புரை : பார்த்திவேந்திரவர்மனுடைய ஆறாவது ஆட்சியாண்டின்போது குறட்டூராகிய பராந்தகசதுர்வேதி மங்கலத்துச் சபை கோயிலுக்குரிய 1300 குழி நிலத்தை விற்று தந்த பதிவேடே இக்கல்வெட்டாகும். புலியூர் கோட்டத்து துடமுனி நாட்டு திருவலிதாயில் என ஊர் சுட்டப்படுகிறது. சபை மஞ்சக்கமான நில விற்பனையில் எல்லைகள் விரிவாக உள்ளன. அம்பத்துர் ஏரி, கொன்றூர் கால்வாய், சுட்டப்படுகின்றது. இறையிலியாக விற்றுத்தரப்படுகிறது. வாசகம் எழுதியவன் ஒப்பமும் மற்றவர் ஒப்பங்களும் காண்கிறோம். விளக்கெரிக்க மேற்படி விலைப்பணம் முதலீடாக்கப்படுகிறது.

Summary : On the Slab lying in the courtyard of the same temple. King Pārthivēndra varmaṉ. year six.

Sale of land for a lamp to the temple of Mahādēva at Tiruvalidāyil Tudamuni nāḍu, a Sub division of Puliyūr koṭṭam by the assembly of Kuṟattūr (Now Korattur). alias Parāntaka chaturvēdimaṅgalam and Ambattūr ērikīḻ nāḍu a sub division of Puḻaṟ kōṭṭam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பா[ர்]த்தி வேந்திராதி பந்மற்கி யாண்டு ஆ-
2. றாவது புழல்கோட்டத்து அம்பத்தூரேரிக் கீழ்நாட்டு-
3. க் குறட்டுராகிய ஸ்ரீவ௱ாநகச் சதுவ்வெ௨தி மங்கலத்து
4. ஸஸெயொம் புலியூர் கோட்டத்து துடமுணி நாட்டு
5. திருவலிதாயில் உஹாஶெவர்க்கு யாங்கள் எம்முர்த்-
6. தென்கழனி ஸஸெ உஞ்சிக்கமான நிலம் விற்-

7. பதற்குக் கீழ்பால் அம்பத்தூரேரிநீர் கொந்-
8. றூர்க்குப் பாய்ந்த காலின் மேற்கு தென்பால்
9. அம்பத்தூரேரி நீர் வில்லிபாக்கத்துக்கும் கொன்றூர்-
10. க்கும் பாயந்த காலின் வடக்கு மேல்பால் ஸபை மஞ்சிக்கும் வ-
11. டபால் ஸபை மஞ்சிக்கும் இன் நான்கெல்லையுள்ளகப்ப-
12. ட்டநிலம் பதினறுசாண் கோலால் ஆயிரத்து முன் நூற்றைம்-
13. பது குழியும் இது பெறுவிலைக் காணமறக்கொண்டு திருவலிதாயில்
14. ஈஸ்வரர்க்கு இறையிலியாக விற்றுக் குடுத்தோம் ஸபையொம் திரு-
15. வலிதாயில் ஈஸ்வரும் இந்ஞான்கெல்லை யுள்ளு மகப்பட்ட ஸ்ரீ யுண்ணி-
16. லமொழிவின்றி இது பெறுவிலைக் காணமறக் குடுத்து விற்றுக்கொண்ட-
17. இந்நிலத்துக்கு ஏரிநீரும் நீரோடுகாலும் யாங்களுடைய வாறே யிவ-
18. னுக்கு முரித்தாகவும் எம்மிலிசைத்த விலை த்ரவ்யமறக்கொண்டு இறையி-
19. ழிச்சி இறையிலியாக விற்றுக்குடுத்தோம் இதற்றிரம்பில் தண்ட-
20. ஸ்ர முதலாகத்தாம் வேண்டும் கோவுக்கே நிசதிகழஞ்சு பொன்றண்ட-
21. மன்ற ஒட்டிக் குடுத்தோம் இ[ம்]மன்றுபாடிறுத்தும் இஸ்ரீக்கு எம்மூ-
22. ராள் கோவினால் வந்த வீக்கமுள்ளது தீர்த்துக் குடுப்போமானோம்
23. ஸபையொட ஸபை பணிக்க குறியுள்ளிருந்தெழுதினேன் இவ்-
24. வூர்ப் பெருங்கிழவன் நின்றை நூற்றெண்ம பட்டனேன் இப்ப-
25. டியறிவேன் திருவல்லிதாயில் கூட்டத்தான் நரசிங்கபட்டனேன் இப்-
26. படியறிவேன் நுளம்பியாற்றூர்க் கூட்டத்தான் தாமோதிர பட்ட-
27. னேன் இப்படியறிவேன் கொன்றூர்க் கூட்டத்தான் திவாகரப-
28. ட்டனேன் இஸ்ரீ கொண்டு நிலை விளக்கெரிப்பதற்கு வைய்த்த பொ-
29. ன் செங்கலங்கிழான் திருவொற்றியூரன் இஸ்ரீ கொண்டு
30. சந்திராதித்தவற் ஒருநந்தா விளக்கெரிப்போமானோம் உண்ணாழியை-
31. ப் பெருமக்களோம் இது பந்மாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 316/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 10
வட்டம்	: அம்பத்தூர்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ.996
ஊர்	: பாடி	இ.க. ஆண்டறிக்கை	: 226/1910
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தொகுதி.36. எண்.226
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: – (13)
அரசன்	: முதலாம் இராசராசன்		

இடம் : திருவல்லீஸ்வரமுடையார் கோயிலில் உள்ள தனிக்கல்.

குறிப்புரை : மத்திய அரசு கல்வெட்டுத்துறை படியெடுத்து பதிப்பித்துள்ள இக்கல்வெட்டு தற்போது இல்லை. எனவே தொகுதி 36 எண் 226 கல்வெட்டு மூலமே இங்கே இணைக்கப்பட்டுள்ளது. முதலாம் இராசராசனுடைய 10 ஆம் ஆட்சியாண்டின்போது திருவல்லிதாயமுடையார் கோயிலில் ஒரு நந்தா விளக்கு வைக்க 90 ஆடுகள் வழங்கிய விவரமே இக்கல்வெட்டில் உள்ளது.

Summary : On the slab lying on the courtyard of the same temple - king - Rājarāja-I. Regnal year 10 (995cc).

Gift of 90 sheep for a perpetual lamp to the temple of Mahādēva at Tiruvallidāyil in Tuḍāmuṇiyūr nāḍu, a subdivision of Puliyūr kōṭṭam by Paḻayantali Ayaṇakkāḷi a Saṅkarappāḍi from Aṇithirappādi.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமகள்போலப் பெருநிலச்செல்வியும் தனக்கே உரிமை பூ-
2. ண்டமை மனக்கொளக் காந்தளூர் சாலை கல மறுத்தருளி கெங்கை
3. நாடும் கங்கபாடியும் நுளம்பாடியும் தடியப் பாடியும்
4. குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும் ஆழ்கடல்
5. ழமுந் தண்டாற் கொண்ட தன்னூழி வளரூழினெ-
6. ல்லா யாண்டுந் தொழுதெழ விளங்கும்யாண்டேசெ-
7. ழியரைத் தேசு கொள் ஸ்ரீகோவிராஜகேஸரி
8. பந்மற்கு யாண்டு 'ய' வது புலியூர்கோட்டத்து துடிமுனியூர் நாட்டு திருவலிதா-

9. யில் ஊஹாஷெவற்க்கு சநூ_ாஷித்தவற் ஒருநந்தா விளக்கெரிப்பதற்கு இத்-

10. தேவர் ஷெவதான அணிதிரப்பாடி சங்கரப் பாடியான மலயன் தா-

11. ழி அயணக்காளி வைத்த சாவாமுவாப் பேராடு தொண்னூறு இது பநூா-

12. ஷேஶ்வூர ரமெக்ஷ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 317/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 23
வட்டம்	: அம்பத்தூர்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ.1008
ஊர்	: பாடி	இ.க. ஆண்டறிக்கை	: 227/1910
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ.தொகுதி.36. எண்.227
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 14 (தற்போது சாசனம் இல்லை.)
அரசன்	: முதலாம் இராசராசன்		

இடம் : திருவல்லீஸ்வரமுடையார் கோயிலில் வெளிமுற்றத்தில் உள்ள தனிக்கல்.

குறிப்புரை : இந்தக்கல்வெட்டு தற்போது கோயிலில் இல்லை. தெ.க.தொ.36 எண் 227 பாடமே இங்கு தரப்படுகிறது.

முதலாம் இராசராசனுடைய ஆட்சியின் போது புலியூர்க் கோட்டத்து துடமுனியூர் நாட்டுத் திருவல்லிதாயில் மகாதேவர் கோயிலில் செங்கழங்கிழான் திருவேளி காளிப்பட்டன் உமா(மகேஸ்வர) செய்தளித்து திருவமுதுக்காக 120 காடி நெல் முதலீடாக வழங்க அதன் வட்டி கொண்டு திருவமுது படைக்கப்பட்டது.

Summary : On the slab lying in the courtyard of the Tiruvallīśvaramuḍaiyār temple Chōḻa - Rājarāja-I Regnal year 23.

Gift of 120 kadi of paddy for sacred food offerings to the deity Uma consecrated by Cheṅgalankiḻān Tiruvēlikānippaṭṭaṉ in the Mahādeva temple at Tiruvalidayil in Tudamuninādu a subdivision of Puliyur Kōṭṭam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமகள்போலப் பெருநிலச்செல்வியும் தனக்கே யுரி-
2. மை பூண்டமை மனக்கொளக் காந்தளூர் சாலை கல மறுத்தருளி-
3. கங்கபாடியும் நுளம்பாடியுந்தடிகை பாடியுங் குடமலை நாடுங் கொ-
4. ல்லமுங் கலிங்கமும் எண்டிசை [புகழ்] தர ஈழமண்டலமுந்தி-
5. ண்டிறல் வென்றித் தண்டாற்கொண்ட தன்னெழில் வளர் ஊழியுள் எ-
6. ல்லாயாண்டுந் தொழுதெழ விளங்கும்யாண்டே செழியரைச் தேசு கொள்-

7. ஸ்ரீ கோவிராஜராஜகேசரி பந்மரான ஸ்ரீராஜராஜஷெவர்க்கு யாண்டு [உ௰௩] ஆவது புலி-
8. யூர்க்கோட்டத்து துடமுணி நாட்டு திருவலிதாயில் ஊறாஷெவர்க்கு பணி செய்கிற உண்-
9. ணரிழிகை உடையோங் கையெழுத்து இவ்வூர் செங்கலங்கிழாந் தி-
10. ருவேளி காணிப்பட்டந் பக்கல் யாங்கள் கொண்டு . . . .
11. நுற்றிருபதின் காடி ந்நெல்லுக்கு பலிசையாக இவர் எழுந்தருளிவித்த உமா
12. . . . . ரத்து இருநாழி . . . . . . த் திருவமுது சந்திராதித்தவற் செல்வ . . . . .
13. . . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 318/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: அம்பத்தூர்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ.13-ஆம் நூற்.
ஊர்	: பாடி	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 14-துண்டுக் கல்வெட்டு 1மற்றும்2
அரசன்	: –		

இடம் : திருவல்லீஸ்வரமுடையார் கோயில் அர்த்த மண்டபம் தரைப்பகுதி மற்றும் குருக்கள் வீட்டுவாயிற்படி

குறிப்புரை : முதல் துண்டு கல்வெட்டு சோழர் காலத்ததாக இருக்கலாம். திருவலிதாய ஊர்ப்பெயர் இடம் பெறுகிறது. நில எல்லை இடம் பெறுவதால் நிலக்கொடையாக இருக்கலாம். நின்றவூர் (தற்போது திருநின்றவூர் என்றழைக்கப்படுகிறது) இடம் பெறுகிறது. இரண்டாவது துண்டு மண்டபம் கட்டியதைக் கூறுகிறது.

Summary : On the ardha maṇḍapa infront of the shrine in the same temple. This is broken. The inscription belongs to leter Chōḻa. It mentions Ninravur village and land boundaries.

The bit 2 is modern charactor. Mentions a maṇḍapa.

கல்வெட்டு:

1. கோட்டத்தும்ப . . . . திருவலிதாய . . .
2. லமலப்பா . . . . . . தெற்கெல்லை . . . . . .
3. கல்யாணபுரம் . . . . . பிகம்பட்டி
4. ம்பாற் செங்கரை சரார் . . மும் வடபாற்
5. க்கம் பட்டியு மிந்நான் கெல்லை யுள்ளு . . வி
6. ட்ட நிலம் திருவலிதாயிலமா கொக்குஞ்
7. கொட்டுவதற்கு நட்ட . . . திரப்பாடிக்

8. கணக . . . படியும் நின்றவூர் சொறுவூர் . .

9. ங்கின . . . யோம் சிலைக்கான . . .

10. க்கு . . . . . .

11. லங்க . . . . . ச்சே

கோயில் குருக்கள் வீட்டின் வாயில் படி துண்டுக்கல்வெட்டு 2A

1. . . . . . ஆரியகர ரிஷி கோத்திர

2. த்து யீசுவரச் செட்டி . . . திருவல்லியீசுர

3. . . . காறன் செங்குன்ற

4. கட்டிவச்ச மண்டபம் பாடி செகணிமா சகாயம்.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 319/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 9
வட்டம்	: அம்பத்தூர்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ.1225
ஊர்	: பாடி	இ.க. ஆண்டறிக்கை	: 218/1910
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ.36 எண்.218
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 15
அரசன்	: மூன்றாம் இராசராசன்		

இடம் : திருவல்லீஸ்வரமுடையார் கோயில் மண்டபத்தின் தென்புறச் சுவர்.

குறிப்புரை : மூன்றாம் இராசராசனுடைய ஒன்பதாவது ஆட்சியாண்டில் வெட்டப்பட்ட இக்கல்வெட்டு, பழையதானத்தை உறுதிப்படுத்தி வெளியிட்ட விவரத்தைக் கூறுகிறது. சிந்தாமணிபுரத்தில்1200 குழி நிலம் சூரியன் பையூர் நாடாழ்வாள் அசங்கா . . . . (ஒருசில சொற்கள் மறைந்து விட்டன) முன்னதாக திருவலிதாயநாயனாற்கு வழங்கியிருந்தான். பூந்தோட்டம் இரண்டும் மனை இரண்டும் உட்பட குழி 1200 ஆகும். சாளுக்கி நாராயணன் யாதவராயன் மீண்டும் கோயிலுக்கு நிலம் வழங்க ஆணையிட்டுள்ளான்.

Summary : On the south wall of the maṇḍapa in front of the central shrine in the same temple. Chōḻa Rājarāja III-year 9. (1225 C.E.)

Seems to refer an old grant of 1200 kuḻis of land as dēvadāna in Chintāmaṇipuram to the temple of Tiruvalidāyamudiya Nāyanār by Nādālvāṉ of Chūriyaṇ Paiyyūr. These lands were then regranted by Yādavarāyaṉ.

கல்வெட்டு:

1. [திரிபு] வநச் சக்கரவத்திகள் ஸ்ரீஇராசராச தேவற்கு யாண்டு கூ வது செயங்கொண்ட சோழ மண்-
2. [டலத்து]ப் புழற் கோட்டமான விக்கிர[ம] சோழ வளநாட்டு அம்பத்தூர் நாட்டு திருவல்லிதாயத்தில் பிறி
3. . . . . ந்தில் சிந்தாமணிபுரம் திருவல்லிதாயமுடைய நாயனார்க்கு சூரியன் பையூர் நாடாழ்வாந் அசங்கா
4. . . . ன் இவ்வூரில் மேவிய பூந்தோட்டம் இரண்டும் மனை இரண்டும் உட்பட குழி ஆயிரத்திரு நூறு

5. . . . இத்தேவற்குத் தேவதானமாக ஒன்பதாவது முதல் சந்திராதித்தவரை செய்யக்கடவதாகவு வி . . . . .

6. [ம் இவன்] விட்ட படியே இந்நாயனாற்குச் சாளுக்கி நாராயணந் யாதவராயநேன் விட்டேன்.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 320/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 31
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ.1208
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: 673/1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ.17 எண்.730
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 1
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கள்		

இடம் : திருமாசிலாமணியீஸ்வரர் கோயில் அர்த்தமண்டப வடக்குச் சுவர்.

குறிப்புரை : வட திருமுல்லைவாயில் ஆவடியருகே உள்ள பாடல் பெற்ற தலமாகும். இங்கே எழுந்தருளும் இறைவனை மாசிலாமணியீஸ்வரர் என்று அழைப்பர். மூன்றாம் குலோத்துங்க சோழனாகிய திரிபுவன வீரதேவர் 31-ஆம் ஆட்சியாண்டு சாசனம், ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துப் புழற் கோட்டத்துக் கானப்பேறூர் நாட்டில் திருமுல்லைவாயிலுடையார் என்ற பெயரில் திருமுல்லைவாயிலில் சிவன் கோயில் இருந்ததைக் குறிப்பிடுகிறது.

பதிபாதமூலபட்டுடைய பஞ்சாரியன், தேவகன்மி, சீமாஹேஸ்வர கண்காணி செய்பவர் மற்றும் சீகாரியம் செய்வார் பொறுப்பில் கோயில் இருந்துள்ளது. சிதம்பரம் நடராசர் கோயிலும் இதேபோல் பல அமைப்புகளின் மேற்பார்வையில் இருந்ததை அங்குள்ள பல கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

திருமுல்லைவாயில் கோயிலுடன் இணைந்த திருபுவன வீரமடத்தின் பொறுப்பில் தவசி காஸ்யபன் இருந்துள்ளார். கோயில் தேவதானமான நிலமும் மடப்புறமான நிலமும் இறையிலியாக வழங்க மன்னன் ஆணையிட்டுள்ளான். இந்த ஆவணத்தில் பல அதிகாரிகள் ஒப்பம் இட்டுள்ளார்கள். தானநிலங்களின் எல்லைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. பல்வேறு கோயில்களும், நீர்நிலைகளும் பல்வேறு நிலங்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. பரகேசரி நல்லூர் என்ற ஊர் கூறப்படுகிறது. வாணாதிராயர் என்பவர் பெரிய பொறுப்பில் இருந்துள்ளார் நிலங்களின் அளவுகள் கூறப்பட்டுள்ளன.

Summary : On the north wall of the ardha maṇḍapa in the Māsilāmaṇīśvara temple at Tirumullaivāyil. King - Kulōttuṅga III. Regnal year 31.

This records the grant of lands in Mudalai mēdu alias Parākēsarinallūr̲ in Vaḍapaiyyūr and made tax-free by the king at the instance of Vānādarāyaṉ as dēvadāṉa and maḍappura iraiyili to the temple of Tirumullaivāiyil Uḍaiyār and to the Tribhuvana Vīran matha founded

at the Tirumadaivilāgam by Tapasya Kāsyapaṉ, a Siva brāhamana of the temple.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீதிரிபுவந வீர தேவற்கு யாண்டு ௩௰௧ நாள் '௰' னால் கேனேரின்மை கொண்டான் சயங்கொண்ட சோழ மண்டலத்து புழற்கோட்டத்து காநப்பேறூர் நாட்டு உடையார் திருமுல்லை வாயிலுடையார் கோயிற் பதிபாத மூலபட்டுடை பஞ்சாசாரியன் தேவகன்மி சீமாஹேஸ்வரக் கண்காணி செய்வார்களுக்கு சீகாரியஞ்செய்வானுக்[கு] இத்தேவற்கு வேண்டு நிவந்தங் க-

2. ளுக்கு யிறுப்பதாக வடபைய்யூர் கோட்டத்து அரைசூர் நிலைக்கீழ் முதலை மேடாந பரகேசரி நல்லூர் நன்செய் விளைநிலத்திலே நில எ௰உ ஐ வேலியும் புந்செய் [விளைநி]லத்திலே நில ஈ௰௩ ௩ப வேலியும் இத்தேவர் தேவதான யிறைலியாகவும் இக்கோயிலில் சிவ஬்ராஹ்மன் தபஸ்ய காஸ்யபன் ஜயங்கொண்ட சோழ நம்பி இக்கோயிலில் திருமடைவிளாகத்தில் எடுத்த திரிபுவந வீரந் மடத்துப்-

3. பரிசாரகற்கும் மடத்துக்கு வேண்டுவநத்துக்கு இவ்வூரில் கண்ட மடங்க நன்செய்விளை நில '௰' வேலியும் புன்செய் விளை நில 'ரு' வேலியும் மடப்புற இறையிலியாகவு[ம்] இவ்வூர் நத்தமும் சாத்தப்பன் சேரி நத்தமும் வடுகச்சாத்து நத்தமும் நில ௩வ சச உள்ளூர் மாதேவர் சீகோயிலும் திருநந்தவந நில உப துற்கைசீகோயில் நில உகீழ் ஐப [வீ]ற்றிருந்தாழ்வார்சீ கோயிலும்

4. திருநந்தவனமும் நில ௲ கூவ ஒத க்கீழ் 'ரு' உப இவூர் குருக்கத்திப் பூண்டி நத்தநில[ம்] உப ம் உகூாதேவர் சீ கோயிலுந் திருநந்தவந நில ப ஏரியால் நிலபகூகஉ . . கீழ் வ[ஈ]பிடாரி புத்தேரி அம்மை கோயிலும் திருநந்தவன நில ஹ ஒத கீழ் ரு உப கேரளாந்தக சதுர்வேதிமங்கலத்து நீர் பாயும் ஆற்றுகாலால் நில கஹ சிறுகாடும் கரம்பு நில ௰கூவ[ம்] சிறுகுளம் உ௰எ .

5. னால் நில எஇப ஒத கீழ் ரு உப ரு ம் ஓடைகளால் ரு ஒத ம் பவளம் பம்பாத்தேரி கோவை ரு உ ம் தெற்கில் தாங்கலால் நில௩ப ஊர் ஏரிக்கரை நீர் கோவை நில ரு௰ ஒஹ ம் அத்தி அண்ணன் ஏரி நில ௩ இபம் சுடுகாடு நில ௩பம் ஆக நில ௩ாசவ பகூ இதில் உள்ளூர் தேவர்கள் சீகோயிலும் திருநந்தவனழிவு இட்டநிலமுள்பட ஊரடங்கலும் தேவதாந யிறையிலியாகவும் மடப்புற

6. யிறையிலியாகவு[ம்] அந்தராயம் பா[ட்]டம் பொந் நாயம் நெல்லாய முள்பட யிறையிலி பெறவேணும் என்று யிக்கோயில் சிவ஬்ராஹ்மந் தபஸ்ய காஸ்யபன்

ஜயங்கொண்ட சோழ நம்பியைக் காட்டி வாணாதராயன் நமக்குச் சொன்நமையில் யிப்படி செய்யக்கடவதாகச் சொல்லி தன்க . . . . .

7. வற்கு தேவதான யிறையிலியாகவும் மடப்புற யிறையிலியாகவும் கைக்கொண்டு நிவந்தஞ் செலுத்தப்பண்ணுக எழுதிநான் திருமந்திர ஓலை இராச நாராயண மூவேந்த வேளான் திருவாய் மலர்ந்தருளின படிக்கு இவை வில்லவராயன் எழுத்து இவை விழிஞ்சத்தரையன் எழுத்து இவை வய–

8. சித்தராயன் எழுத்து இவை தொண்டைமான் எழுத்து ௨ உள்வரிக்கு எழுத்திட்டார் புரவுவரிக் கூற்றுக்கு திரு சிங்க வாணாதராயன் எழுத்து ௨ [இவ்வூர்] புரவுவரி பொத்தக நாயகம் இவை சிற்றாமூருடையான் எழுத்து இவை சேந்தமங்கலமுடையாந் எழுத்து இவை புதுவூரு . . . .

(கல்வெட்டு முடியவில்லை.)

நீ - நிலம், Ꮁமு - மூன்று மா

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 321/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 4
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: –
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: 672/1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ.17 எண்.729
எழுத்து	: தமிழ்		
அரசு	: தெலுங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 2
அரசன்	: பொத்தப்பிச் சோழன்		

இடம் : திருமாசிலாமணியீஸ்வரர் கோயில் அர்த்த மண்டப வடக்குச் சுவர்.

குறிப்புரை : மதுராந்தக பொத்தப்பிச் சோழன் தன்னுடைய நான்காம் ஆட்சியாண்டின் போது ஓர் ஆணையைத் திருமுல்லைவாயிலுடைய மகாதேவர் கோயிலுக்கு அனுப்பி வைத்துள்ளான். பொன்வரி உள்ளிட்ட வரிகள் கொள்ளும்போது 10 வேலி நிலத்துக்கு மேல் உள்ளவர்க்கே பொன்வரி முதலான வரிவிதிக்க வேண்டும் என்றும் குற்றப்பட்டி, சீகாரியப்பேறு முதலியவை கோயில் திருப்பணிக்கு முதலீடாகக் கொள்ளவும் உத்தரவிட்டு ஒப்பமும் இட்டுள்ளான். திருவோத்தூரில் உள்ள பொத்தப்பி சோழனின் கல்வெட்டும் வரி குறைப்பையே சுட்டுகிறது.

Summary : On the north wall of the ardhamaṇḍapa in the same temple. King Madurāntaga pottappi chōḻa. Regnal year 4.

This inscription records the order of king to the effect that taxes like ponvari's etc. should be levied only on 10 vēli of land and that the levies kuṟṟappaṭṭi and srikārya pēṟu were remitted for services in the temple of Tirumullaivāyil - Udaiya nāyanār.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன் ஓலை உடையார் திருமுல்லைவாயிலுடைய நாயனார் கோயில் [தானத்தார்]
2. கண்டு விடை திருமுல்லைவாயில் நாலாவது முதல் தரத்தில் வரும் பொன்வரி உள்ளிட்ட வரிகள் கொள்ளுமிடத்து பத்துவேலி நிலத்துக்கு-
3. க் கொள்ளவும் குற்றப்பட்டியும் சீகாரிய பேறு திருப்பணிக்கு உடலாக விட்டோம் இப்படி செய்வதே இவை கண்ட கோபாலன் எழுத்து.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 322/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 16
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: பொது.ஆ.1232
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: 674/1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ.17 எண்.731
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 3
அரசன்	: மூன்றாம் இராசராசன்		

இடம் : திருமாசிலாமணியீஸ்வரர் கோயில் அர்த்த மண்டபச் சுவர்.

குறிப்புரை : மூன்றாம் இராசராசனுடைய 16-ஆவது ஆட்சியின்போது அகரம் கோழிப்பதாகையான குலோத்துங்க சோழ சதுர்வேதி மங்கலச்சபை, 156 வேலி நிலத்தைக் கோயிலுக்கு விற்றுள்ளது. விலை 60 பழம்புள்ளி மாடையாகும். நிலஎல்லை கூறும் போது ஐய்யப்பன் ஏரி, நின்றையூர் பெருவழி, போன்றவை சுட்டப்படுகின்றன. கோழிப்பதாகையுடையான் தழுவக்குழைந்தான் மத்யஸ்தன் ஆவான். நின்றையூர் - திருநின்றவூர்.

Summary : On the north wall of the ardhamaṇḍapa in the Māsilāmaṇiīśvara temple. King Rājarāja III. Regnal year-16 (1231 C.E.).

This inscription records the sale of 156 vēli of lands with rights of irrigation, for 60 pullimādai by the mahāsabhā of agaram as tirunāmattukāni to the deity. This is detailing the boundaries of land. The record mentions the high way at Ninṟavūr; pullimāḍai - one of coin varaity.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவன சக்ரவத்திகள் ஸ்ரீராஜராஜதேவற்கு யாண்டு ௧௬ வது ஜயங்கொண்ட சோழ ம -
2. ண்டலத்துப் புழற்கோட்டத்துக் கானப்பேறூர் நாட்டு அகரம் கோழிப் பதாகையான கு-
3. லோத்துங்க சோழச் சதுர்வேதி மங்கலத்து மஹாஸபையோம் எங்களூர் ஆய மானை[ட]-
4. க்கு திருமுல்லைவாயிலுடைய மஹாதேவற்கு எங்களூர் நாங்கள் விற்றுக்குடுத்த நிலமா-

5. வது கீழ்கழனி ஐய்யன் ஏரியும் கழனிக்கும் கீழ்பாற்கெல்லை திருமுல்லைவாயில்

6. எல்லைக்கு மேற்கும் தென்பாற்கெல்லை நின்றவூர் பெருவழிக்கு வடக்கும் மேல்பா-

7. ற்கெல்லை தண்டங் கழிக்கும் ஐய்யனேரி மேல்கடைக்கும் வடக்கில் புளியங்கு-

8. டிக்கும் குட்டிசெறுவுக்குக் கிழக்கு சேரிமேடு நத்தமும் வடபாற்கெல்லை விளக்குப்பட்டிக்கும் திருக்காளேரி கரைக்கு தெற்கும்

9. யின்னான் கெல்லையுளகப்பட்ட நிலம் பதினைய் வேலியும் இத்தேவற்கு விற்று நாங்கள் கைக்கொண்ட பழம் புள்ளிமா-

10. டை ௬ய இம்மாடை அறுபதும் கைக்கொண்டு இன்னிலம் திருநாமத்துக்காணியாக விற்று இன்னிலத்துக்கு எங்களூர் பெரி-

11. யேரி நீரும் பாயக்கடவதாகச் சிலாலேகை பண்ணிக் குடுத்தோம் கோழிப்பதாகை ஊஹாஸமெஹெயொம் ஸமெஹ பணியால் ஊஜூஷூந

12. . . . கோழிப்பதாகையுடையான் தழுவக் குழைந்தான் எழுத்து ः ௨

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 323/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: பொது.ஆ.1388
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: 675/1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ.17 எண்.732
எழுத்து	: தமிழ்		
அரசு	: விஜயநகரப் பேரரசு	ஊர்க் கல்வெட்டு எண்	: 4-1, 4-2.
அரசன்	: இரண்டாம் ஹரிஹரன்		
இடம்	: திருமாசிலாமணியீஸ்வரர் கோயில் கருவறை வடபுறச் சுவர்.		

குறிப்புரை : விஜயநகர மன்னன் இரண்டாம் ஹரிஹரன் காலத்தில் வெட்டப்பட்ட இக்கல்வெட்டில் காலக்குறிப்பு தவறாக இருப்பதாகக் கல்வெட்டு தொகுதி கூறுகிறது. சரியான பொது ஆண்டு 1388 ஆகும். திருமுல்லைவாயில் உடைய நாயனார் பாடி வேட்டைவிழாவிற்காக வல்லங்கிழான் சோழ பல்லவதரையர் இறையிலி மான்யமாக 400 குழி நிலம் வழங்கியுள்ளான். வீதி உலாவுடன் உலகுய்ய கொண்டான் திருத்தோப்பில் உற்சவர் எழுந்தருள ஏற்பாடும் செய்துள்ளான். சிலர் ஒப்பமிட்டுள்ளனர். 32 அடிகோலால் நிலம் அளக்கப்பட்டது.

Summary : On the north wall of the central shrine in the same temple. King - Harihara II year 1388 c.c. . Inhabitants This inscription records the gift of 400 kuḻi of land made tax free by the of Ambattūr to the deity for the conduct of hunting festivals on Sankrāma days taking out the deity to the Ulaguyyakkoṇḍār tiruttōppu. It also mentions the measuring rod 32 adi Kōl.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமநு மஹா மண்டலீஸ்வர ஹரியராயவிஹாடந் ஹாஷைக்குத் தப்புஇராயர் கண்ட ஸ்ரீவீரப்ரதாப ஹரியராய மஹாராயற்கு செல்லா நின்ற
2. ப்ரூஹவ ஸம்வத்ஸரத்து மகர நாயிற்று பூவ்வபக்ஷத்து திங்கள் கிழமையும் பஞ்சமியும் பெற்றஅனிழத்து நாள் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து புழற்கோட்ட-
3. ம் ஆன விக்கிறம சோழ வளநாட்டு கானப்பேறூர் நாட்டு உடையார் திருமுல்லை வாயல் உடைய நயிநாற்கு இம்மண்டலத்து இக்கோட்டத்து அம்பத்தூர் நா-

4. ட்டு அம்பத்தூர் வல்லங்கிழான் சோழப் பல்லவ தரைய(ர)ர்களோம் உடையார் திருமுல்லை வாயல் உடைய நாயினார் சங்கறமப் பாடி வேட்டைக்கு எங்க-

5. ள் ஊரில் திருவீதியும் எழுந்தருளி உலகுய்ய கொண்டாந் திருக்தோப்பில் ஏறி அருளுகையில் மண்டப[த்து] குறைவுறுப்புக்கு எங்கள் ஊரில் ஏரியெதிர் வர[ம்பி]லே அ]மநிப்ப]-

6. த்தில் எல்லைக்கு கிழக்கு எல்லை ஆகையிலே பேரளவு கோலால் யிந்த உபையத்துக்கு இறையிலி மான்யமாக விட்ட நிஉ [குழி] சா இக்குழி நானூறும் முப்பத்திரண்டு அடிக்கோலால் கை-

7. க் கொண்டு மண்டபக் குறைவ[று]ப்பால் உள்ளது ஸ்ரீபண்டாரத்திலே நடத்திக் கொள்ளக் கடவர்களாகவும் இந்த நிலத்துக்கு அறுநீர் பெருநீர் கூடைநீர் இறைத்துக் கொள்ளவும்

8. தீணீர் உள்ள இடத்தில் குடலைதுரவு இட்டு இறைத்துகொள்ள கடவர்களாகவும் இப்படிக்கு திருநாமத்துக்காணி இறையிலிமானியமாக சந்திராதித்தவரை செல்வதாக சிலாலே-

9. கை பண்ணிக் குடுத்தோம் உடையார் திருமுல்லைவாயிலுடைய நாயினார்க்கு அம்பத்தூர் ஊரவரோம் இப்படிக்கு இவை சோழ பல்லவரையர்கள் கோதை ஆழ்வார் எழுத்து

10. இவை ஆண்டார் எழுத்து இவை வேங்கடவர் எழுத்து இவை அருளாளநாதர் எழுத்து இவை திருமங்கை ஆழ்வார் எழுத்து இவர்கள் சொல்ல சிலாலேகை பண்ணிந[ம]மக்கு-

11. பெருமுனை ஊர் உடையான் வானவர் ஈசர் எழுத்து இந்த உபயத்துக்கு அகிதம் பண்ணினவர்கள் கங்கைகரையில் கபிலையைக்கொன்ற பாவத்திலே போகக் கடவார்களா

12. கவும் உ ஸ்ரீமாஹேஸ்வரரக்ஷை உ

[குழி] - குழி

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 324/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: பொது.ஆ.1400
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: 671/1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ.17 எண்.728
எழுத்து	: தமிழ்		
அரசு	: விஜயநகரப் பேரரசு	ஊர்க் கல்வெட்டு எண்	: 5
அரசன்	: இரண்டாம் ஹரிஹரன்		

இடம் : திருமாசிலாமணி ஈஸ்வரர் கோயில் கருவறை வடபுற ஜகதிப்படை.

குறிப்புரை : இரண்டாம் ஹரிஹரன் ஆட்சியின்போது திருமுல்லைவாயில் உடையார்க்கு ஆகுடி நாட்டின் கொல்லையில் நற்பாக்கிழான் கொற்றளப்பான் சூரிய தேவன் என்பவன் பல பூஜைபாத்திரங்களை வழங்கியுள்ளான். பாத்திரங்களின் எடைகளும் கூறப்பட்டுள்ளன. சூரியப்பிள்ளை என்பவர் திருவந்திகாப்பில் பயன்படுத்தும் நெய்க்காக 25 பணம் முதலீடாக வழங்கியுள்ளான். எடை என்பது இடை எனப்பேச்சு நடையில் உள்ளது. சிலவாக - செலவாக என்க.

Summary : On the north wall of the central shrine in the same temple. King - Harihara II. year 1400 C.E.

This inscription records the gift of some materials used in worship (Tirumuttu) suchas Tiruvaṭṭanaikkāl tiruvēdikkāppu taligai in all weiging 200 palams by Naṟppāk kīlaṉ of Ākudināḍu to the deity. Sūriyappillai deposited 25 panam towards the supply of ghee when the tiruvandikkāppu ceremony is conducted.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ உந்மஹா மண்டலீஸ்வர அரியரர்க்குச் செல்லாநின்ற விக்கிரம வருஷம் ஜயங்கொண்டசோழ மண்டலத்து புழற்கோட்டத்து-
2. கானப் பேறூர் நாட்டு உடையார் திருமுல்லைவாயில் உடைய நாயினாற்க்கு இக்கோட்டத்தில் ஆகுடி நாட்டில் கோலடியில்-
3. நற்பாக்கிழான் கொற்றளப்பான் சூரியதேவன் இட்ட திருமுட்டு திருவட்டணைக்கா லிரண்டினாலிடை நூறும்-
4. திருவந்திக் காப்பு த[க]ட்டி இரண்டினாலிடை ஐம்பதும் தளிகை ஒன்று[றி] னாலிடை ஐய்ம்பதும் ஆக திருமுட்டு அஞ்சு[சி]நால்-

5. இடை இருநூறும் சன்திராதித்தவரை நடக்கும்படிக்கு சிலாலேகை பண்ணிக்குடுத்தேன் இப்படிக்கு இவை
6. நற்பாக்கிழான் சூரிய தேவன்னேன் ஸ்ரீமாஹேஸ்வர ரக்ஷை இத்திருவந்திக் காப்பு கட்டி இரண்டுக்கு-
7. ம் திருமுன் பணி மாறுகையில்
8. வாற்க்கும் நெயிக்கு சூரியப்பிள்ளை
9. பக்கல் நாங்கள் பற்றிக் கொண்ட
10. உமிரு க்கும் பலிசைக்கு சிலவாக-
11. சந்திராதித்த வரை வாற்[ர்ப்]பதாகச் சி-
12. லாலேகை பண்ணிக் குடுத்தோம் வ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 325/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 17
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: பொது.ஆ. 1267-68
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: 670/1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ.17 எண்.727
எழுத்து	: தமிழ்		
அரசு	: பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 6
அரசன்	: முதலாம் சுந்தரபாண்டியன்		

இடம் : திருமாசிலாமணி ஈஸ்வரர் கோயில் கருவறை மேற்குச்சுவர்.

குறிப்புரை : சுந்தரபாண்டியன் ஆட்சியின்போது திருமுல்லைவாயில் உடைய நாயனார் பூசைக்கும் திருப்பணிக்கும் சந்தி அமுதுக்கும் திருவைகாசியில் சுவாமி எழுந்தருளவும் வேண்டி, விக்கிரம சோழவள நாட்டாரிடம் 148 காசை (மாடையை)ச் செந்தாமரைக்கண்ணன் என்பவர் முதலீடாக அளித்துள்ளார். ஒவ்வொன்றுக்கும் ஒதுக்கப்படவேண்டிய பங்கும் கூறப்பட்டுள்ளது. இக்கொடை கல்லிலும் செம்பிலும் வெட்டுமாறு கூறப்பட்டுள்ளது. சித்திரமேழி வேளான் இதனை எழுதியுள்ளான். முதலீட்டை 148 காசில் பாதி பணம் தேவதானமாக நிலம் வாங்கப்பட்டது மீதி திருப்பணிக்குச் செலவிடப்பட்டது. நில வருவாயில் பாதியாக்கி அப்பாதியில் பாதிவரியாக விதிக்கப்பட்டது. மீதி கொண்டு திருப்பணி, திருவிழாக்களுக்கு செலவிடலாம் முதலாண்டு விளை நிலத்துக்குப் பாதி போகம் அப்பாதியில் பாதிவரியாகும்.

Summary : On the west wall of the central shrine in the same temple. Pandiyan Jatāvarman Sundrapāṇḍiyan̲. Regnal year 17. (1267C.E.)

This inscription records an agreement among the inhabitants of Pul̲ar-kōṭṭtam, regarding a gift of 148 mādai by Sendāmaraikkaṇṇan̲ for conducting a special service, called Vikkiraasolavaḷanattār Sandi the Vaikasi festivals and for repairs in the temple of Tirumullaivāyil - udaiyanāyanār.

கல்வெட்டு :

1. கோற்சட பந்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு 'யஎ'[ஆ]வது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து புழற்கோட்ட-
2. மான விக்கி[ர]ஊச்சோழ வளநாட்டு நாட்டவரோம் விவஸ்ஷை இன்னாட்டு உடையார் திருமுல்லைவாயிலுடைய நாயனார்க்குப் பூசைக்கும் திருப்பணிக்கும் நாட்டுப் பே-

3. ரால் விக்கிரமசோழ வளநாட்டார் சந்தி அமுது செய்தருளவும் திருவைகாசித் திருநாள் எழுந்தருளிவிக்கவும் இந்நாயனார் தேவதானம் திருநா-

4. மத்துக் காணியான கானப்பேறூர் நாட்டுத் திருமுல்லை வாயில் செந்தாமரைக் கண்ணந் தரப்படி மாடை நூற்றுநாற்பத்து எட்டுக்கு நாட்டார் விவ-

5. ஸ்தைப்படி பணத்தில் இறுக்க நிச்சயித்த ஒன்றுபாதி பண[ம்] நீக்கி நீக்கிப் பூசைக்கும் திருப்பணிக்கும் திருநாளுக்கும் கழித்த ஒன்று பா[தி]

6. ஒன்றுபாதியால் வந்த பணம் நாட்டிலே இறுக்கக்கடவோமாகவும் பயிர் [தீட்டிக்]கடமை கொள்ளும் ஆண்டுக்கு திட்டின் பயிருக்கு பத்தில்

7. ஐஞ்சு நீக்கி நீக்கி நின்ற முதலில் ஒன்று பாதியால் வரும் முதல் நாட்டிலே ஏற்றி இறுக்கக் கடவோம் இப்படிக்கு சந்திராதித்தவரை செல்வதாக செம்பி-

8. லும் கல்லிலும் வெட்டிக்கொள்ளச் சம்மதித்தோம் புழற்கோட்டமான விக்கிரம சோழ வளநாட்டவரோம் இவை சித்திரமேழி வேளன் எழுத்து இது பன்மாஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 326/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 14
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: பொது.ஆ. 984
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: 669/1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ.III எண்.141
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 7
அரசன்	: உத்தமசோழன்		

இடம் : திருமாசிலாமணி ஈஸ்வரர் கோயில் கருவறைமேற்கு மற்றும் தென்புற அதிட்டானம்.

குறிப்புரை : உத்தமசோழனுடைய ஆட்சியின்போது இவனுடைய தாயாரும் கண்டராதித்த சோழனின் தேவியுமான செம்பியன் மாதேவியார் 9300 குழிநிலம் அம்பத்தூர் சபையாரிடம் விலைக்கு வாங்கி இறையிழிச்சி, கோயிலுக்கு வழங்க ஏற்பாடு செய்துள்ளார். நிலத்தின் விலை 85 கழஞ்சாகும். நிலம் எங்கெங்கு எவ்வளவு குழி என்ற விவரமும் சாசனத்தில் உள்ளது. வண்ணக்கன் ஆன வயனசுந்தரன் என்பவன் நிலத்தைப் பெற்றுக் கொண்டு தினமும் நாழி எண்ணெய் வழங்க வேண்டும். நீர்ப்பாய்ச்சும் உரிமை (தலைநீர், கடைநீர்) சுட்டடப்படுகிறது.

Summary : On the south wall of the central shrine in the same temple. King Uttama - Chōḻadeva. Regnal year 14 (984 C.E.).

Sempiyaṉmādēviyār, the daughter maḻavaraiyar and wife of Gaṇḍarāditya perumāl. purchased 9300 kuḻi lands and donated to the temple of the sabha sold the above lands 85 kalanju with iṟaiyili. The land boundries and rights are mentioned.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேஸரி வꠢ்மரான உத்தꠢ சோழ தேவர்க்கு யாண்டு ௰௪ ல்லாவது மழவரையர் மகளார் ஸ்ரீகண்டி[ட]ராதித்தபெருமாள் தேவியார் செம்பியன் மாதேவியார் பக்கல் புழற்கோட்டத்து அ[ம்]பத்தூர் நாட்டு அம்பத்தூர் ஸபெயொ–

2. ம் பொன் எண்பதின் கழஞ்சு கொண்டு இறையிழச்சி வைச்ச நிலம் கீழேரிப்பட்டு மேல்பாற்கெல்லை பூண்டி வாய்த்துறைக்குக் கிழக்கும் தென்பாற்கெல்லை கீரைநல்லூர் ஒழுற்கை சாந்தி குண்டிலும் உட்ப்பட வடக்கும் கீழ்பாற்கெல்லை மு-

3. னைந[ல்]லூர்க்குப் போன பெருவதிக்கு மேற்கும் வடபாற்கெல்லை ஏரிகரைக்குத் தெற்கும் (இ)வ்வூர் நாப்[ற்]பாற்கெல்லையுமுட்பட்ட நிலம் பதிநாறு சாண் கோல்லால் கோயிலான்பட்டி குழி ஆயிரத்திரு நூறும் இதின் கீழைச்செறு குழி ஆயிரமும்

4. இதன் தெற்கில் மேட்டேத்தம் குழி ஆயிரமும் பள்ளக்கழுவல் குழி அறுநூறும் இதன் தெற்கில் மேட்டேத்தம் குழி ஆயிரத்திருனூறும் இதன் வடக்கில் மணலிடும் கோரைக்குழியும் முப்படகுழி ஆயிரமும் புஞ்சை விளைநிலம் மாரத்து மாலைகொ-

5. ல்லை யுட்பட குழி மூவாயிரத்து இருனூறும் ஆக குழி ஒன்பதனாயிரத்து முன்னூறும் நம்பிராட்டியார் செம்பியன் மாதேவியார்க்கு இறையிழிச்சி விற்றுக் குடுத்தோம் அம்பத்தூர் ஸ஭ையோம் யின்னிலங் கொண்டு திருமுல்லைவாயில் உடை-

6. ய மாதேவர்க்கு நிசதம் நாழி எண்ணை அட்டக் கடவனாக அட்டுமிடத்து தன் கூட்டமுடையான் வண்ணக்கனான வயன சுந்தரன் இன்னிலத்துக்கு எங்கள் ஏரியில் தலை நீரும் கடைநீரும் பாய்ச்சிக் கொள்ளக் கடவனாகவும் இன்னிலத்தில் மேனோ-

7. க்கிய மரமும் கீனோக்கிய கிணறும் அனுபவிக்க பெறுவராகவும் இன்னிங் குடி யாதொன்றும் பேசப்பெறாதோமாகவும் இப்பரிசு பெற்றுக் குடுத்தோம் அம்பத்தூர் ஊராஸ஭ையோம் இவர்கள் பணியால் இவ்வூர் மத்தியஸ்தன் சூற்றி கண்டத்தமுதனேன் இ -

8. வை என் எழுத்து இது வநூஹேஸவரர ஸைஷ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 327/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 15
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: பொது.ஆ. 1265-66
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: 666/1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ.XVIIஎண்.723
எழுத்து	: தமிழ்		
அரசு	: பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 8
அரசன்	: முதலாம் சுந்தரபாண்டியன்		

இடம் : திருமாசிலாமணி ஈஸ்வரர் கோயில் கருவறைத் தென்புறச் சுவர்.

குறிப்புரை : சுந்தரபாண்டியனுடைய ஆட்சியின்போது (பொ.ஆ1265) புழற்கோட்டத்து நாட்டவரும் ஈக்காடுக் கோட்டத்து நாட்டவரும் திருமுல்லைவாயில் உடையார்க்குத் திருமஞ்சனத்துக்கும் சாத்துப்படி பூச்சுப்படிக்கும் முதலீடாகச் சில வரிகளைக் கோயிலுக்கு வழங்கியுள்ளனர். சான்றாக ஊர்கடமை, ஆயம், மன்றாடிகள்மேற் சாதவரி மற்றும் எப்பேர்பட்ட புறக்கலனையால் வரும் வரிகளும் இறையிலி சர்வமான்யமாக வழங்கப்பட்டது. சித்தர மேழிபட்டன் ஒப்பமிட்டுள்ளான்.

Summary : On the south wall of the central shrine in the same temple. King Jatāvarman Sundrapāṇḍiyaṉ I. Regnal year 15 (1265. C.E.).

This records the gift of the proceds from certain taxes like ūrkadamai, āyam etc by the inhabitants (Nattavar) of Pular̠kōṭṭam and Īkkāḍukōṭṭam for repairs and unguents in the temple of Tirumullaivāyiluḍaiya nāyanār at Kānappērūr nāḍu in Pular̠ kōṭṭam in Jayañgoṇḍasōl̠amaṇḍāḷam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோற்சட பன்மர் திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு 'யரு' வது செயங்கொண்ட சோழமண்-
2. டலத்து புழற்கோட்டத்து கானப்பேறூர் நாட்டு உடையார் திருமுல்லை வாயிலுடைய நாயனார்க்கு புழற்கோட்டத்து நா[ட்]டவரும்
3. ஈக்காட்டுக் கோட்டத்து நா[ட்]டவரும் இன்னாயனார்க்குத் திருமஞ்சனத்தக்கும் சாத்துப்படி பூச்சுப்படிக்கும் உடலாக இட்ட திருமுல்லைவா-
4. யிலில் புறக்கலனை இறுக்கும் பலகலனைப் பேரால் ஊர்கடமை ஆயமும் மன்றாடிகள் பேற் சாத வரியும் மற்றும் எப்பேறபட்-

5. ட புறக்கலனையால் உள்ள வரிகளும் ஸவ்ரு மானிய இறையலியாக சந்திராதித்தவரை செல்வதாக *ஶிலாஸெஸெ* பண்ணிக் குடுத்தோம்

6. நாட்டவரோம் இவை பணியால் சித்திரமேழி வேளான் எழுத்து பன்ஶாஹேஶ்ரு *ஶஶஸெகெஷ*

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 328/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 35
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: பொது.ஆ. 1251-52
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: 662/1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ.XVIIஎண்.719
எழுத்து	: தமிழ்		
அரசு	: தெலுங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 9
அரசன்	: விசய கண்ட கோபாலன்		

இடம் : திருமாசிலாமணி ஈஸ்வரர் கோயில் கருவறைத் தெற்கு ஜகதி.

குறிப்புரை : மதுராந்தக பொத்தப்பிச்சோழன் திருமுல்லைவாயிலுடையார் கோயிலில் சித்திரைத் திருநாள் விழா, கண்டகோபாலன் சந்தி அமுது செய்வித்தல், பூசை செய்தல் ஆகிய செலவுகளுக்காகப் பொன்வரி, கடமை, நாட்டுவரி, காணிக்கை, உள்ளூர்ப் புறக்கலனை மற்றும் எப்பேறப்பட்டவரிகளும் சர்வமானிய இறையிலியாக வழங்க வேண்டும் என்று ஆணையிட்டான். கண்டகோபாலன் ஒப்பமிட்டுள்ளான். ஆணை என்ற பொருளில் ஓலை இடம் பெற்றுள்ளது.

Summary : On the south wall of the central shrine in the same temple. King Vijayakaṇḍa Gōpālaṉ Regnal year 35.

This inscription registers the order of Madhurāntaka pottappichōlaṉ granting the Village virumullaivāyil free from the payment of taxes, such as ponvari, nāttuvuri kānikkai puṟakkalaṉai etc, for conducting a festival and for a puja and other food offerings to the deity Tirumullaivayil in Puḻaṟkōṭṭam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மதுராந்தகப் பொத்தப்பிச் சோழ[ன்] ஒலை ௩௰௫ செயங்கொண்ட சோழமண்டலத்து புழல் கோட்டத்து
2. கானப்பேறூ[ர்] நாட்டு உடையார் திருமுல்லை வாயலுடை[ய] நாயனார்க்கு விசையகண்ட கோபாலன் சித்திரைத் தி-
3. ரு நாள் எழுந்தருளவும் விசைய கண்டகோபாலன் சந்தி அமுது செய்யவும் பூசைக்கும் அமுது படிக்கும் திரு-
4. முல்லை வாயல் பொன்வரி கடமை நாட்டுவரி காணிக்கை உள்ளூர்ப் புறக்கலனை மற்றும் எப்பேர்பட்ட வரிகளும்

5. அனைத்து ஆயம் இழிக்க ஸவ்வமானியமாக ஸூர்யசந்திராதித்தவரையும் செல்வதாக விட்டோம் இப்படி செ[ய்]வ-

6. தே இவை கண்டகோபாலன் எழுத்து.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 329/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 35
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: பொது.ஆ. 1403
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: 664/1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ.17 எண்.721
எழுத்து	: தமிழ்		
அரசு	: விஜயநகரப்பேரரசு	ஊர்க் கல்வெட்டு எண்	: 10
அரசன்	: இரண்டாம் ஹரிஹரன்		

இடம் : திருமாசிலாமணி ஈஸ்வரர் கோயில் அர்த்த மண்டபத் தென்புறச் சுவர்.

குறிப்புரை : இரண்டாம் ஹரிஹரன் ஆட்சியின்போது அம்பத்தூர் நாட்டு, அம்பத்தூர் வல்லங்கிழான் சோழப்பல்லவதரையன் அருளாளர் செய்ய நாராயண தேவன், வெண்ணயூர் நாட்டு உண்ணல் ஊரில் கரை நாலில் தன் விழுக்காடு நாலில் ஒருபங்கு நிலத்தைத் திருமுல்லைவாயில் உடைய நாயனார் கோயில் பங்குனி விழாவுக்காக வேண்டி திருநாமத்துக்காணியாக வழங்கியுள்ளார். விழாவில் திருவூடல் திருவிழா ஏழாம் நாள் விழாவாக நடத்தப்பட்ட விவரம் கூறப்பட்டுள்ளது. கொடையைக் கோயிலில் கல்வெட்டாக வெட்டவும் அறக்கட்டளையை நிறைவேற்றவும் உடன்பட்டு, கோயில் அலுவலர்கள் பலர் ஒப்பமிட்டுள்ளனர். சிற்றிலக்கியங்களில் திருவூடல் ஒன்றாகும். உமையம்மையின் ஊடலைச் சிவபெருமான் நீக்க முயல்வார். சுந்தரமூர்த்திநாயனார் ஊடல் தீர்க்க உதவுவார். காண்க திருவீழிமிழலை திருவூடல். சிவபெருமான் உமையம்மை இருவரின் ஊடல் இலக்கியம் இது ஆகும்.

Summary : On the south wall of the ardhamaṇḍapa in the Māsilāmaniēśvarar temple. King Harihararāya - II. year 1403 C.E.

This records the gift of a share (Viḻukkadu) of land in the Village Aṇṇalūr in Veṇṇaiyūr nāḍu by Vallaṅkiḻāṉ Sōḻappallavadaraiyaṉ Arulālanāthar - seyya nārāyanadēvan of Ambattur to the deity. Tirumullaivāyil - udaiya nāyanār, in Kāṉappēṟūr-nādu in Vikkiramasōḻa vaḷanāḍu for conducting the tiruvūdal festival on the seventhday of the festival in the month of Paṅguṉi.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஹரியரராயனுக்குச் செல்லாநின்ற சுபானு சங்வற்சரத்து மகர நாய[யி]ற்று பூறுவ பக்ஷத்து வெள்ளிக்கிழமையும் பூ[ர்]நையும் பெற்ற புணர்பூசத்து நாள் ஜெயங்கொண்ட-

2. சோழ மண்டலத்து புழற்கோட்டம் ஆன விக்கிறம சோழ வளனாட்டு கானப்பேறூர் னாட்டு உடையார் திருமுல்லை வாயல் உடையனாயினாற்கு இம்மண்டலத்து இக்கோட்டத்து அம்ப-
3. த்தூர்னாட்டு அம்பத்தூர் வல்லங்கிழான் சோழப் பல்லவதரையன் அருளாளனாதர் செய்ய நாராயண தேவனேன் காணி உதக பூறுவப் பிறமானம் பண்ணிக் குடுத்தபடி வெண்ணை-
4. யூர் நாட்டு எங்கள் காணியான அண்ணல் ஊர் ஒன்றான கரைநாலில் என் விழுக்காடு நாலில் ஷன்றும் நயினார் திரு பங்குனித் திருனாள் திருவூடல் திருநாள் என உபையத்துக்கு திருநாமத்து-
5. க்காணி ஆக உதகம் பண்ணிக் குடுத்தேன் இந்த உதக பூறுவப்படியே நடத்திக் கொண்டு ஏழாந்திருநாள் திருவூடல் திருனாள் சந்திராதித்த வரைக்கு[ம்] தாழ்வற நடத்திக் கொள்-
6. ளவும் இப்படிக்கு திருமலையிலே சிலாலேகை பண்ணிக் குடுத்தேன். அருளாள நாதர் செய்ய நாராயணத் தேவனேன் இப்படிக்கு இவை அருளாளநாதன் செய்யநா-
7. ராயண தேவன் எழுத்து இப்படி அறிவேன் சோழப் பல்லவதரையன் உலகு உய்யக்கொண்டார் வேங்கடத்தான் எழுத்து இப்படி அறிவேன் சோழ-
8. ப் பல்லவதரையர் வடுகநாதர் திருவேங்கடநாதன் எழுத்து இப்படி அறிவேன் சோழப்பல்லவதரைன் அறம் வளர்த்த நாயன் எழுத்து இ-
9. ப்படி அறிவேன் சோழப் பல்லவதரையன் மலை நின்ற பெருமாள் சமை[ய] முத[லி] எழுத்து
10. இப்படி அறிவேன் சோழப்பல்லவதரையன் [உலகு] தொழா நின்றானேன் இ[ப்]படி அ[றி]வேன்.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 330/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 35
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: பொது.ஆ. 30.09.1424
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: 665/1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ.17 எண்.722
எழுத்து	: தமிழ்		
அரசு	: விஜயநகரப்பேரரசு	ஊர்க் கல்வெட்டு எண்	: 11-1, 11-2
அரசன்	: இரண்டாம் தேவராயர்		

இடம் : திருமாசிலாமணி ஈஸ்வரர் கோயில் கருவறைத் தென்புறச் சுவர்.

குறிப்புரை : விஜயநகர மன்னன் இரண்டாம் தேவராயன் ஆட்சியின்போது (30.9.1424) திருமுல்லைவாயல் உடையார் திருக்கோயிலில் அசங்காதகண்டன் மண்டபத்தில் திருநாள் உற்சவம் நடத்தவும் காடவராயர் திருத்தோப்பில் நடைபெறும் திருநாள் சிறப்புக்கும் மூதலீடாக நிலம் வழங்கப்படுகிறது. ஒற்றி அரைசரும் அரசு பெருமாள் ஆன காடவராயரும் 4000 குழிநிலம் ஒதுக்கினர். அசங்காத கண்டன் அளவுகோலால் நிலம் அளந்து தந்தனர். கோயில் கல்வெட்டு வெட்டுவதுடன் நிலத்திடையே திரிசூலக்கல்லும் நட ஏற்பாடு செய்யப்பட்டது. ஒற்றி அரசர் திருப்பாலைவனம் கல்வெட்டிலும் இடம் பெறுகிறார். அரசு பெருமாள் காடவராயர் கோப்பெருஞ்சிங்கனின் மரபினன் ஆவான். நீராதாரமும் கூறப்படுகிறது. கல்வெட்டில் காலக்குறிப்பு பிழையாக இருப்பதைக் கூறி சரியான தேதி கூறப்படுகிறது.

Summary : On the south wall of the central shrine in the same temple. Year 1424 C.E. King - Devaraya II.

This inscription records the gift of 4000 Kuḻi of land by Oṟṟi maṉṉan alias Uḍaiyār Oṟṟi-arasar and Arasaperumal alsias Kādavarāyar for conducting certain special festivals in the Kāḍavarāyar tiruttōppu (sacred grove) and at the Asaṅgādagaṇḍaṉ - maṇḍapa in the temple from the donors lake (periyeri). Asaṅgadagandaṉ-kōl (Measurerod) also mentions in this inscription.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ இராயர் வ͞காவ ஷெவராயற்க்குச் செல்லாநின்ற கொ͞யி வருஷ௩௰ அற்பசி மாதம் இரண்டாம் தியதி
2. உடையார் திருமுல்லைவாயல் உடையநாயனார் திருநாள் உபயத்துக்கும் அசங்காத கண்டன் மண்டபத்தில் சிறப்புக்கும்

3. காடவராயர் திருத்தோப்பில் ஆ[றா]ந்திருநாள்ச் சிறப்புக்கும் ஒற்றி மன்னரான உடையார் ஒற்றி அரசரும் அரசு பெருமாள் ஆன
4. காடவராயரும் இந்த உபயத்துக்கு எங்கள் காணி ஆட்சி ஆன வெள்ளான் ஊரில் கீழைக் கழனியில் மான்குழிக்கும் தெற்க்கு
5. களங்குழிக்கு வடக்கு முன்னாள் உடையவற்கு விட்ட விளக்குப்பட்டிக்கு மேற்கு அசங்காத கண்டன் அளவுகோலா-
6. ல் விட்டகுழி சகூ இக்குழி நாலாயிரமும் கைக்கொண்டு இந்த உபயம் இரண்டும் சந்திராதித்த வரையும் நடத்தக் கட-
7. வதாகவும் இப்படிக்கு திருக்கோயிலிலே திருக்கட்டளையிலே சிலாலேகையும் பண்ணி இந்நிலத்திற் திருச்சூலத்தாபநமும் பண்ணி-
8. க்குடுத்தோம் இந்நிலத்திற்க்கு எங்கள் பெரியேரி பெரும் நீரும், ஆறு நீரும், நீரும் பாயக்கடவதாகவும் இப்படிக்கு சந்திராதித்தவரையும நடக்கக்க -
9. டவதாக கல்வெட்டிக் குடுத்தோம் ஒற்றி அரசன் காடவராயரோம் இப்படிக்கு இவை ஒற்றி அரசர் எழுத்து இப்படி
10. க்கு இவை காடவராயர் எழுத்து.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 331/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 21
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: பொது.ஆ. 1198-99
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: 667/1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ.17 எண்.724
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 12
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		

இடம் : திருமாசிலாமணீ ஈஸ்வரர் கோயில் அர்த்தமண்டபத் தெற்குச் சுவர்.

குறிப்புரை : மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியின்போது திருமுல்லைவாயில் உடையார் கோயிலில் திருநந்தாவிளக்கு இரண்டு வைக்க, சிவபூதன் மதுசூதன் வானசர்நாயன் 24 மாடையைக் கோயில் சிவப்பிராமணரிடம் வழங்கியுள்ளான். முதலீட்டைப் பெற்ற சிவப்பிரமணர்களின் பெயர்கள் சாசனத்தில் உள்ளன. சிவப்பிராமணர்கள் உறவினர்கள் என்பதுடன், திருமுல்லை வாயிலில் காணி உடையவர்களாக இவர்கள் இருந்தார்கள். தானம் தந்த சிவபூதன் புலியூர் கோட்டத்து மாங்காடுநாட்டு, கோயப்பேட்டில் வாழ்ந்தவன் ஆவான். கோயம்பேட்டில் குறுங்காலீஸ்வரர் என்ற புராதனக்கோயில் உள்ளது. அக்கோயிலிலும் மூன்றாம் குலோத்துங்கனுடைய சாசனங்கள் உள்ளன.

Summary : On the north wall of the central shrine in the same temple. King - Kulōttuṅga III. Regnal year 21. (1198C.E.).

This inscription records the gift of 24 bujabala pudumādai, in the hands of the sivabrahmans of the temple by Sivabūdan madisūdan vanavar nāyakan of Kōyambēḍu in Māngāḍu nāḍu in Puliyūr Kōṭṭam a subdivison of Jayaṅgonḍa sōḻa maṅḍalam, for burning two perpetual lanps in the temple of Tirumullaivāyil uḍaiyār in Kānappērūrnāḍu in Puḻar kōṭṭam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளின ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு உ௰க ஜயங்கொண்ட சோ-
2. ழ மண்டலத்துப் புழற்கோட்டத்துக் கானப்பேறூர் நாட்டு உடையார் திருமுல்லைவாயிலுடையாற்கு இம்மண்டலத்து புலியூர் கோட்டத்து மாங்காடு நாட்டுக் கோயம்பே-

3. ட்டுச் சிவபூதன் மதிசூதன் வானவர்நாயகன் சந்திராதித்தவரை செல்வதாக வைத்த திருநந்தா விளக்கு இரண்டுக்கும் இக்கோயிலிற் காணியுடைய சிவப்பிராமணரில்

4. காஶ்யபன் ஆளும் பிரானான குலோத்துங்க சோழபட்டனேனும் ஶ்ரீகண்டநாதனான திருச்சிற்றம்பல பட்டனேனும் காஶ்யபன் சரணமாடான பன்மாஹேஸ்வரபட்டனும் இவன் தம்பி-

5. மாரில் செய்ய பெரியான் பட்டன் உள்ளிட்ட இவ்வணைவோம் யிவன் பக்கல் கைக்கொண்ட புசபலப்புதுமாடை ௨௰௪ இம்மாடை இருபத்து நாலுக்கும் இத்திருநந்தாவிள

6. க்கு இரண்டும் சந்திராதித்தவரை எரிப்பதாகச் சிலாலேகை பண்ணிக்குடுத்தோம்.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 332/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 24
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: பொது.ஆ. 1201-02
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: 663/1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ.17 எண்.720
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 13
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		

இடம் : திருமாசிலாமணியீஸ்வரர் கோயில் அர்த்தமண்டபத் தெற்குச் சுவர்.

குறிப்புரை : மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியின்போது திருமுல்லைவாயில் உடையார் கோயிலிலுக்கு பஞ்சொட்டி என்ற ஊரில் தேவதானமாக நிலம் விடப்பட்ட விவரம் மட்டும் கல்வெட்டில் உள்ளது. கொடையாளியின் பெயரும் நில எல்லைகளும் சாசனத்தில் இல்லை. சாசனத்தின் இறுதிப்பகுதி கிடைக்கவில்லை.

Summary : On the south wall of the ardhamaṇḍapa in the same temple. King - Kulōttuṅga III Regnal year 24.

This incomplete inscription mentions the devadānam village Pañjotti and the deity Tirumullaivāyil uḍaiyār in Pular̤ kōṭṭam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் மதுரையும் பாண்டியன் மு-
2. டித்தலை கொண்டருளின ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு ய[ா]-
3. ண்டு உ௰௪ புழற்கோட்டத்து உடையார் திருமுல்லைவாயிலுடைய-
4. ாா்க்கு இந்நாயநாா் தேவதானம் பஞ்சொட்டியிற் காணிஉடைய[1]

---

1. கல்வெட்டு தொடரவில்லை.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 333/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 3
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: பொது.ஆ. 1015
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: 677/1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ.17 எண்.734
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 15
அரசன்	: முதலாம் இராசேந்திரன்		

இடம் : திருமாசிலாமணி ஈஸ்வரர் கோயில் மகாமண்டபம் தெற்குத்தூண்.

குறிப்புரை : முதலாம் இராசேந்திர சோழனுடைய 3-ஆவது ஆட்சியாண்டின்போது ஊற்றுக்காட்டு நாட்டுப் பூசிப்பாக்கமாந பராந்தகநல்லூரைச் சேர்ந்த திருநல்லூழானுடைய பணிமகன் அறிவானன் என்பவன் திருமுல்லைவாயில் உடையார் கோயிலில் ஒரு மண்டபம் கட்டியுள்ளான். தற்போது உள்ள மகாமண்டபமே அம்மண்டபம் எனலாம். பணிமகன் என்பதை வேலைக்காரன் என்று கொள்ளாமல் அகம்படியான் என்றும் கூறலாம் அல்லது பாதுகாவல்வீரன் எனலாம். இசக்கன் ஊர்க்கல்வெட்டு 35லும் வருகிறான்.

Summary : On a pillar in the mahamaṇḍapa in the central shrine in the Māsilāmanirisvarar temple. Chō̱la king. Rājēndra I. Regnal years 3, 1015 C.E.

This inscription records the construction of the maṇḍapa by Isakkaṉ A̱rivalaṉ, Vēlaikkāraṇ and of Tirunallū̱lan of Parānṯaganallūr alias Pūsipākkam in Ū̱ṟṟukkādu nādu in Ū̱ṟṟukkādu Kōṭṭam. Vēlaikkāran means personal assistant.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேஸரி வந்மரான ராஜெந்த்ர-
2. சோழ ஶெவர்க்கு யாண்டு ‘௩’ ஆவது ஜய-
3. ங் கொண்ட சோழ மண்டலத்து ஊற்றுக்காட்டுக்-
4. கோட்டத்து ஊற்றுக்காட்டு நாட்டுப்பூசிப்பாக்கமாந ஸ்ரீ-
5. பராந்தக நல்லூழாந் திருநல்லூராந் பணிமகன் இச-
6. க்கன் அறிவாளன் திருமுல்லைவாயில் ஆ-
7. ண்டார்க்கு எடுப்பித்த மண்டபம் உ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 334/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	:	பொது.ஆ. 1406
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	:	668/1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	தெ.க.தொ.17 எண்.725
எழுத்து	: தமிழ்			
அரசு	: விஜயநகரப் பேரரசர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	14 மற்றும் 16
அரசன்	: இரண்டாம் புக்கராயர்			

இடம் : திருமாசிலாமணி ஈஸ்வரர் கோயில் கருவறைத் தென்புறச் சுவர்.

குறிப்புரை : இரண்டாம் புக்கராயர் ஆட்சியின்போது திருமுல்லைவாயில் உடையார் கோயிலில் மார்கழி மாதம் திருப்பள்ளி எழுச்சிவிழாவிற்கு அமுது செய்தருளும் பணிக்காக நெல்லு 50 கலம் வழங்கப்பட்டது. வீர நாராயணன் இனக்கு நல்ல பெருமாளான ஒற்றி அரசர் சோமகிரகண புண்ணிய காலத்தில் கொடையை வழங்கினார். அசங்காத கண்டன் கோலால் நிலம் 800 குழி வழங்கப்பட்டது. முன்னதாக சீயநாயனார் ஆன ஒற்றி அரசர் திருவிளக்கு பட்டிக்கு விடப்பட்ட நிலமும் சுட்டப்படுகிறது. நிலக்கொடை கல்வெட்டாக வெட்டுவதுடன் சூலக்கற்களும் நடப்படுகின்றன. பயிண்டி அரசர் மகனார் அய்யலுப்பகடையார் என்பவரே திருப்பள்ளி எழுச்சிக்கு 20 கலம் அரிசி ஒதுக்கியுள்ளார். கல்வெட்டு எண் 14 மற்றும் 16 இரண்டும் சேர்ந்து ஒரே கல்வெட்டாகும்.

Summary : On the south wall of the ardhamaṇḍapa in the same temple, king - Bukkaraya II. Year 1406 C.E.

This records the gift of 800 kuḻi of lands in Vellanūr by Ayyāluppa kaḍaiyār son of Payiṇḍi arsar to the temple of Tirumullaivāyil udiya nāyanār in Kānappērūr nāḍu, in Puḻeṟ kōṭṭam for the service of Tiruppaḷḷi eḻuchchi. The gift land is stated to havebeen formerly granted to the donor by Vīranārāyana Innākku nallaperumāḷ alias Oṟṟiarasar, on the occeasion of a sōlar eclipse. It mentions the measuring rod aśaṅgādagaṇḍaṉ kōl.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமந்மஹாமண்டலேஸ்வர ராஜாதிராஜ பரமேஸ்வர ஸ்ரீவீரப்ரதாப புக்கராயற்குச் செல்லாநின்ற வ்யய வருஷத்து மாசிமாதம் முதல்தியதி புழற்-

2. க்கோட்டத்து கானப்பேறூர் நாட்டு உடையார் திருமுல்லைவா[யி]ல் உடைய

னாயிநாற்க்கு சூவஷூஹ ஸஂதூத்தில் காலஹவ மொதூத்தில் பயிணி அரசர் மகந-

3. ரார் அய்யல்லுப்ப கடையார் இன்னாயநாற்க்கு திருப்பள்ளிஎழிச்சிக்கு அமுது படிக்கு நாள் ஒன்றுக்கு எட்டு நாழிக் கா[ல்]லால் அரிசி அஞ்ஞாழி ஆக வருஷ-

4. ம் ஒன்றுக்கு மாதம் பன்னிரண்டுக்கு[ம்] அரிசி இருபதின் கலத்துக்கு அஞ்சில் இரண்டு படிக்கு குடுக்கும் நெல்லு ஐய்ம்பதின் கலம் இன்-

5. னெல்லு ஐய்ம்பதின் கலத்துக்கு வீர நாராயணன் இனக்கு [எனக்கு] நல்ல பெருமாளான ஒற்றி அரசர் நமக்கு ஶோஉரூஹண புண்ணிய காலத்திலே தம்முடைய காணி ஆட்ச்சி-

6. ஆன வெள்ளானூரிலே முன்னாள்ச் சீயனாயனார் ஆன ஒற்றி அரசர் விட்ட திருவிளக்குப் பட்டிக்குத் தெற்கு நமக்கு உதகபூறுவம் ஆக விடப்பட்ட விறுத்தி அசங்காத கண்டன் கோ-

7. லால்க் குழி எண்ணூறும் இன்னாயர்க்குத் திருப்பள்ளி எழுச்சிக்கு அ(ம்)முது படிக்கு இன்னிலம் எண்ணூறு குழியும் சந்திராத்தவரையும் செல்-

8. வதாக இன்னிலத்திலே திருச்சூலத்தாபநம் பண்ணித் திருமலையிலே சிலாலேகைக்குப் பண்ணி குடுத்தோம் [பின் தெலுங்கில் 2 வரி எழுதப்பட்டுள்ளது.]

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 335/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 3 மற்றும் 4
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: பொது.ஆ. 1016
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: 682/1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ.17 எண்.739
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 17
அரசன்	: முதலாம் இராசேந்திரன்		

இடம் : திருமாசிலாமணியீஸ்வரர் கோயில் மகாமண்டபத்தூண்.

குறிப்புரை : முதலாம் இராஜேந்திர சோழ தேவருடைய நான்காம் ஆட்சியாண்டின் போது திருமுல்லை வாயிலில் உள்ள கோயில் ஸ்ரீபாசுபததேவரான முல்லை அழகரையும் அஸ்திரதேவரையும் எழுந்தருளிவித்து உற்சவம் நடத்தவும் திருவமுது படைக்கவும் கொடையளிக்கப்பட்டது. மாணிக்கம் 44, மரகதம் 8, வயிரம் 32 பெற்பூக்கள் போன்றவை இறைவனுக்கு வழங்கப்பட்டன. சிதம்பரம் அருகே பாசுபதஈஸ்வரர் என்ற பெயரில் கோயில் உள்ளது. திருமுல்லைவாயில் கோயிலுக்கு விலை உயர்ந்த நவமணிகள் தனிநபர் வழங்கினார். மொத்தமாக 105 நவமணிகளும் பத்துப் பொற்பூக்களும் என்று கொள்ள வேண்டும்.

Summary : On the Pillār built in to the maghāmaṇḍapa in the same temple. King-Rājēndra Chō<u>l</u>a I. Year 3 and 4 (1014 C.E.)

This records the gift of jewels with stones such has rubies, sapphire, diamonds and pearls in all 105 and ten flowers made of gold for the deities Mullai a<u>l</u>agar alias Sri Pāsupatadēva and Astradēvar in the temple of Tirumullaivāyil and refers to some provision for food offerings and for the conduct of services like abhisheka and for taking out the deities in procession.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்ப-
2. ர கேசரி வநராந ஸ்ரீரா-
3. ஜேந்ந்த்ர சோழ ஷேவர்க்கு யா-
4. ண்டு 'ந' ஆவதும் யாண்டு-

5. ச ஆவதும் புழற் கோட்ட-
6. த்து கானப்பேறூர் நாட்-
7. டு திருமுல்லைவாயிலி-
8. ல் ஸ்ரீபலி எழுந்தருள ஸ்ரீபா-
9. சுபத தேவரான முல்லை
10. அழகரையும் க்ஷேத்ரதே-
11. வரையும் எழுந்தருளிவித்-
12. து முல்லை அழகர் அபி-
13. ஷேகத்து மாணிக்கம்
14. நாற்பத்து நாலு மரகத-
15. ம் எட்டும் வயிரம் முப்-
16. பத்திரண்டும் முத்து இரு-
17. பத்தொன்றும் ஆக ரத்ந-
18. ம் நூற்றைஞ்சினால் நிை-
19. ற கழஞ்சேய் மஞ்சாடியும்
20. இரண்டு மாவும் பொன் ஐய்-
21. ங்கழஞ்சும் உட்பட நிறை
22. அறு கழஞ்சேய் மஞ்சாடி-
23. யும் இரண்டுமாவும் மாலையி-
24. ல் மாணிக்கம் பதினாலும்
25. மரகதம் இரண்டும் வயிரம்
26. முப்பத்திரண்டும் ஆக நாற்-
27. பத்தெட்டினால் நிறை அ-

28. ரைக் கழஞ்சும் பொன் இரு-

29. கழஞ்சும் உட்படட நிறை இரு க-

30. ழஞ்சரையும் பொற்பூ ஒன்-

31. றினால் நிறை காலாகப் ெ-

32. பாற்பூப் பத்தினால் நிறை

33. இரு கழஞ்சரையும் சாத்து-

34. வித்து இத்தேவர்கள் ளி-

35. ருவர்க்கும் நாள் ஒன்றினுக்-

36. கு திருவமுதரசி குறுணி ந-

37. ாநாழியும் கறியமுதும்

38. நெய்யமுதும் தயிரமு-

39. தும் அடைக்காயமுதும்

40. சந்த்ராதித்யவத் அமுது

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 336/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 10
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: பொது.ஆ. 1022
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 18
அரசன்	: முதலாம் இராசேந்திரன்		

இடம் : திருமாசிலாமணி ஈஸ்வரர் கோயில் மகா மண்டபத்தூண்.

குறிப்புரை : முதலாம் இராசேந்திர சோழனுடைய 'திருமன்னி வளர' என்ற மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் இக்கல்வெட்டு சிதைந்த நிலையில் உள்ளது. மெய்க்கீர்த்தி பகுதிக்குப் பின் பல இடங்களில் எழுத்துகள் சிதைந்துள்ளதால் பொருள் காண இயலவில்லை. 25 காசு முதலீடாக வழங்கப்பட்டது. எண்.19, 20 நீக்கப்பட்டன.

Summary : One of the pillar in the mahāmaṇḍapa infront of the central shrine in the same temple.

This is fragmentary inscription, beginning with is portion of the prasaste. Tirumaṉṉi vaḷara etc of the Rājēndra king-I. It belongs to 1022 C.E.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமன்-
2. னி வளர இருநில மடந்தையும் போர்ச்செய பாவையுஞ் சீர்த்தனிச் செல்வியுந் தன்பெருந் தேவியராகி-
3. யின்புற நெடிதியிலூழியுள் ளிடைதுறை நாடும் துடர்வன வேலிப்படர்வன வாசியும் சுள்ளிச்சூழ்மதிற் கொள்ளிப் பாக்கையும் நண்ணற்கருமுரண் முந்னிய கருமுரண்-
4. மன்னைக் கடக்கமும் பொருகடலீழத்தரசர் தம்முடியும் ஆங்கவர் தேவிய ரோங்கெழின் முந்னவர் பக்கற் தென்-
5. னவன் வைத்த சுந்தரமுடியும் இந்திரனாரமும் தெண்டிரை யீழமண்டல முழுவதும் எரிபடைக் கேரளர் முறைமையிற் சூடும்

6. குலதன மாகிய பலர் புகழ் முடியும் செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத் தொல்பெருங்காவல் பல்பழந் தீவும் செருவிற்-

7. (சி)னவி இருபத்தொருகால் அரசுகளை கட்ட பரசுராமன் மேவருஞ் சாந்திமத் தீவரன் கருதி இருத்திய செம்பொன் திருத்தகு முடியும்

8. பயங்கொடு பழிமிக முயங்கியல் முதுகிட்டொளித்த சயசிங்கன் அளப்பரும் புகழொடு பீடியல்-

9. லிரட்டபாடி யேழரையிலக்கமும் நவநெதி குலப்பெருமலைகளும் விக்கிரம வீரரர் சக்கரக் கோட்டமும் முதிர்பட-

10. வல்லை மதுரை மண்டலமும் காமிடை வளைஇய நாமணக் கோணமும் வெஞ்சின வீரர் பஞ்சப்-

11. பள்ளியும் பாசடைப் பழனமாசுணி தேசமும் அயர்வில் வண்கீர்த்தி ஆதி நகரவையில் சந்திரன்றொல்குலத்திந்திரரதனை

12. விளையமர்க் களத்துக் கிளையொடும் பிடித்து பலதனத்தொடு நிறை குலதனக் குறையும்

13. கிட்டருஞ் செறிமிளை வொட்டவிழயமும் பூசுரர் சேருநற் கோசல நாடும் தன்மபாலனை

14. வெம்முனை அழித்து வண்டுறை சோலை தண்டபுத்தியும் இரணசூரனை முரணுறத் தாக்கித் திக்கனைத்தும் கீர்த்தி தக்கனை

15. லாடமும் கோவிந்தசந்தன் மாவிழிந்தோட தங்காத சாரல் வங்காள தேசமும் தொடுகழற் சங்கு வொட்டல் மசிபாலனை வெஞ்சமர் வளாகத்து அஞ்சுவித்தருளி

16. ஒண்டிறல் யானையும் பெண்டிர் பண்டாரம் நித்தில நெடுங்கட லுத்திர

17. லாடமும் வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனற் கங்கையும்

18. அலைகடல் நடுவுட் பலகலஞ் செலுத்திச் சங்கிறாம விசயோத்துங்க பன்மராகிய கிடாரத்தரசனை

19. வாகையம் பொருகடற்க் கும்பக் கரியொடு மகப்படுத்துரிமையிற் பிறக்கிய பெருநிதி

20. பிறக்கமும் ஆர்த்தவன் அகநகர் போர்த்தொழில் வாசலில் விச்சாதிர தோரணமும் மொய்த்தொளிர் புனைமணிப்-

21. புதவமும் கனமணிக் கதவமும் நிறைசீர் விசையமும் துறையூர் பண்ணையும் வன்மலை ஊரும் ஆழ்கடல் அகழ்-

22. சூழ் மாயிருடிங்கமுங் கலங்கா வல்வினை இலங்கா சோகமும் காப்புறு நிறைபுனல் மாபப்பாளமும் காவலம் புரிசை மேவு-

23. லிங்கமும் விளைப்பத்தூரிடை புகழ்த் தலைத்தக்கோல மதமா வல்வினை-

24. கொண்ட கோப்பரகேசரிபநூரான உடையார் ஸ்ரீராஜெநூ சோழ தெவற்கு யாண்டு ய ஆவது ஜெயங்கொண்ட சோழமண்டலத்து

25. புழற்கோட்டத்து அம்பத்தூர் நாட்டு திருமுல்லைவாயில் உடையார் . . . .

26. பாற்கெல்லை நித்த கல்யாதணி . . ணி . . . வர . . . . . . ட்டல் . . . . வற் காசு . . . .

27. . . . தைங்காசு கொண்டு . . . . யிவ்வாட்டை . . முதலா . . . .

28. ங் . . . . ராற்கு . நெல்லா . . . . . . கலநே . . . . னை காணி . . . . கிழும் . . . . . .

29. . யத்த . . . . வாயில் . . . . யெல் . . . .

30. சந்திராதித்தவரை . . யா . . . . யாண்டில் . . . .

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 337/2024*

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 20
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: 1032
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 21-1-2, 3
அரசன்	: முதலாம் இராசேந்திரன்		
இடம்	: திருமாசிலாமணி ஈஸ்வரர் கோயில் மகா மண்டபத்தூண்.		

குறிப்புரை : மூன்று துண்டுகளாக உள்ள இக்கல்வெட்டு சோழர் காலத்தவை எனலாம். 20 ஆவது ஆட்சியாண்டு வருகிறது. திருவமுதுக்குக் கொடை தந்ததாகத் தெரிவிக்கிறது.

Summary : On the mahamaṇḍapa infront of the central shrine in the same place king Rājēndra Chōḻa.

Mentions food offerings. Most of the lines are damaged and incompleted.

கல்வெட்டு :

21 - 1

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன . . . . .
2. உ௰ ஆவது . . . .
3. லூடறுத்துக் கட்ட . . . . . . ம் . . .
4. கோராஜராஜ ஸ . . . . கொண்டு
5. திருமுல்லைவாயில் . . . . . கொண்ட . . . கல் சிறு . . . . .
6. டைய . . . .
7. . . . .

கோடவ . . . . .

21 - 2

1. . . . . . தாவது நத்த . . . .னாலரு . . . . . கடவ ஊர்க்கீழ் . . . . . த்தா வெட்டி

2. புழற் கோட்டமுள்ளிட்ட கோட்டம் கோட்-

3. டம் வகை செய்கின்ற விடத்தும் கொண்டு திருமுல்லை

4. . . பதின் கழசும் சிறுபாட்டம் ஊரை . .

5. ஹுவந ஸ்தல உதிதர் . . . . . முதற்க்கு-

6. ம் இருநாழி அரிசிக்கு அஞ்சிரண்டு . . . . கீர அரிசியால் . . . நெல்லு

7. . . . . தம் ஆனாந்தாழி . . . கொண்டு . . . . . த்து . . . .

8. குண்டலிட்டான் நெல்லு பாதியம் பத்தாறுக்கு . . . . . . கொடுவந்த . . . . .

9. . . . .

21 - 3

1. மாதனாம் வித்தண்ட பட்டும் ஆண்டுவிடை

2. பகுதியால் வந்த நெல்லு கொடுத்து களைம்பே . . . . . .

3. யால் கட்டில் நெல்லு முட்டிரட்டி தண்டிக்கொ . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 338/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 7
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ.1119
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: 678/1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ.17/735
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 22
அரசன்	: முதலாம் இராசேந்திர சோழன்		
இடம்	: திருமாசிலாமணியீஸ்வரர் கோயில் மகா மண்டபத்தூண்.		

குறிப்புரை : முதலாம் இராசேந்திரனுடைய மெய்க்கீர்த்தியுடன் கூடிய இக்கல்வெட்டு மன்னனுடைய ஏழாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டது.

வில்லிப்பாக்கத்து வெள்ளாளன் ஒரு விளக்கு வைக்க முதலீடு வழங்க அப்பொன்னைச் சபை பெற்றுக் கொண்டு விளக்கு வைக்க 4000 குழி நிலம் விற்றுத்தந்துள்ளது. புழல்கோட்டத்து கானப்பேறூர் நாட்டில் மேற்படி தானநிலம் இருந்துள்ளது. நிலத்தின் எல்லைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. எனினும் கல்வெட்டு சிற்சில இடங்களில் சிதைந்துள்ளது.

Summary : On the second pillar in the maṇḍapa infront of the Māsilamaniēśvarar temple. King Rājēndra I. Regnal Year 7. (1119 C.E.)

It records the deed pertaining to the sale of 4000 kuḻi of land, by the members of the sabha of Ambattūr in Ambattūr nāḍu in Puḻaṟ kōṭṭam to a Veḷḷaṉ of Villippākkam and entrusted to the authorites of the temple of Tirumullaivāyil uḍaīyār for burning a prepetual lamp.

கல்வெட்டு :

22-1

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னி வளர இருநிலமடந்தையும் போர்ச்செயப் பாவையும் சீர்த்தனிச்-
2. செல்வியும் தன்பெருந் தேவியராகி யின்புற நெடிதியி லூழியுள் ளிடைதுறை நாடும் துடர்வனவேலி-
3. ப் படர்வன வாசியுஞ் சுள்ளிச் சூழ்மதிட் கொள்ளிப்பாக்கையும் நண்ணற் கருமுரண் மண்ணைக் கடக்கமும் பொ-

4. ருகட லீழத்தரைசர் தம் முடியு மாங்கவர் தேவியர் ஓங்கெயில் முடியும் முன்னவர் பக்கல் தெந்-
5. னவன் வைய்த்த சுந்தரமுடியும் இந்திரனாரமும் தெண்டிரை யீழ மண்டல முழு-
6. வது மெறிபடை கேரளந் முறைமையில் சூடும் குலதநமாகிய பலர் புகழ் முடியுஞ் செ-
7. சங்கதிர் மாலையுஞ் சங்கதிர் வேலைத் தொல்பெருங் காவற் பல்பழந் தீவும் செருவிற்சினவி யிருப-
8. த்தொருகா லரைசு களைகட்ட பரசிசுராமர் மேல்வருஞ் சாந்தி மற்றீவரண்கருதி யிருத்திய செம்பொற் றிருத்தகு-
9. முடியு மாப்பெருந் தண்டாற் கோப்பரகேசரி பநூராந ஸ்ரீராஜேந்த்ர சோழ ஷெவற்கு யாண்டு எ ஆவது செயங்கொண்ட சோழ மண்டலத்து புழல்
10. கோட்டத்து அம்பத்தூர் நாட்டு அம்பத்தூர் ஸஹையொம் நிலவிலை யா வணக்கை எழுத்து மேற்படி மண்டலத்து
11. புழற் கோட்டத் காநப்பேறூர் நாட்டு தேவதாநம் திருமுல்லைவாயிற் தேவ
12. . . . பக்கல் இக்கோட்டத்து அம்பத்தூர் நாட்டு தேவதானம் வில்லிபாக்கத்து வெள்ளான்.
13. தண்டத்தேவ . . மன் தேவமன . . மாகக் குடுத்த பொன்னில் பொன் கொண்டு நாங்கள் திரு-
14. நந்தாவிளக்கு ஒந்றினுக்கு விற்கின்ற நிலத்துக்குக் கீழ்பாற்கெல்லையாய் இரண்டுக்கு மேற்-
15. குந் தென்பாற்கெல்லை பள்ளி ஏரிக்கு வடக்கும் கீழ்பாற்கெல்லை . . . . .
16. கு மேற்க்கு தென்பாற்கெல்லைக்காலு . . . ற்றுக்கு வடக்கும் மேல் பாற்கெல்லை . . . .
17. . . . நிலத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை மேற்படி கொல்லைக்குத் தெற்கு நாற்[பாற்]கெல்லைக்குள் . . . நிலம்பெருங்காணி குழியும் . . . களரும்
18. நீங்கலாக பதினென்[ண்] சாண்கோலால் முன்னூறு குழி
19. . . . நாங்கள் விற்கின்ற நிலத்துக் கீழ்பாற்கெல்லை பெரி ஏரிநிலனக்கள்

20. மேற்க்கும் தென்பாற்கெல்லை ஊர் மஞ்சிக்கத்திக்கு வடக்கு மேல் பாற்கெல்லை கல்லைகலவா . . . ணியக்குழிக்கு தெற்கு ஒருகண்ணிந் தெற்கு இன்னான் கெல்லையுண் . . . . . மஞ்சிகத் திருக்கு வடக்கு மேற்பாற்கெல்லை

21. கல்லை கலவா . . . ணியன் குழிக்கு தெற்கு ஒரு கண்ணிரு . . . தெற்கும் இன்னான்கெல்லை

22. கோலால் ஆக . . . . நாங்கள் விற்ற நிலத்துக்கு கீழ்ப்பாற்கெல்லை . . . மஞ்சிக்கத்துக்கு மேற்க்கும் தென்பாற்-

23. க் கெல்லை . . . . ரைக்கு வடக்கும் மேற்பாற்கெல்-

24. லை *ஈாஜே* . . . . சருப்போதிமங்கலத்து கிழ-

25. க்கும் வடபாற்கெல்லை ஊர் மஞ்சி[க்]கத்து-

26. க்குத் தெற்க்கும் இந்நாற்[பாற்]கெல்லையுள் ளகப்பட்-

27. ட நிலம் குழி இரண்டாயிரமும் ஆன குழி நாலா-

28. யிரமும்(ங்) கொண்டு ஒரு திருநுந்தா விளக்கு எரிப்-

29. போமாநோம் திருமுல்லைவாயிலுடையார் தேவகன்மிகளோம் இது பன் மாஹே-

30. *ஶ்வூாா* ஸெக்ஷு॥

22-3

1. திமங்கலத்துக் கிழக்கும் வடபாற்கெல்-
2. லை ஊர் மஞ்சிக்கத்துக்குத் தெற்க்கும் இந்நா-
3. ஞ்[ந]கெல்லையுளகப்பட்ட நிலம் இரண்டா-
4. யிரமுப்பது குழி ஆக நாலாயிரமும் கொண்டு ஒ-
5. ருநந்தாவிளக்கு எரிப்போமாநோம் திருமுல்லை-
6. வாயிலுடையர்தேவதானம்
7. பன் ௨ாஹேஶ்வூாா ஸெக்ஷு॥

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 339/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ.1727
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 25
அரசன்	: –		

இடம் : திருமாசிலாமணி ஈஸ்வரர் கோயில் அம்மன் சன்னதி நுழைவாயில்.

குறிப்புரை : மாசிலாமணி ஈஸ்வரர் கோயில் வளாகத்தில் கொடியிடை நாயகி அம்மன் சன்னதி உள்ளது. சன்னதி நுழைவாயிலில் பொ.ஆ.1727-இல் கூடிய கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டு அம்மன் சன்னதி கர்ப்பகிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் திரணமாளிகை ஆகியவை திருப்பணி முடிந்து கும்பாபிஷேகம் செய்யப்பட்டதைக் குறிப்பிடுகிறது. கண்ணப்பமுதலியார், வீரராகவ முதலியார் கணக்குப்பிள்ளை சாதியில் தர்மாபிள்ளை ஆகியோரால் திருப்பணியும் கும்பாபிஷேகமும் நடந்த விவரம் தெரியவருகிறது.

Summary : On a slab set up in front of the Latamadhyamba shrine in the same temple.

The details of date given viz, saka year 1649, Kali Year 4828 Kīlaga Tamil Year Āvani 2, (1727 C.E.).

This inscription records the construction of the karpagraham, ardhamaṇḍapam and thinnai of the shrine of Kodiidai nāyagī by Muthiyappa Mudaliyar, Viraragava Mudaliyar and Dharmapillai. Muthiyeppamudaliyar. Father of Kaṇṇappa Mudaliyār belonged to Vallaṅkilangodharm and Dharma piḷḷai was Kāśhiba godhram. They lived our Ambattūr town.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விசையாற்புதைய சாலிவாகன சகாத்தம் ௲௬௱௪௰௯ கலியாப்தம் ௪௲௮௱௨௰௮ க்கு மேல்-
2. செல்லாநின்ற கீலக ஆவணி மீ ௨யும் பூறுவ பட்சத்து பஞ்சமி புத[ன்] வாரமும் சுவாதி நட்சத்திரமும் பெற்ற யி-

3. ன்னாள் புழற் கோட்டத்தில் அம்பத்தூர் நாட்டில் திருமுல்லைவாயலுடைய னாயனார் கொடியிடைனா-
4. யகி அம்மன் கோவில் கெற்பகிறகம் அற்த மண்டபம் மகாமண்டபம் திநண மாளிகை பண்ணி-
5. நிறவேறித்துய்பிவைவை அம்பத்தூர் வல்லங்கிழார் கோத்திரம் கண்ணப்ப முதலியார் குமாரன்-
6. முத்தியப்ப முதலியார் வீரறாகவ முதலியாரும் பொன்பதிக் கணக்கப் பிள்ளைகளில் காசீப கோத்திரம்-
7. முத்துவிசைய பிள்ளை குமாரன் தற்மாபிள்ளை யிவர்கள்.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 340/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ.1452
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: 680/1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தொ.க.தொ.17எண்.737
எழுத்து	: தமிழ்		
அரசு	: விஜயநகரப்பேரரசு	ஊர்க் கல்வெட்டு எண்	: 26
அரசன்	: –		

இடம் : திருமாசிலாமணியீஸ்வரர் கோயில் அர்த்த மண்டப நுழைவாயில்.

குறிப்புரை : விஜயநகரப் பேரரசின்போது 1452-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைப்படி, அகரம் என்ற கோழிப்பதாகை சதுர்வேதி மங்கலசபை, திருமுல்லை வாயில் உடையார் கோயிலுக்குத் திருப்பூரத் திருநாள் செலவுக்காக இறையிழிச்சி சர்வமானியமாக நிலம் வழங்கியுள்ளது. எல்லைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. சபை உறுப்பினர்களின கைஎழுத்துகள் இறுதியில் உள்ளன. காலக்குறிப்பு தவறாக உள்ளது என்பதைக் கல்வெட்டுத் தொகுதி குறிப்பிட்டு சரியான காலத்தைக் குறிப்பிட்டுள்ளது.

Summary : At the entrance to the ardhamaṇḍapa in the central shrine of the Māsilamanīśvarar temple. King - Mallīkārjuna 1452 C.E.

This inscription records the gift of land as sarvamānyam by the members of the mahāsabhā of Kōḷippadāgai alias Kulōttuṅga sōḻachathur vēdimaṅgalam for verious offerings to the goddess Koḍiyidi-nāchchiyār on the occasion of Tiruppūrattirunāḷ.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமன்மஹாமண்டலீஸ்வர ராஜாதிராஜ ராஜ பரமேஸ்வர–
2. பூர்வ்வ தக்ஷிண பஸ்சிம உத்தர ஸமுத்ராதிபதி ஸ்ரீவீரப்ரதாப மல்லிகாற்-
3. சுனதேவ மஹாராயற்கு செல்லாநின்ற பிறசாபதி ஸம்வற்சரத்து மகர நாயற்-
4. று பூர்வ்வ பக்ஷத்து தெசமியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற பூசத்து நாள் செயங்கொண்ட-
5. சோழ மண்டலத்து புழற்கோட்டத்து கானப்பேறூர் நாட்டு உடையார் திருமுல்லைவாயல் உடைய-

6. ஊாஷெவற்கு அகரம் கோழிப்பதாகை ஆன குலோத்துங்கசோழ சதுர்வேதி மங்க-

7. லத்து ஊாசபையோம் நாச்சியார் கொடியு[யி]டை நாச்சியார் திருப்பூரத் திருநாள் எங்கள் உ-

8. பையம் அமுதுபடி கறியமுதுபடி வெஞ்சனம் சாத்துபடி பூச்சுப்படிக்கும் எ[ங்] கள் ஊர்கீழ் கழ-

9. னியில் இறையிழிச்சி சறுவமானியம் திருநாமத்தில்காணி ஆக விட்ட நிலம் கீழ்பாற்கெல்லை திரு-

10. முல்லைவாயல் எல்லைக்கு மேற்கும் தென்பாற்கெல்லை திருத்தாநேரி கரைக்கு வடக்கு மேல்பாற்கெல்லை சேரி-

11. மேட்டு நத்தம் சேர்ந்த மேலை[க்கரைக்கு] வடக்கு வேளானூர் எல்லையுறக் கிழக்கும் வடபாற்கெல்லை வெள்ளானூர்-

12. எல்லைக்கு தெற்கும் இந்நான்கெல்லைக்குட்பட்ட நிலம் சந்திராதித்தவரையும் சறுவமானியம் செல்வதாக சிலா-

13. லேகை பண்ணி குடுத்தோம் கோழிப்பதாகை ஊாஸஹையோம் இப்படிக்கு சாதவன் உய்யக் கொண்டான் பார-

14. த சூடாமணி எழுத்து ஸஹையார் பணியால் கோழிப்பதாகை உடையாந் பெரிய முதலி எழுத்து-

15. சாதவன் வடகோபுரம் திருமலை நாதன் உள்ளிட்டார் எழுத்து.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 342/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ.1196
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 27
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		

இடம் : திருமாசிலாமணியீஸ்வரர் கோயில் முன் மண்டபக் கிழக்குச்சுவர்.

குறிப்புரை : மூன்றாம் குலோத்துங்கனின் 16-ஆவது ஆட்சியாண்டில் வெட்டப்பட்ட இக்கல்வெட்டில், சிங்களாந்தக பணிமகன் கங்கனான பெரியநாட்டு உடையார் கோயிலுக்கு ஏதோ கொடை வழங்கியுள்ளார் எனத்தெரிகிறது. கல்வெட்டின் இறுதிப்பகுதி சிதைந்துள்ளதால் முழு விவரம் அறிய இயலவில்லை. பணிமகன் என்ற சொல் அகம்படியரைக் குறிக்க கூடும். போர்வீரனையும் குறிக்கக்கூடும்.

Summary : On the east wall of the front maṇḍapa in the same temple. king - Kulōttuṅga III. Regnal Year 16 (1196 C.E.).

This inscription records the gift of (land or cash) some thing by Gaṅgaṉ alias Periyanāṭṭu uḍaiyār for būjas in the temple of Tirumullaivāyil uḍaiyār. He was the panimagan. Panimangan means Agamudayar cast or soldier.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவீரராஜேந்திர சோழ தேவற்கு யாண்டு ௰௬ ஆவது-
2. செயங்கொண்ட சோழ . . . . சிங்களந்தக பணிமகன் கங்கநானப் பெரிய-
3. நாட்டு உடையார் திருமுல்லைவாயில் உடைய நாயன்-
4. வாயிலில் பெ . . . . களாந்தகன்
5. . . கய்யர் . . ய . . . னாட்டுள்
6. . . லா . . க்க . . யித்து . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 342/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: 15-ஆம் நூற்றாண்டு
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: 679/1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ.17 எண்.736
எழுத்து	: தமிழ்		
அரசு	: விஜய நகரப்பேரரசு	ஊர்க் கல்வெட்டு எண்	: 28
அரசன்	: இரண்டாம் தேவராயர்		

இடம் : திருமாசிலாமணியீஸ்வரர் கோயில் முன்மண்டப நுழைவுவாயில்.

குறிப்புரை : விஜய நகர மன்னன் இரண்டாம் தேவராயன் ஆட்சியின்போது கோயில் நிலங்கள் தெடர்பான ஆணையை இது சுட்டுகிறது. சந்திரகிரி ராஜ்ஜியத்தில் உள்ள காஞ்சிபுரம், திருக்காளத்தி, திருஒற்றியூர், திருவாலங்காடு, திருப்பாலைவனம், திருமுல்லைவாயல் மற்றும் உள்ள சிவத்தலங்கள், வைணவத்தலங்களுக்கு இவ்வாணை பொருந்தும். தேவதானம், சருவமான்யம் தொடர்பாக சீவிதக்காரர், அதிகாரி, கடைக்கூட்டத்தார், தானத்தார், குத்தகை எடுப்பதால் திருப்பணி குலைந்து மகாபூசை முதலியவை பாதிப்படைவதைச் சுட்டுகிறது. பந்மாஹேஸ்வரரும் வயிரவநாயனாரும் இது தொடர்பாக மன்னரிடம் முறையிட மேலே குறிப்பிட்டவர்களிடம் குத்தகை விட தடை விதித்ததுடன் மகாபூசை, திருப்பணி, திங்கள் திவசம், திருநாள், நித்ய உற்சவம் தாழ்வற நடத்த வேண்டும் என மன்னர் ஆணையிடுகிறார். பன்மாஹேஸ்வரருக்கு இதற்கான அதிகாரம் வழங்கப்படுகிறது. சோடிமுகம், பார்வை, அங்க சாலை, சம்படம் விசேஷதாயம், அரிசிகாணம், நல்எருது, நற்பசு, வெட்டி, கட்டாயம் முதலிய வரிகள் கூறப்படுகின்றன.

Summary : At the entrance into the mahāmaṇḍapa in the central shrine of the Māsilamaniēśvarar temple. King Dēvarāy-II. 15th Century.

This inscription records the royal order (irajakam) granting the proceeds from taxes like. sodi aṅgasālai and sampaḍam visēsha-udāyam arisikānam nallerudu naṟpasu, veṭṭi and kaṭṭāyam in favour of the temple at Kanchi, Kālahasti, Tiruvoṟṟiyūr, Tiruvālaṅgāḍu, Tiruppalaivanam, Tirumullaivāyal and other saiva and vaishnava temples of Chandragiri for the conduct of daily services and festivals without break and stating that the temple lands should not be leasedout. It Mentions misappropriation, Jividekkar, Officer and Sattanathar. This order was issued at the instance of Vayiravanāyinār and the māhēśvarar of the temples who represented that the services and festivals in the temple were not conducted properly as the incomes from

taxes and from the temple lands were misappropriated by the Jīvitakāṛar the state officals and the satthānathar.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஊ ராஜ . . . . வர ஷேஸ்ராஜ ஸ்ரீவீரவஊரவ ஷேவராய ஊஹாராயர் சந்திரகிரி ராஜ்ஜு காஞ்சிபுரம் திருக்காளத்தி திருஒற்றிஊர் திருவாலங்காடு திருப்பாலைவநம் திருமுல்லைவாயல் மற்றும் உள்ளிட்ட சிவஸ்தானம் விஷ்ணுஸ்தானம் பலதளி தேவஸ்தானம் சறுவமான்யம் உள்ளிட்ட ஸ்தானங்களில் தானத்தார்க்கு-

2. நிருபம் தங்கள்ஷே . . . . கடைக்கூட்டாந சோடிமுகம் பார்வை அங்கசாலைகள் சம்படம் விசேஷாதாயம் இவையிற்றிலேயும் தேவமண்டல ஊர்கள் சீவிதகாறர் அதிகாரிகடைக்கூட்டர் தானத்தார் குத்தகை கொள்ளுகையாலும் இவையிற்றுனாலே குடியுள்ளதும் குலைந்து ஊஹா பூசை திங்கள் திவஸஊ திருப்ப-

3. ணியும் நடவாமலே . . ன்று பந்மாஹேசுரரும் வயிரவ நாயினாரும் நமக்கு விண்ணப்பம் செய்தார்கள். அந்த தேவ மண்டலங்களில் அதிகாரி சோடிமுகம் பார்வையும் கடைக்கூட்டான் சோடிமுகம் பார்வையும் அங்கசாலைகள் சம்படம் விசேஷ தாயம் அரிசிகாணம் நல்எருது நற்பசு வெட்டி கட்டாயம் இந்த வகைப்படி முதல் உள்ள-

4. து பந்மாஹேசுரரையும் முந்இட்டுக் கொண்டு ஸ்ரீ பண்டாரத்திலே முதல் இட்டு மஹாபூசை திருப்பணி திங்கள் திவஸ திரு நாள் நித உற்சவங்களும் தாழ்வற நடத்திக் கொள்ள கடவது ஆகவும் தேவமண்டலங்கள் இயாதொருத்தற்க்கும் குத்தகை குடுக்கக் கடவது அல்லவாகவும் இந்த இராஜகப்படி சந்திராதித்தவரையு[ம்] நடத்தக்கடவது ஆ-

5. கவும் இது . . கெங்கைக் கரையில் கபிலையைக் கொன்ற பாவத்திலே போகக் கடவன் ஸ்ரீ மாஹேஸ்வர ரக்ஷை।

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 343/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 14
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ.984
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 29
அரசன்	: உத்தமசோழன்		

இடம் : திருமாசிலாமணி ஈஸ்வரர் கோயில் கருவறை மேற்குச்சுவர்.

குறிப்புரை : உத்தம சோழனுடைய ஆட்சியின்போது அவனுடைய தாயாரால் கி.பி.984-இல் திருமுல்லைவாயில் உடையார்க்குத் தேவதானமாக நிலம் அம்பத்தூர் நாட்டு வில்லிப்பாக்கத்தில் விடப்பட்டது. புழற்கோட்டத்து வெண்ணையூர் நாட்டுத் திருமுல்லைவாயல் என ஊர் சுட்டப்படுகிறது. திருவமுதுக்காக நிவந்தம் ஏற்படுத்தி வருஷம் ஒன்றுக்கு ஆயிரத்து இருபத்தொரு கலனே இருதூணி நானாழி நெல் இதற்காக ஒதுக்கப்பட்டது. மூன்று வேளை திருவமுது இடப்பெறவேணும் என்று கூறும் கல்வெட்டு முழுமையின்றி உள்ளது. வேறோர் கல்வெட்டும் முழுமையின்றி உள்ளது. மற்றோர் கல்வெட்டொன்றும் செம்பியன் மாதேவியன் கொடையைச் சுட்டுகிறது.

மத்திய அரசு கல்வெட்டு ஆண்டறிக்கை மற்றும் கல்வெட்டு தொகுதியில் இக்கல்வெட்டு இடம் பெறவில்லை.

Summary : On the west wall of the central shrine in the same temple. King Uttama Chōla- Regnal Year-14 (984 C.E.).

It records a gift of dēvadhāna lands made tax free by the king Uttamchōḻa for food offerings in the temple of Māsilāmanīśvarar udaiyadēvar. His mother donated the above lands. The land was located at Villivākkam in Ambattūr nadu of Puḻaṟ-kōṭṭam. The sabha handed over 1021 kalam peddy per year to the temple for daily three times tiruamudhu (food offerings) in the temple. Daily one kuruni rice was fixed to the god for food offerings.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [கோப்பர] கேசரி பண்மற்கு யாண்டு பதினாலாவ-
2. து மழவரையார் மகளார் ஸ்ரீகண்டராதித்தப்-
3. பெருமாள் தேவியார் செம்பியன் மாதேவியா-

4. ர் தந்திரு மகனார்ஸ்ரீ மதுராந்தக தேவர்க்கு அருளிச்-
5. செய்து ச வ . . . . [கொண்டு] தேவதானமாகக் குடுப்பி-
6. த தாமன் புழற் கோட்டத்து அம்பத்தூர் நாட்டு
7. வில்லிபாக்கம் பரவ நெல்லாலும் பொன்னா-
8. லும் நெல்லு தொள்ளாயிரத்து ஒரு பத்து ஏழால்
9. அஞ்சு தூணி முக்குறுணி ணாணாழி இவற்றுள் புழற்-
10. கோட்டத்து திருமுல்லைவாயிற் தேவர்க்கு இடக்-
11. கடவதாக செய்தருளின நிவந்தங்களுக்கு நீங்குமிகை
12. கலவ முன்னூற்று அறுகலனே முக்குறுணி நி . . .
13. புழற்கோட்டத்து வெண்ணையூர்நாட்டு திருமுல்-
14. லைவாயல் மாதேவர்க்கு குடுத்தருளன நெல்லு
15. ஆயிரத்திருபத்தொரு கலனே இருதூணி னானாழி
16. இந்நெற் கொண்டு இத்தேவர்க்கு செய்தருளின
17. நிபந்தம் முப்பொழுது திருவமிர்து அரிசி குறுணி
18. மூன்று பொழுதுக்கு அட்டக்கடவதாக அ . . . . ஐ . . . . .
19. ற் வண்ணம் நெல்லு ஏழுகுறுணிக்கு . .
20. . . . அமிர்து புதுக்காழ் . . . . . முற்றுபொது . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 344/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 5
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: 10-ஆம் நூற்றாண்டு.
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: 679/1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ.III எண்.174
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழரின் சிற்றரசர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 30
அரசன்	: கோபார்த்திவேந்திரவர்மர்		

இடம் : திருமாசிலாமணி ஈஸ்வரர் கோயில் மகாமண்டபத்தில் தனிக்கல்.

குறிப்புரை : கோபார்த்திவேந்திரவர்மன் என வேந்தராதி பன்மர் இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளார். பழைய எழில் மிகு எழுத்தில் கல்வெட்டு வெட்டப் பட்டாலும் சில எழுத்துகள் தவறாகவும் சில எழுத்துகள் விடுபட்டும் உள்ளன. மற்றோர் வேந்தராதி பன்மருடைய கல்வெட்டில் திருமுல்லைவாயில் இடம் பெற இதில் கலிகேசரி சதுர்வேதி மங்கலம் என ஊர்ப்பெயர் இடம் பெறுகிறது. மேலும் நாட்டின் பெயர் 'தன் கூற்று' என வருகிறது. மகாஸபையார் நிலம் விற்று ஒப்பம் இட்ட விபரம் இதில் உள்ளது. ஊரோம் என்றிருந்தது பிராமணர் சபையாக மாறியதைக் காண்கிறோம்.

Summary : On a slab built in to the floor of the outer praghara in the Māsilamaniēś-varar temple at Tirumullaivāyail. King-Parthivendravarman. Regnal year 5.

This fragmentry record is of special interest as it written in archaic Tamil characters. It refers to Kalikēsari-chaturvēdimaṅgalam, a dēvadāna village in Pul̲ar̲kōṭṭam, which may probably be the surname of Tirumullaivāyil where the inscription is found. The king Pārthivēndra varman mentioned here is also perhaps different from and earlier than the Pārthivēndradhivarman̲ to whom the records of this groop belong.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பா-
2. ர்த்தி(ட்) வேந்திரவநூற்கு யாண்டு
3. அஞ்சாவது புழற்கோட்டத்து தன்-
4. கூற்றுத் தேவதானமாகிய க-
5. லிகேசரி சதுர்வேதி மங்கல-

6. த்து ஸ்ஸெயோம் விலைசை

7. எழுத்து இ . . . . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 345/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 3
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ.1015
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: 681/1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ.17 எண்.738
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 31
அரசன்	: முதலாம் இராசேந்திரன்		

இடம் : திருமாசிலாமணியீஸ்வரர் கோயில் மகாமண்டபம் தனித்தூண்.

குறிப்புரை : முதலாம் இராசேந்திர சோழனுடைய மூன்றாவது ஆட்சியாண்டின் போது திருமுல்லைவாயில் உடையார் கோயிலில் ஒரு நந்தா விளக்கு வைக்க 90 சாவாமூவாப்பேராடு வழங்கப்பட்டது. பேராடு செம்மறி ஆடாகும். ஆண்டொன்றுக்கு மொத்தம் 90 நாழி நெய் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. திருமுல்லைவாயில் ஊர்ச்சபை தங்களுடைய பணியாள் இடையன் கருமாணிக்கத்திடம் ஆடுகளை வழங்கியுள்ளது. மாங்காடு நாட்டு உகும்பில்வல்லங்கிழான் நாகன் வெள்ளியேன் கொடையாளி ஆவான்.

Summary : On the east wall of the mahāmaṇḍapa in the central shrine of the same temple. Chōḻa king - Rājēndrachōḻa I. Regnal Year 3 (1015 C.E.).

This insecription records the gift of 90 sheep left in the hands of some shepherds by Nāganveḻḻi of Ugumbil, in Māṅgāḍunādu, a district of Puliyūr kōṭṭam for burning a perpetual lamp daily in the temple of Tirumullaivāyil āndēr, at Tirumullaivāyal in Kānappērūrnāḍu, a district of Pulaṟ kōṭṭam.

கல்வெட்டு :

1. . . . .
2. ஙராஜேந்த்ர சோழ தே-
3. வற்கு யாண்டு மூன்றா-
4. வது ஜயங்கொண்-
5. ட சோழ மண்டலத்-

6. து புலியூர் கோட்டத்-
7. து மாங்காடு நாட்டு உ-
8. கும்பில் வல்லங் -
9. கிழாந் நாகன் வெள்-
10. ளியேந் புழற் கோ -
11. ட்டத்துக் கானப்பே-
12. றூநாட்டுத் தேவதா-
13. னந் திருமுல்லை வா-
14. யிற் திருமுல்லைவாயி-
15. லாண்டார்க்குச் சந்ராதி-
16. த்தவற் ஒரு நந்தா விள-
17. க்கு எரிப்பதற்கு விட்ட செ-
18. சம்மரி சாவா மூவாப் பே-
19. பராடு தொண்ணூறு இ-
20. வ்வாடு தொண்ணூறு-
21. ம் இவ்வாடு ஒன்றினு-
22. க்கு ஓராண்டு நெய் நா-
23. ழியாகத் தொண்ணூ-
24. ற்று நாழி நெய்யுங்கொ-
25. ண்டு நிசதம் உழக்கு
26. நெய்யட்டித்து சந்ராத்த-
27. வற் ஒருதிரு நந்தா விள-
28. க்கெரிப்பதாக இத்திரு-

29. முல்லைவாயிலூரோ-

30. ம் இவ்வாடு நாங்களே-

31. ய் கைக்கொண்டு எங்களூ-

32. ர் இடையன் [ந]ம்பியவை

33. யனாமல் லாடியான்

34. கருமாணிக்கம் பட்டியான

35. இடையன் திருவூற்-

36. போத்தனும் வசம் வி-

37. ட்டு இத்திருநந்தா விளக்கு

38. ஒன்று சந்த்ராதித்தவர்

39. முட்டாமேய் எரிப்பிப்-

40. பதானோம் திருமுல்லை-

41. வாயிலூரோம் இவர்-

42. கள் சொல்ல எழுதி-

43. தினேன் இவ்வூர் ஊர் க-

44. ரணத்தான் வைய்த்-

45. தியன் வாமணன் சத்-

46. தியேன் இவை என் னெ-

47. ழுத்து இத்திருநந்தா வி-

48. ளக்கு முட்டாமேய் எரி-

49. ப்பிப்பான் ஸ்ரீபாதம் எ-

50. ன் தலைமேலன

51. மாயேஸ்வர ரிரக்ஷை॥

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 346/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 13
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: 10 -ஆம் நூற்.
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: 196/1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ.III எண்.196
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர் சிற்றரசர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 32
அரசன்	: பார்த்திவேந்திராதிபன்		

இடம் : திருமாசிலாமணியீஸ்வரர் கோயில் இரண்டாம் திருச்சுற்று மேற்குப்புறம் தரையில் கிடக்கும் தனிக்கல்.

குறிப்புரை : இரண்டாம்பராந்தகன் என்ற சுந்தரசோழன் பேரரசனாக இருந்த போது தொண்டை மண்டலத்தில் சோழரின் சிற்றரசனாகக் கோபார்த்திவேந்திரவர்மன் இருந்துள்ளான். இவனுடைய கல்வெட்டுகள் தொண்டை மண்டலத்தில் பரவலாகக் காணப்படுகின்றன. திருமுல்லை வாயில் கோயிலில் இவனுடைய 13-ஆவது ஆட்சியாண்டு சாசனம் உள்ளது. சோழநாட்டு ஆவூர்க்கூற்றத்து விளத்தூரைச் சேர்ந்த சிங்களன் வீர நாராயணன் 1 விளக்கெரிக்க 90 ஆடுகளை அளித்துள்ளான்.

Summary : On a slab built in to the floor of the mahā maṇḍapa in front of the Amman temple. King-Koparthi Vēndranvarmaṇ.

This inscription states that in the 13th regnal year of king Pārthivēndradivarma.

Singala Vīra nārāyana a native of Chōḻanāḍu Vilattur village made agift of 90 sheep for burning a perpetual lamp in the temple of Mahādēva at Tirumullaivāyil a dēvadāna village in Puḻaṟ kōṭṭam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. கோபார்த்தி வேன்-
3. திர[ா]தி பன்மர்க்கு-
4. யாண்டு ௰௩ புழற்கோ-
5. ட்டத்து வெள்ளானூர் நா-
6. ட்டுத் தேவதானமாகிய தி-

7. ருமுல்லைவாயில் மஹா-

8. ஜேவர்க்கு நந்தாவி-

9. ளக்கொன்றினுக்-

10. கு ச் சோழநாட்டு

11. ஆவூர் கூற்றத்து விளத்-

12. தூர் விளத்தூர் கிழவ-

13. ன் சிங்கள வீரநாராணன்

14. சூர்யசந்த்ர காலமும் ஒரு-

15. நந்தா விளக்கெரிப்பதற்-

16. கு வைத்த சாவா மூவாப்-

17. பேராடு தொண்ணூறு ஊ-

18. ஜூழ ரக்ஷிப்பான் ஸ்ரீபா-

19. தம் என் தலைமேலன.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 347/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 3
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ.15-ஆம் நூற்.
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: விஜய நகர அரசர்?	ஊர்க் கல்வெட்டு எண்	: 33 துண்டு 1
அரசன்	: பிரதாப தேவராயர்		

இடம் : திருமாசிலாமணியீஸ்வரர் கோயில் நந்தி மண்டபம் அருகே தரையில் உள்ளது.

குறிப்புரை : விஜயநகர வேந்தர் இரண்டாம் தேவராயர் சாசனமாகத் தெரிகிறது. இத்துண்டு கல்வெட்டு வயிரவ நாயினார் பெயரையும் சுட்டுகிறது.

Summary : At the entrance into the Nandimaṇḍapa in the shrine of the Masilamaniēśvarar temple This is broken. It mentions king Devaraya Vijayanaghra king and Vairavanayanan name.

கல்வெட்டு :

1. ப்ரதாவ தேவராய-
2. சோடிமுகம் பார்வை-
3. கும் வயிரவ நாயினாருமா-
4. கொண்டு ஸ்ரீபண்டாரத்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 348/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 13
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: 15 -ஆம் நூற்.
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: விஜயநகர அரசர் ?	ஊர்க் கல்வெட்டு எண்	: 33-2 துண்டு
அரசன்	: –		

இடம் : திருமாசிலாமணி ஈஸ்வரர் கோயில் நந்தி மண்டபம் அருகே.

குறிப்புரை : விஜயநகர அரசர் ஒருவரின் கல்வெட்டுத் துண்டாகத் தெரிகிறது.

Summary : This is a gift of Vijayanaghra kings inscription. 15th Century.

கல்வெட்டு :

1. ஸேஸ்துஸ்ரீ ஸ்ரீவ-
2. கடைக் கூட்டி-
3. னறுபந் மாஹேசுர-
4. ரையும் முந் இட்டு

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 349/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: 15 -ஆம் நூற்.
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 33-3 துண்டு
அரசன்	: –		

இடம் : திருமாசிலாமணி ஈஸ்வரர் கோயில் இரண்டாம் திருச்சுற்று அருகேயுள்ள துண்டு.

குறிப்புரை : மிகவும் பொறிந்துள்ள துண்டுக் கல்வெட்டு செய்தி அறிய முடியவில்லை.

Summary : It is badly damaged.

கல்வெட்டு :

1. ப் பராஞ்சேவி ய
2. . . . திய . . . ம் யுள் இடை-
3. யண் . . . இப்படரவன-
4. வேலி . . . . யுள்ளி[ட்]ட
5. . . . . அட்டக் . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 350/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: 15 -ஆம் நூற்.
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 33-4 துண்டு
அரசன்	: முதலாம் இராசேந்திரன்		

இடம் : திருமாசிலாமணி ஈஸ்வரர் கோயில் திருச்சுற்று அருகேயுள்ள துண்டு.

குறிப்புரை : முதலாம் இராசேந்திர சோழனுடைய மெய்க்கீர்த்தியின் சிறு பகுதி இதில் உள்ளது. மிகவும் சிதைந்த கல்வெட்டு.

Summary : It is located near compound wall. Badly damaged. Rājēndra Chōḻas meykirtti.

கல்வெட்டு :

1. யொண்டிறல் யானையும் பெண்டிர்பண்டாரமும் நித்தில நெடுங்கடலுத்தரலாடமும் வெறிமலர்த்தீர்த்தத்தெறி புனற் கங்கையும் அலைகடல் நடுவில் பலகலஞ் செலுத்தியும் . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 351/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 3
வட்டம்	: ஆவடி	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ.1014-15
ஊர்	: திருமுல்லைவாயில்	இ.க. ஆண்டறிக்கை	: 684/1904
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.க.தொ.17 எண்.741
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 35
அரசன்	: முதலாம் இராசேநதிரன்		

இடம் : திருமாசிலாமணி ஈஸ்வரர் கோயில் அம்மன் சன்னதி மண்டபத்தில் உள்ள தூணில் ஒன்று.

குறிப்புரை : முதலாம் இராசேந்திர சோழனுடைய ஆட்சியின் போது திருமுல்லைவாயில் அண்ணர் கோயிலின் உள்ளால் பாசுபத தேவர் மற்றும் அஸ்திரதேவரைத் தோற்றுவித்தவன் திருநல்லுழான இசக்கன் அறிவாளன் ஆவான். இவன் திருவமிர்துக்காகப் பொன்னையும் தருகிறான். தஞ்சைவீரன் நாகன் அறியானும் அம்பத்துழான் சதுவன் ஒற்றியும் பொன் கொண்டு நிலம் வாங்கி இறையிலியாக ஆக்கித்தருகிறார்கள். இங்கே சுட்டப்படும் சிலைகள் உற்சவமூர்த்திகளான ஐம்பொன் சிலைகள் ஆகும். இக்கல்வெட்டில் சுட்டப்படும் நல்லுழான் இசக்கன் ஊர்க்கல்வெட்டு 15-லும் இடம் பெறுகிறான்

Summary : On a pillar lying at the southern entrance to the maṇḍapa. infront of the Lata madhyamba shrine in the Māsilāmanīśvara temple. Chōḻa - Rājēndrachōḻa I Year 3 1014 - 15 C.E.

This inscription records the gift of 1200 kuḻi of land by Tirunallūḻāṉ Isakkanarivālan of Achcharapākkam alias Sripārāntaka nallur in Ūṟṟukkāḍu-nādu and Kōṭṭam for food offerings to the deities Astredēva and Pasupatadēva in the temple of Tirumullaivāyal Aṇṇar. The land was purchesed by the donor from the ūrār of Urodagam in Puḻal-nāḍu who made it also tax-free.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகே-
2. ஸரி பநூராந ஸ்ரீராஜேந்த்ர-
3. சோழ தெவர்க்கு யாண்டு 'ங'ஆ-
4. வது சயங்கொண்ட [சோ]-

5. ழ மண்டலத்து புலியூர்
6. [கோட்டத்து] புழல் நாட்டு உரோ-
7. டகத் தூரோம் இக்கோட்டத்து-
8. க் காநப் பேறூர் நாட்டுத் தே-
9. வதாஙிருமுல்லை வாயி-
10. ல் அண்ணர் கோயிலிநுள்-
11. ளால் ஸ்ரீபாசுபத ஷேவர்க்கும்
12. சுஷூ ஷேவர்க்கும் பண்டாரம்
13. ஊற்றுக்காட்டு கோட்டத்-
14. து ஊற்றுக்காடு நாட்டு அச்சர-
15. பாக்கமாந ஸ்ரீ பராஙகநல்லூ-
16. ர்த் திருநல்லுழாந் இசக்க நறி-
17. வாளன் இத்தேவர்க்கும் பண்டார-
18. மாக குடுத்த பொன்நில் இத்-
19. தேவர் ஷேவகநிகள் பக்கல்
20. பொன் கொண்டு எங்களூர் தஞ்-
21. சை வீரன் சூற்றி கல்லநும் தஞ்-
22. [சை] வீரன் நாகன் அறியாநும்
23. அம்பத்துழான் சதிரன் ஒ-
24. ற்றியும் இத்தேவர்க்கு திருவ மிது-
25. னானாழி வற்றுக்கு விற்றுக்குடுத்-
26. த நிலம் பதிநெண் சாண் கோ-
27. லால் ஆயிரத்திரு நூறு குழிக்-

28. கும் நாங்களும் எங்களில் இ
29. சைந்த பொந் இத்தேவர் பண்டாரமா-
30. கத் திருநல்லுழாந் இசக்கந்-
31. அறிவாளந் குடுத்த பொ-
32. ந் இப்பொந் கொண்டு கோயி-
33. ல் வாசலாற் போந்த குடிமை-
34. களும் ஊர்த்த நிசுகளும் ம-
35. ற்று எங்களூர் சுட்டி[ன]வந்த இறை-
36. இறிலைக்கு சுட்டிவஷது எப்-
37. பேர்ப்பட்டதும் நாங்க-
38. ளே யிறுப்பதற்கு எங்களி-
39. ல் லிசைஞ பொன் கொண்டு
40. ஸநூ்ாதிதவ்ூ வல் இறையிலி-
41. ஷேவஷாநமாக இறையிழி-
42. ச்சிக் குடுத்தோம் இத்தே-
43. வர் ஷேவகூநிகளுக்கு ஊரோம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 352/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 10
வட்டம்	: திருவள்ளூர்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ.1228
ஊர்	: செஞ்சிப் பனப்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: 159/1929-30
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 1,2,12
அரசன்	: விக்கிரமசோழன்		

இடம் : ஜலகண்டீஸ்வரர் கோயில் கருவறைத் தென்புறச்சுவர்

குறிப்புரை : திருப்பணிக்காரணமாகக் கல்வெட்டு (1,2,12) கற்கள் மாறியுள்ளன. முறையே 1,2,12 எண்ணிடப்பட்டாலும் இது ஒரே கல்வெட்டின் தொடர்ச்சியாகும். விக்கிரமசோழனுடைய மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் இக்கல்வெட்டு மன்னனின் பத்தாம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டது. நடுவில்மலை (நடுநாடு)யில் உள்ள பெருமூர் நாட்டுகிழான் வடவாயிற் செல்வன் மனைவி(அகம்படியாள்) நங்கை, செஞ்சி ஜயமதீஸ்வரமுடைய மஹாதேவர் கோயிலில் இரண்டு சந்தி விளக்குகள் வைத்துள்ளார். கொற்றமங்கலக்கிழவனும் வெண்பாக்கத்தில் வாழ்ந்தவனுமான கொடை தந்தவளின் கணவர் சுட்டப்படுகிறார். கோயில் சார்பாகச் சிவப்பிராமணன் விளக்கெரிக்க முடிவுசெய்து காசினையும் பெற்றுக்கொண்டு அதன் வட்டி கொண்டு நிவந்தம் நடத்த உடன்பட்டுள்ளான். கோயில் பட்டர்களின் பெயர்களும் சாசனத்தில் உள்ளன. நாகங்கொற்றவன் அருள்வேலி - மகள் எனத் தந்தையும் சுட்டப்படுகிறார். இப்பெண் அகம்படியார் சாதியார் ஆவர்.

Summary : On the south wall of the central shrine in the Jalagaṅdīśvarar temple in the Senjivillage of Tirūvallūr taluk. Chōḻa Vikrama chōḻa dēva. Regnal Year 10 (1228 C.E.).

Bingins with the introduction Pūmādhu Punara etc. States that the Siva brāhmanās of the temple of Jayamatīśvaram - Uḍaiya Mahādēva at Senji in Maṇavil nādu a sub division of Manavil-kōṭṭam, received money from Agambadi Naṅgai wife of Vaḍavāyiṟ Selvaṉ, the headman (Kilan) of Koṟṟamaṅgalam, residing at Veṇpākkam a village in Naḍuviṉmalai, Perumūrnāḍu and agreed to have two twilight lamps in the temple. Nāgankoṟṟaṉ was the father the donor.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமாது புணரப் புவிமாது வளர நாமாது விளங்க ஜயமாது விரும்பத் தன் திரு[ப்]பது மலர் மன்நவர் சூட மன்நி-

2. ய வுரிமையில் மணிமுடிசூடிச் செங்கோல் சென்று திசைதொறும் அளப்ப வெங்கலி நீங்கி மெய்யறந் தழைப்பக் கலிங்கமிரியக் கடமலை நடாத்தி வளங்கொள்ளாழி

3. வரையாழி நடப்ப இருசுடரளவும் ஒருகுடை நிழற்கீழ் செம்பொன் வீர ஸிம்ஹாஸநத்து முக்கோகிழானடி-

4. களோடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேசரி பந்மரான திரிபுவன சக்ரவத்திகள் ஸ்ரீவிக்ரம சோளதேவற்கு யாண்டு பத்தாவது உ-

5. டையார் தேவகாநம் ஜயங்கொண்ட சோழமண்டலத்து மணவிற்கோட்டத்து மணவிற் நாட்டு செஞ்சி ஜயமிதீஸ்வரமுடைய மஹாதேவர்க்கு நாகங்கொற்றன் அருள்வேலிய-

6. . . . ன் மகள் நடுவின் மலைப் பெருமூர் நாட்டு வெண்பாக்கத்து கொற்றமங்கல[முடையான்]-

7. கிழான் வடவாயிற் செல்வன் அகமுடையாளகம்பிடி நங்கை வைத்த ஸந்திவிளக்கு இரண்டு இரண்டும் வைத்த பரிசாவது இக்கோயிற்காணி உ[டை]ய

8. சிவப்ராஹ்மணந் கவுசிகன் மதுராந்தக சோழபட்டனும் கவுசிகன் குழைந்த பட்டனும் கவுசிகன் அருள்வேலி பட்டனும் ஆத்ரயன் எனு செபக பட்டனும் பக்கல் குடுத்த காசு இரண்டு இக்காசு இரண்டும் இக்காசு இரண்டுங்

9. கைக் கொண்டு இவர்களும் இவர்கள் வம்ஸசத்தாரும் சந்த்ராதித்தவரை இந்த விளக்கு

10. இரண்டும் இக்காசிற் பொலிசை கொண்டு விளக்கெரிக்கக்கடவர்களான மைக்க . . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 353/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: திருவள்ளூர்	வரலாற்று ஆண்டு	: 13-ஆம் நூற்.
ஊர்	: செஞ்சிப் பனப்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 3
அரசன்	: மூன்றாம் இராசராசன்		
இடம்	: ஜலகண்டீஸ்வரர் கோயில் கருவறைத் தென்புறச்சுவர்		

குறிப்புரை : இத்துண்டுக் கல்வெட்டு, மூன்றாம் இராசராசன் காலத்தது ஆகும். நிலக்கொடை வழங்கிய விவரம் உள்ளது. முறையற்ற திருப்பணியால் முழுமையின்றி உள்ளது இக்கல்வெட்டு.

Summary : On a south wall of the Central Shrine in the same temple. Chōl̲a - Rājarāja III 13th Century. Badly damaged. Mention devedone lands.

கல்வெட்டு :

1. . . . . . த்திகள் ஸ்ரீஇராச ச . . .
2. . . . . . ரா . . . . . தேவதானம் . . . . .
3. . . . . . . தனான் தியாகமே
4. . . . . லிற் காணி உடை
5. . . . த நாயகன் தி . . . .
6. . . . . . டை ஒன்றும் . . . .
7. க்கு சநூ‍ாதித்த . . . .
8. பெருமாள் ப . . . .
9. து . . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 354/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 28
வட்டம்	: திருவள்ளூர்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ.1206
ஊர்	: செஞ்சிப் பனப்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: 163/1929-30
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 4
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: ஜலகண்டீஸ்வரர் கோயில் கருவறை - தென்புறச்சுவர்		

குறிப்புரை : மூன்றாம் குலோத்துங்கனுடைய ஆட்சியின்போது நாதங்கொற்றன் வாசுதேவனான காடு வெட்டிகள் மனிச்சரில் திருவன் செல்வன் என்பவன் செஞ்சி செனமதீச்சுரமுடைய நாயனார் கோயிலில் சந்திவிளக்கு வைக்க ஏற்பாடு செய்கிறான். இதற்காக அன்றாடு நற்பழங்காசு 2½ யைச் சிவப்பிராமணரிடம் தருகிறான். ஸ்ரீ என்பதற்குப்பதில் தமிழ் நடையில் ‘சீ’ என்றுள்ளது. மண்டலம் மற்றும் நாட்டின் பெயரின்றிக் கோட்டமே இதில் உள்ளது. காடுவெட்டி என்பதால் வன்னியர் எனலாம். மனிச்சரில் மனிதரில் என்று பொருள். வன்னிய இன மனிதரான என்று பொருள். இயற்பெயர் திருவன்செல்வன். தொடர் எண் 352-இல் வரும் நாகன்கொற்றன் வேறு இங்கு வருபவன் வேறு ஆகும்.

Summary : On the same wall. chōḻa Kulōttuṅga III. Regnal Year 28. (1206 C.E.). Records an agreement by the sivabrābmanās of the temple of Janamētīśvaram-Udaiya Nayanar to burn a lamp with the money received from Tiruvan Selvan Korran̲ Vāsudēvan Kāduvetti vanniya cast and gift current money 2½ that is Anradunar̲ Paḻankāsu. Cheṅgi is refered to as devadana of Tiruvengadam Uḍaiyār at Kāngipuram in Jayangonda Sōḻa Madalam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் மதுரையும் பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளின சீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு ‘உ௰அ’ ஆவது-
2. மணவிற் கோட்டத்து உடையார் திருவேகம்பமுடையார் தேவதானஞ் செஞ்சி செனமதீச்சுரமுடைய நாயநாற்கு நாதங் கொற்றன் வாசு தேவநா[ன]-
3. காடுவெட்டிகள் மனிச்சரில் திருவன்செல்வன் வைத்த சந்திவிளக்கு ஒன்று ஒன்று வைத்த பரிசாவது இக்கோயிற் காணியுடைய சிவஸ்ராமணங்கவுசியந் குனிச-

4. ராந திருநட்டப் பெருமாளும் அபமத்தி னாயகன் திருநட்டப் பெருமாளும் பக்கல் குடுத்த அன்றாடு நற்பழங்காசு இரண்டரையுங் கைக்கொண்டு நாங்களும் எங்கள்-

5. வம்சத்தாரும் இக்காசில் பொலிசை கொண்டு சந்திராதித்தவரை எரிக்கக் கடவோமாநோம் இவர்கள் வேண்ட அமுதநேன் உடையாந் . . . . . . .நி . . . ப்பமுடை . . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 355/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 14
வட்டம்	: திருவள்ளூர்	வரலாற்று ஆண்டு	: 1290
ஊர்	: செஞ்சிப் பனப்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: 160/1929-30
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: பாண்டியன்	ஊர்க் கல்வெட்டு எண்	: 5
அரசன்	: சுந்தர பாண்டியன்		

இடம் : ஜலகண்டீஸ்வரர் கோயில் கருவறை அதிட்டானம் குமுதப்படை.

குறிப்புரை : ஜலகண்டீஸ்வரர் கோயிலில் பாண்டியர் கல்வெட்டு ஒன்று மட்டுமே உள்ளது. சுந்தர பாண்டியனுடைய 14-ஆவது ஆட்சியின்போது வழங்கிய விளக்குக் கொடையை இது குறிப்பிடுகிறது. ஊர்ப்பெயர் பாணன்பாக்கம் என்றுள்ளது. இதுவே பணப்பாக்கமாக மாறியுள்ளது. பாணபாக்கத்து கொத்தவரிபல் வடுக பாளை மகன் நாச்சி ஆழ்வான் கொடையாளி ஆவான். சிவப்பிராமணர்கள் கொடையைப் பெற்றுள்ளனர். தெலுங்குமொழிபேசும் மரமேறி சாணார்கள் அல்லது கட்டிடத்தொழிலாளி மற்றும் இராஜுகர்களையும் இச்சொல் குறிக்கலாம். பாணன்பாக்கம் பாணசிற்றரசுடன் தொடர்பு படுத்தலாம்.

Summary : On the same wall. Pandiya - Sundra Pāndiyadēva. Regnal Year 14.

States that the Siva brāhmanās of the temple of Janameātīsvaram Udaiya Nāyanār at Senji, a dēvadāna of Tiruvēkamban̲ Uḍaiyār, received money from a certain Nāchchiyāl̲an of Pānapākkam and agreed to burn a twilight lamp in the temple. Panapakkam name is related to Bhana dynasty.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சட பநர் திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு யிச வது உடையார் திருவேகம்பமுடைய நாயனார் தேவதானம் செஞ்சி நாயனார் ஜனமேதீஸ்வரமுடைய நாய-
2. னார்க்கு பாணன்பாக்கத்து கொத்தவரில் வடுக பாளை மகன் நாச்சி ஆழ்வானேன் வைய்த்த சந்தி விளக்கு ஒன்று இவ்விளக்கு ஒன்றுக்கும் இக்கோயிலிற் காணிஉடைய சிவஸ்பிராமணரிற் கவுசிகன் சுஹிரீத்தி நாயகனும்-
3. ஸவிதமன கூத்தபட்டன் பிள்ளானும் கைக்கொண்ட சந்திவிளக்கு ஒன்றுக்கு மாடை ஒன்று இம்மாடை ஒன்றுக்கும் சிவபிராமணரும் ஒன்றும் சந்திராதித்த வரை எரிக்கக்கடவோம் இவ்விருவரோம்.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 356/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: திருவள்ளூர்	வரலாற்று ஆண்டு	: 14-ஆம் நூற்.
ஊர்	: செஞ்சிப்பனப்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: 164/1929-30
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: யாதவர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 6
அரசன்	: வீரநரசிங்கதேவர்		

இடம் : ஜலகண்டீஸ்வரர் கோயில் கருவறை அதிட்டானம் குமுதப்படை.

குறிப்புரை : வீரநரசிங்கதேவயாதவராயன்திருவேகம்பமுடையநாயனார்க்கு இவ்வூரில் வசூலிக்கப்படும் பல்வேறு வகையான வரிகளும் கோயிலுக்கு வழங்க மன்னர் ஆணையிட்டுள்ளார். செங்கழுநீர் திருப்பள்ளித்தாமஞ்செய்கிற ஆட்களுக்கு மேற்படி வரிவருமானம் சென்று சேரவேண்டும். பறையர் பேரில் இனவரி இருந்துள்ளது தெரிகிறது. பறையர் பேரால் வரியும் பறைத்தறியும் சாசனத்தில் காண்கிறோம்.

Summary : On the south wall of the central shrine in the same temple. Yadhava dynasty king - Vīra Naraśingadēva - 14th Century.

Records an order of Vīra-Naraśingadēva alias Yadavaraya to the Ūravar of Seṅgi and Pāṇapākkam of the men rearing and suppling lilies (Sengaḻunīr) to the temple of Tiruvēkambaṉ Uḍaiyār. Mentions verioous taxes in this inscreption.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீயாதவர்க்குந் தொடுப்பார்க்கும் வீர நாரசிங்க தேவரான யாதவராயர் இலக்கைக்கு விட்ட திருமுகப்படி வைத்த பாக்கன் மலை த . . . . ட் செஞ்சி ஆழ் . . . . யவர் . . . . . ட்ட திருவேகம்பமுடைய நாயனார்க்குத் திங்களூரில் முன்பு பழனீங்கலாக தங்கி வருகிற வெட்டியும் அரிமுக்கையும் புடவை முதற்றிரைக்காசும் நீக்கிச் சீபண்டாரத்துக்குச் சென்று வருகிற-

2. கார்த்திகைக் காசும் வகைந்த காசுங் கண்காணி பேரால் வந்த காசும் உகச்சர் பேராற் வந்த காசும் பறையர் பேரால் இனவரிக்காசுஞ் . . . . பது தறி பறைத்தறி . . காசும் இவ்வூர்க்கில் நிலத்துக்கு வருங்காசு கடமை யுட்பட மற்றும் எப்பேற்பட்ட காசு கடமையுஞ் சிறுபாடி காவல் எடுத்துக்கொட்டியும் உட்படி மற்றும் எப்பேற்பட்ட நெல்லாயமு மகப்பட வுந் திருமுகப்படி சீறூர் முன்பு சீபண்டாரத்து-

3. ச்செந்று வருகிற கண்காணியுங் கார்த்திகைக் காசும் வகை [வி] க்கெண்ணையும் வாணிகர் பேரால் இன வரிக்காசுஞ் சாலியத்தறி அச்சுத்தறி . . . வா . . ளை . . . காசும் இந்நிலத்துக்கு மேயு . . . இப்படி மற்றும் மையுஞ் சிறுபாடிகாவல் அரிமுக்கையும் எடுத்துக்கொட்டி யுமுட்பட மற்று மெப்பேறபட்ட நெல்லாயமுமகப் பட இவ்வூர்கள் இவ்வாண்டு முதல் உடையார் திருவேகம்பமுடைய நாயனார்க்குச் செங்கழுநீர்த் திருப்பள்ளித் தாமஞ் செய்கிற ஆட்களுக்கு இட்டோம் இவ்வாண்டு முதல்-

4. தோறும் இப்படியால் வந்த காசு கடமையும் நெல்லாயமாக விட்டோம் வீர நரசிங்க தேவர் இது ஊஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 357/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: திருவள்ளூர்	வரலாற்று ஆண்டு	: 13-ஆம் நூற்.
ஊர்	: செஞ்சிப்பனப்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 7
அரசன்	: –		

இடம் : ஜலகண்டீஸ்வரர் கோயில் கருவறை அதிட்டானம் குமுதப்படை மேற்கு.

குறிப்புரை : மிகவும் சிதைந்துள்ள இக்கல்வெட்டு சிற்பியின் பெயரையும் அஞ்சினான் புகலிடத்தையும் குறிப்பதாகத் தோன்றுகிறது.

Summary : On the basement of the central shrine in the same temple. Damaged. Mentions an individual name and Anjinān pugalidam. It belongs to 13th Century.

கல்வெட்டு :

1. சிற்பாத்தன் சிவன் செநமேதியன் பொற் பத்தனேன் அஞ்சினான் புந்தியுட் சொறிபத்த-
2. ரமமாக . . . தந்து வணமலை . . . . . பகை . . . ணீக்கி . . . . . கத்தி . . . . றுவர்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 358/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: திருவள்ளூர்	வரலாற்று ஆண்டு	: 13-ஆம் நூற்.
ஊர்	: செஞ்சிப்பனப்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 8
அரசன்	: –		

இடம் : ஜலகண்டீஸ்வரர் கோயில் அர்த்த மண்டபச்சுவர்.

குறிப்புரை : அரசன் பெயர், ஆட்சியாண்டு போன்றவை எதுவுமில்லாத இத்துண்டுக்கல்வெட்டு தொடக்கப்பகுதி கிடைக்கவில்லை. கல்லின் ஒரு பகுதி இல்லாததால் முழுவாசகம் அறிய முடியவில்லை. எழுத்தமைதியை யொட்டி கி.பி.13-ஆம் நூற்றாண்டு எனலாம். கொடையாளன் அபிமுத்தன் வேறு செஞ்சிக் கல்வெட்டுகளிலும் வருகிறான். சந்திவிளக்கு எரிக்க 25 காசுகளைச் சிவப்பிராமணரிடம் தந்துள்ளான். கல்வெட்டு எண் ஒன்பதிலும் இவன் கொடை இடம் பெறுகிறது.

Summary : On the south wall of the ardhamaṇḍapa in the central shrine in the same temple. One portion is missing. It belongs to 13th Century. An individual named Abimuttaṉ donated 25 kāsu to sivabrāhmanās for temple lightining purpose. Mentions sivabrāhmanās names.

கல்வெட்டு :

1. பய சிவப்பிராமணரோ . . . .
2. . . . .
3. ம் அபிமுத்த நா . . . . .
4. காசு 'உ௰ரு' இப்ப . . .
5. ளும் எங்கள் வ . . .
6. வரை விளக்குத் . . . .
7. . . . . . . கவுசிகன் குத் . . . . . .

8. . . . . [இ]ப்படிக்கு இ . . . . . .

9. பெருமாள் எழு . . . . . .

10. [தி]ருவேகம்ப[ன்] . . . . . .

11. உடையான் . . . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 359/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 18
வட்டம்	: திருவள்ளூர்	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1234
ஊர்	: செஞ்சிப்பனப்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: 161/29-30
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: பிற்காலச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 9
அரசன்	: மூன்றாம் இராசராசன்		

இடம் : ஜலகண்டீஸ்வரர் கோயில் தெற்குச் சுவர்.

குறிப்புரை : மூன்றாம் இராசராசனுடைய ஆட்சியின்போது நாகங்கொற்றகப் பல்லவரையன் என்பவன் செஞ்சி ஜனமேதீஸ்வரமுடையார் கோயிலில் சந்திவிளக்கு வைக்க ஏற்பாடு செய்கிறான். கோயில் சிவப்பிராமணர்கள் காசுகளைப் பெற்றுக்கொண்டு விளக்கு எரிக்க உடன்படுகின்றனர். இதே கல்வெட்டில் முன்கல்வெட்டு ஒன்றில் கூறப்பட்ட கொடையாளி அபிமுத்தன் அரைவிளக்கு வைத்துள்ள விவரமும் உள்ளது. இங்குள்ள சிவப்பிராமணர்கள் வேறு கல்வெட்டுகளிலும் வருகின்றனர்.

Summary : On the south wall of central shrine of the Siva temple in the village. Chōḻa dynosty. Rājarāja III. Regnal Year 18th.

States that the siva brahmanas of the temple of Jayamētīśvaran-Uḍaiyār received money from Nāgan Koṟṟan Pallavaraiyan.

கல்வெட்டு :

1. இராசராச தேவர்க்கு யாண்டு ௰அ ஆவ[து]-
2. செஞ்சி ஜனமேதீசுரமுடையார்க்கு நாகங்[கொற்றன் . . . .
3. கப் பல்லவரையனேன் வைத்த சந்திவிளக்கு . . . . .
4. டைய சிவப்ராஹ்மணன் கவுசிகன் குனிச்சரன் . . . . . .
5. [தி]ருநட்டப்பெருமாளும் கைக்கொண்ட . . . . . .
6. கைக்கொண்டு நாங்களும் எங்கள் வ . . . .
7. த்த வரை விளக்கு எரிக்க கடவோம் . . .
8. ட்டன் எழுத்து இவை அபிமுத்தநாய . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 360/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: திருவள்ளூர்	வரலாற்று ஆண்டு	: 13-ஆம் நூற்.
ஊர்	: செஞ்சிப் பனப்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 10
அரசன்	: மூன்றாம் இராசராசன்?		
இடம்	: ஜலகண்டீஸ்வரர் கோயில் தெற்குச் சுவர்.		

குறிப்புரை : இக்கல்வெட்டு சில இடங்களில் சிதைந்து விட்டதால் அரசன் பெயர், ஆட்சியாண்டு போன்ற விவரங்கள் அறியமுடியவில்லை. எனினும் கல்வெட்டில் வரும் சிவப்பிராமணர்களின் பெயர்கள் இங்குள்ளவை வேறு சில கல்வெட்டுகளில் வருவதால் மூன்றாம் இராசராசன் ஆட்சியின்போது வெட்டப்பட்டது எனலாம். இந்திய அரசு ஆண்டறிக்கையில் மன்னன் பெயரும் ஆட்சியாண்டும் இருப்பதால் அவையே இங்கு தரப்பெறுகின்றன. நாகன் கொற்றன் வாசுதேவன் ஆதிநாதனின் வெள்ளான்பிள்ளை (உழுகுடி என்க)களில் கொழுந்தனாகிய தியாகமேகப்பல்லவரையன், சிவப்பிராமணர்களுடன் விளக்கெரிக்க உடன்பாடு காண்கிறான். கண்ட கோபாலன் மாடை சாசனத்தில் உள்ளது.

Summary : On the south wall of the central shrine of the Siva temple. Chō̱ḻa-dynosty Rājarājadeva III. Regnal Year 13th Century.

Records an agreement by the Sivabrāhmanās to burn a twilight lamp with the money received from Ko̱ḻundan̠ alias Tiyāgamēgha-pallavaraiyan̠, a tenant of Nāgan̠ kor̠ran̠ vasudēvan̠ adhināthan̠.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்தி ஸ்ரீராஜராஜீஸ்வரம்-
2. உடையார் திருவேகம்பமுடையார் வாசுதேவன்
3. ஆதிநாதன் வெள்ளான் பிள்ளைகளில் கொழுந்தன் தியாகமேகப் பல்லவரையன்
4. ஒன்று வைத்த பரிசாவது இக்கோயி . . . .
5. ன் பெருமாள் பட்டனும் அபிமுத்த-

6. கண்ட கோபாலன் மாடைக்கு மா . . . .

7. வம்ஸத்தாரும் இம்மாடையிற் பொலிசை . . . . .

8. இப்படிக்கு இவை குனிச்சரன் . . . . . .

9. கன் திருநட்டப்பெருமாள் எழுதி . . . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 361/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 11
வட்டம்	: திருவள்ளூர்	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1227
ஊர்	: செஞ்சிப்பனப்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: 165/1929-30
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 11
அரசன்	: மூன்றாம் இராசராசன்		

இடம் : ஜலகண்டீஸ்வரர் கோயில் கருவறை தெற்குச்சுவர்.

குறிப்புரை : மூன்றாம் இராசராசனுடைய பதினொன்றாவது ஆட்சியாண்டின் போது சிற்றரசனாக இருந்த யாதவராயன் என்பவன் ஜனமேதீசுரமுடைய நாயனார் கோயிலுக்கு ஐந்து வேலிநிலம் தேவதானமாக வழங்கியுள்ளான். மேலும் கடமை, ஆயம், நெல்லாயம், காசாயம் எனச் சில வரிகளையும் அளித்துள்ளான். சாசனத்தில் பூண்டி, பாரூர், செஞ்சி, திங்களூர் போன்ற ஊர்கள் இடம் பெறுகின்றன. 5 வேலி நிலத்தில் களர் நிலமும் நத்தமும் அடக்கமாகும். ஆணை என்ற பொருளில் ஓலை இடம் பெறுகிறது. எண். 12 நீக்கப்பட்டது.

Summary : On the south wall of the central shrine of the same temple. Chōḻa-dynasty. Rājarāja III. Regnal Year II (1227C.E.).

Records the gift of five vēli lands at Pārūr made tax-free by Vīranarasīnga dēvā alias Yādavarāya to the temple of Janamētīsaram - udaiya nayanār at Senji.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீஇராஜாராஜதேவர்க்கு யாண்டு ௰க வது ஜனமேதீசுரமுடைய நாயனார்க்கு பூ[ண்]டி நிலத்துக்கு திருமுகம் . . . . . . [யா]

2. தவராயன் ஓலை பாரூர் ஊரவர் கண்டு செஞ்சியில் ஆளுடையார் ஜனமேதிசுரமுடைய நாயனார்க்குத் திங்களூர் நத்தத்துக்கு மேற்கும் மேல்பாற்கெல்லை தென்பாற்கெல்லை களருக்கு . . . .

3. கும் உட்பட்ட நிலம் ஐஞ்சு வேலியும் இந்நாயனார்க்குத் தேவதானமாக பதிநொன்றாவது முதல் விட்டோம் இந்நிலத்தால் வந்த கடமையும் ஆயமும் வெட்டி ஊர் எடுத்துக்கொட்டியும் இந்நில-

4. த்தால் வந்த காசு கடமையும் மற்றும் எப்பேற்பட்ட நெல்லாயமுங் காசு கடமையும் உட்பட இந்நாயனா[ர்]க்கு தேவதானமாக விட்டோம் வீரநாரசிங்கதேவ . . பய சிவஸ்ராஹ்மணன் ஜமதண்ட னாயக நம்பி இது ஸ்ரீமாஹேஸ்வர ரக்ஷை.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 362/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 16
வட்டம்	: திருவள்ளூர்	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1232
ஊர்	: செஞ்சிப்பனப்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: 161/1929-30
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 13
அரசன்	: மூன்றாம் இராசராசன்		

இடம் : ஜலகண்டீஸ்வரர் கோயில் அர்த்த மண்டபத் தெற்குச் சுவர்.

குறிப்புரை : மூன்றாம் இராசராசனுடைய ஆட்சியின்போது ஜனமேதீசுவரமுடையார் கோயிலில் கூந்தலாழ்வான் என்பவன் ஒரு விளக்கு அளித்து அது தொடர்ந்து எரிய இரண்டரை காசு அளித்துள்ளான். தானம் தந்தவனின் தந்தை இங்கே சிறப்பாகக் கூறப்பட்டுள்ளார். நாகங்கொற்றன் ஜகத்தண்டநாயகன் வெள்ளான் பிள்ளைகளில் ஒருவனே தானம் தந்துள்ளான். வெள்ளான் பிள்ளை இரண்டும் ஒரே சமூகத்திற்குரியதாகும். தண்டநாயகன் படைத்தலைவன் எனலாம். வெள்ளாளன் பிள்ளைகளில் என்பதை வேளாளரின் நிலம் உழுது பயிரிடும் பணியாள் என்றும் கூறலாம்.

Summary : On the south wall of the central shrine of the Siva temple in the Senji. Chōḻa Rājarāja III - Regnal year 16th Century. 1232 C.E.

States that the Sivabrāhmans of the temple received money from a certain Kūndaḷāḻvan a tenant of Nagan koṟṟaṉ jagadan daṇḍanāyaka and agreed to burn a twilight lamp. This document was written by Dēvargal Sundaraperumal of Uttaramēlur.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ௳ திரிபுவனச் சக்கரவத்திகள்
2. ஸ்ரீஇராஜராஜ தேவர்க்கு யாண்டு ௰௬ வது உடை-
3. யார் தி[ரு]வேகம்பமுடையார் தேவதானம்
4. செஞ்சி ஜனமேதீஸ்வரமுடையார்க்கு நாகங் கொ-
5. காற்றன் ஜகத் தண்ட நாயகந் வெள்ளான் பி-
6. ள்ளைகளில் கூந்தலாழ்வான் வைத்த சந்தி விளக்-

7. கு ஒன்று வைத்த பரிசாவது இக்கோயில் காணி உடை[ட] . .வண்-
8. ணன் கவுசிகன் குனிச்சான் பெருமாள் பட்டனும் சே-
9. யகன் திருனட்டப்பெருமாளுங் கைக்கொண்ட நற்ப-
10. ழங்காசு இரண்டரையுங் கைக்கொண்டு நாங் . . . . .
11. வஸ்த்தாரும் இக்காசிற் பலிசைக்குச் சந்த்ராதித்தவரை
12. எரிக்க கடவோமானோம் இப்படிக்கு இவை
13. குநிச்சான் பெருமான் பட்டன் எழுத்து இ-
14. வை கவுசிகன் அபிமுத்த நாயகன் திருநட்டன் எழு-
15. த்து . . . . இப்படிக்கு அறிவேன் உடையார் . . . . .
16. முடையார் கோயிற் கணக்கு உத்தரமேலூர்
17. தேவர்கள் . . . . . . சுன்தரப் பெருமாளேன்.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 363/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 32
வட்டம்	: பொன்னேரி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1282
ஊர்	: மேலூர்	இ.க. ஆண்டறிக்கை	: 137/1916
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: S.I.I. 137
எழுத்து	: தமிழ்		
அரசு	: தெலுங்குப் பல்லவர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 1
அரசன்	: விஜயகண்ட கோபால தேவர்		
இடம்	: திருமணங்கீஸ்வரர் கோயில் கருவறை வடக்குச் சுவர்.		

குறிப்புரை : பிற்காலச் சோழர் காலத்தில் சிற்றரசராகத் தொண்டை மண்டலத்தில் அரசு புரிந்த தெலுங்குச் சோழர், யாதவராயர் போன்றோர். சோழர் பலம் குன்றிய நிலையில் தனியரசு செலுத்த முற்பட்டனர். தெலுங்குச் சோழமன்னன் விஜய கண்ட கோபாலனுடைய 32-ஆவது ஆட்சியாண்டின் போது இக்கல்வெட்டு வெட்டப்பட்டது. ஜெயங்கொண்ட சோழமண்டலத்துப் புழல் கோட்டமான விக்கிரம சோழ வளநாட்டு நாயிறு நாட்டு வல்லூரில் எழுந்தருளியுள்ள திருமணங்கீஸ்வரமுடையார் கோயில்பூசை, திருவமுது போன்றவற்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. திருப்பாலைவனமுடைய நாயனார்க்குச் சிலை ஏற்படுத்தித் தந்த சிறுகுமார் உடையான் துலையாத செல்வன் என்பவன் சந்திராதித்தவரை நிவந்தம் ஏற்படுத்தித் தினம் குறுணி நெல் வழங்கி உள்ளான். திருமணங்கீஸ்வரர் கோயில் பூசை முதலியவற்றிற்கு நூறு பணம் முதலீடாக அளித்துள்ளனான். கோயில் காணிஉடைய சிவப்பிராமணர் பணம் பெற்றுக்கொண்டு நிவந்தம் நிறைவேற்ற உறுதி பூண்டு, கோயிலில் கல்வெட்டும் வெட்டி வைத்துள்ளனர்.

சிவப்பிராமணன் பாரத்துவாஜ கோத்திரத்து சேனாபதி பட்டன் மற்றும் கோசிக கோத்திரத்து நாற்பத்தெண்ணாயிர பட்டன் என்ற இருவரும் மேற்படி நிவந்தம் நடத்தித்தர உடன்படுகின்றனர். பூசை திருவமுதுக்குத் தினம் 1 குறுணி நெல்தரப்பட்டது. கல்வெட்டில் வரும் வல்லூர் என்பதே தற்போது மேலூர் என வழங்கப்படுகிறது. சிறுகுமார் உடையான் துலையாத செல்வன் திருப்பாலைவனம் உடைய நாயனாரைப் பிரதிஷ்டை செய்தான் என்பதால் திருப்பாலைவனம் கோயிலில் செப்புச்சிலை செய்து வைத்தது தெரிகிறது. திருப்பாலைவனம் கோயில் கல்வெட்டுகள் திருவள்ளூர் கல்வெட்டுகள் முதல் தொகுதியில் காணலாம்.

Summary : On the north wall of the central shrine in the Tirumaṅangā Uḍaiyār Tambirānār at Mēlūr (Ponnēri taluk). king - Vijayagaṇḍa gōpāladēvar. Regnal Year 32.

This inscription refers to the gift of 100 panam to the siva brāhamanā for worshipping and offerings to the image of Tiruppālaivanammudaiya - nayanar installed by Sirukumar - udaiyān tulaiyāda selvan in the temple. Also Tirumaṅaṅgā udaiya nayanār koil at Vallūr in Nāyirunāḍu. Now Vallur is called Melur.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவத்தி-
2. கள் ஸ்ரீ விஜய கண்ட கோபால் தேவற்கு-
3. யாண்டு ௩௰௨ வது இஷப நாயிற்று ஹூர்வ் பக்ஷத்து-
4. ஸப்தமியும் நாயிற்றுக் கிழமையும் பெற்ற பூ-
5. சத்து நாள் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து பு-
6. ழல்க் கோட்டமான விக்ர சோழவள நாட்டு-
7. நாயறு நாட்டு வல்லூர் உடையார் திருமணங்-
8. காவுடைய நாயனார் கோயிலில் சிறுகுமர் உ-
9. டையான் துலையாதசெல்வன் ப்ரதிஷ்டித்த [வரை]-
10. திருப்பாலைவனம் உடையநாயனார் இவ்வூர்ச்சி-
11. ருமூருடையான் திருப்பாலைவனமுடையான் துலை-
12. யாதசெல்வன் சந்த்ராதித்தவரை செல்லுவதாக இன்னா-
13. யனார்க்குப் பூசை அமுதுபடிக்கு நாள் ஒன்றுக்கு
14. நிச்சயித்த ௬ ௩ இன்நெல்லுக்கு குறுண்ணிக்கும் இ-
15. ன்னாயனார் கோயில் சிவப்பிராமணர் ஹாரத்வா-
16. ய[ஜ] கோத்ரத்துச் சேனாபதி பட்டன் உள்ளிட்டாரும்
17. கௌசிக கோத்ரத்து நாற்பத்தெண்ணாயிர பட்ட-
18. ன் உள்ளிட்டாரும் இவ்வனைவரோம் இத்திருப்பா-
19. லைவனமுடைய நாயனார்க்குப் பூசை அமுது ப-

20. படிக்கு நாள் க க்கு இவர் நிச்சயித்த நெல்லுக் குறு-

21. ண்ணியும் சந்த்ராதித்த வரை நடத்தக் கடவோமாக இ-

22. வர் பக்கல் கைக்கொண்ட அன்றாடு நடக்கும் நற்பணம்-

23. ள இப்பணம் நூறும் கைக்கொண்டு இந்நாயனா[ன]-

24. ரப் பூசிக்க கடவ சிவப்ராமணர் முன் நின்றார் இ-

25. ருவர் நடத்தக் கடவோமாகக் கல்வெட்டிக் கு-

26. டுத்தோம் இக்கோயில்க் காணி உடைய சிவ-

27. ப்ராமணர் இப்படி சம்மதித்து இப்பணம் நூறும்

28. கைக்கொண்டு கல்வெட்டிக் குடுத்தோ-

29. ம் இவ்வனைவரோம் ஸ்ரீமாஹேஸ்வரரெ–

30. க்ஷ உ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 364/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 16
வட்டம்	: பொன்னேரி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1232
ஊர்	: மேலூர்	இ.க. ஆண்டறிக்கை	: 161/1929-30
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 2 மற்றும் 3
அரசன்	: –		

இடம் : திருமணங்கீஸ்வரர் கோயில் கருவறை வடக்கு மற்றும் மேற்குச்சுவர்.

குறிப்புரை : இக்கல்வெட்டு, அரசன் பெயர், ஆட்சியாண்டு போன்றவை இல்லாமல் துந்துபி ஆண்டு ஐப்பசி மாதம் 15-ஆம் தேதி என ஆரம்பமாகிறது. பஞ்சாங்க குறிப்புமில்லை. எனினும் இடையில் திருமலை நாயக்கருக்குப் புண்ணியமாக என வருகிறது. மதுரை நாயக்க மன்னரான திருமலை நாயக்கரை இது குறிக்காது. அவருடைய காலம் 17-ஆம் நூற்றாண்டாகும். தொண்டைமண்டலத்தில் இருந்த ஒரு நாயக்கர் இவர் எனலாம். விஜயநகரப் பேரரசின் கீழ் சிற்றரசராக இருந்திருக்க வேண்டும். ராச்சவிட்ட நாயக்கருக்குப் புண்ணியமாக நாயக்கருடைய முத்திரை மனுஷர் திருமலை நாயக்கர் கட்டளை என்பதால் இவர் சிற்றரசர் எனலாம். ஊர்க்கல்வெட்டு 2 மற்றும் 3 ஆகப்படியெடுத்திருப்பினும் ஒரே கல்வெட்டின் தொடர்ச்சியாகும். புழல் கோட்டமான வல்லூர் தம்பிரான் திருமணங்காவுடைய தம்பிரானார் பொருட்டு கொடை வழங்கப்படுகிறது. 56 தேசத்து வணிகர்முதலிய பல குழுக்கள் வல்லூர் உடையார் திருவமுதுக்காக நெல் வழங்க முடிவுசெய்கின்றனர். திருமலையின் உத்தரவுக்கிணங்க விழாக்களுக்கும் ஏற்பாடு செய்கின்றனர். 56 தேசம் எனக்குறிப்பிட்டாலும் கீழ்க்கண்ட ஊர்களே கல்வெட்டில் உள்ளன. சந்திரகிரி, திருப்பதி, காளஹஸ்தி, மண்டியம், வேலும்பாடி, நகரி, ஆரணி, கொத்தப்பாளையம், சோழப்பட்டை, சோழபுரம், கோடம்பாக்கம், புலியூர், மயிலாப்பூர், முத்திரைமனுடர் மன்னரின் உத்தரவு பெற்றவர். மடாதிபதி பொருட்டும் முத்திரைமனுடர் உண்டு. (காண்க திருவாவடுதுறை ஆதீன வரலாறு ச. கிருஷ்ணமூர்த்தி.) கீழையூர் வேளாளர், திருமணங்காபண்டாரத்தார், வியாபாரிகள், இடையர், செம்படவர், இழைமூஞ்சி(நெசவாளர்?) கணக்குப்பிள்ளை ஆகிய சாதிகள் ஒரு (பணம்) உபையம் செய்ய வேண்டும். முதலியார் மட்டும் இரண்டு (பணம்) உபையம் செய்ய வேண்டும். முதலியார் செல்வம் படைத்த உயர்குடியினர். எனவே இரண்டு பணம் உபயம் செலுத்த வேண்டும்.

Summary : On the north and west wall of the central shrine in the same temple. Period 16th Century. 1232 C.E.

Records a gift of Magamai to the temple of Tirumaṅga udaiya tambirānār by the residents of various villages for the merit of Rachchavitti-nayaka made under order of his agent Tirumalai nāyaka. Various casts to bear certain festival charges. Mudaliyar cast only pay two panam Ubaiyam. Other casts pay only one panam.

கல்வெட்டு :

1. துன்துபி வருசஂ ஐப்பசி மாதம்
2. ௰௫ க்கு ஸ்ரீஉத் சந்திரகிரி திருப்பதி
3. காலஹஸ்தி மண்டியம் வேலாம்
4. பாடி தொண்டைமானாற்றூர் நாரண
5. புரம் நகரி ஆரணி கொத்தப் பாளை-
6. யம் நல்லாற்றூர் பாளையம் முத்-
7. தாம் மேடு சேரம்படிப்பூண்டி கொ-
8. ள்ளூர் சோழப்பட்டடை சோழபுரம்
9. கோடம்பாக்கம் புலியூர் மயிலா-
10. ப்பூர்முதலாந அன்பத்தாறு தேச-
11. த்து பலரும் புழல்க் கோட்டமா-
12. ந வல்லூர் தம்பிரானாற் திருமணங்-
13. காவுடைய தம்பிரானாற் இருமழிப-
14. யம்மாக வல்லூர் ஷெசத்தா ரும-
15. [பி]டிச்ச யெருத்துக்கு களஞ்சியத் தி-
16. லே நெல்லுகொண்ட யெருத்து
17. நற்பணம் நெல்லுக்கு நூறுபொதிக்கு குடுத்-
18. தோம்னூறு பொதிக்கு ஒருபணமா
19. கராச்சவிட்ட னாயக்கருக்கு புண்ணி-

20. யமாக னாயக்கருடைய முத்தி-
21. ரை மனுஷர் திருமலை னாயக்கர்
22. கட்டளையிடுகையில் னாம் இந்த ப-
23. டி சந்திராதித்தவரையும் நட-
24. த்தக் கடவோமாகவும் ஸம்மதித்து இந்த
25. நெல்க் கொண்டு திருமணங்கா-
26. வுடைய தம்பிரானார்க்கும்
27. இந்தத் தன்மம் மாதம் மாதம் தப்பாமல் இந்த முதல் க்-
28. காத்தாரும் கடை இ[க்]கூட்டகளும் . . . . .
29. கவும் இந்த பொதிவகையில் வந்த தா[ரண] வருஷ . . . .
30. வும் வாகைப்படிக்குப் போக . . . ங் கீழையூர்
31. வேளாளர்க்களும் மானியம் மெ . . . டாரும் ஒரு உபைய்-
32. யமும் திருமணங்கா ஊராரும் பண்டத்தாரு-
33. ம் ஒரு உபையமும் வியாபாரிகள் ஒரு உபை-
34. யமும் யிடையரும் சிவம்படவரும் இழை மூ-
35. ஞ்சிகளும் ஒரு உபையமும் முதலிகளில் இரண்டு உபையமும்
36. கணக்கபி[ள்]ளைகள் ஒரு உபையமும் நடத்தக் கடவோம் மாகவும்
37. இதிலும் அம்மாவாசைப்படிக் குறைப[ட்]டதே யுண்டானால்
38. திருமணங்கா உடைய நயினார் கோயில் முதலிலே யீட்டு
39. நடத்தக் கடவாராகவும் திருமலை நாயக்கர் வைச்ச தென்னை மரம்
40. மரம் அம்[மா]வாசை படிக்கே நடத்தக் கடவர்கள்ளா[க]-
41. வும் இத்தன்மத்து[க்கு] இயாதொ-
42. ருத்தர் அகிதம் நினைத்தே யுண்டா-
43. னால் தேவருக்கும் தேசங்களுக்கும்
44. நரகம்மாய் போக கடவார்கள்.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 365/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 3
வட்டம்	: பொன்னேரி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1253
ஊர்	: மேலூர்	இ.க. ஆண்டறிக்கை	: 140/1916
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: S.I.I.140
எழுத்து	: தமிழ்		
அரசு	: தெலுங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 4
அரசன்	: விஜய கண்ட கோபாலதேவர்		
இடம்	: திருமணங்கீஸ்வரர் கோயில் கருவறை மேற்குக் குமுதம்.		

குறிப்புரை : விஜய கண்ட கோபால தேவனுடைய ஆட்சியின் போது ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துப் புழற் கோட்டத்து நாயறு நாட்டு வல்லூர் உடையார் திருமணங்காவுடைய நாயனார்க்குத் தினம் விளக்கெரிக்கும் பணியில் சிவப்பிராமணர்கள் ஈடுபட்டுள்ளனர். சிவப் பிராமணர்களின் பெயர்கள் சாசனத்தில் உள்ளன. அவ்வாறே கோயில் கரணத்தார் பெயர்களும் உள்ளன. கரணத்தாருள் ஒருவர் பெயர் சிவஞான தேவர் என்பதாகும். சிவ ஞானம் என்ற சைவ சித்தாந்த நூல் இயற்றிய வேளாளர் மெய்க்கண்டார் ஆவார். சிவஞான சித்தி எழுதிய அருள் நந்தி அவருடைய சீடர்.

Summary : On the west wall of the same shrine. Vijayagaṇḍagōpāla dēvar. Regnal year-3. Built in at the end. Gift of a lamp to the temple of Thirumaṅgaudaiyanāyanār. Mentions temples sivabrāhmana and karanattar names.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் விசைய கண்ட கோபால தேவற்கு யாண்டு 'ந' வது மகர நாயற்று வூஷ பக்ஷத்து ஸுமியுஞ் திங்கட் கிழமையும் பெற்ற உத்திராட்டதி நாள் ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் புகழ்கோட்டத்து நாயறு நாட்டு வல்லூர் உடையார் திருமணங்காவுடைய நாயநாற்கு இவ்வூ

2. ரில் ஸாரஸ்வாஜி ஸ்ரீமொகுத்துச் சேனாபதிபட்டன் உள்ளிட்டாரும் இக்குடி தழுவக்குழைந்தான்பட்டன் உள்ளிட்டாரும்...நாற்பத்தெண்ணாயிரபட்டன் சரணப்பிள்ளையும்கௌதமமொகுத்து ஆளும்பிரான்பட்டன் ஶிவஞானனும் இவ்வனைவோ மித்திரினுந்தா விளக்கு ஒன்றுக்கு சந்திராதித்தவரை . . . கடவோமாகவும் செலுத்து . . . .

3. யும் சேனாபதி பட்டனு[ம்] உள்ளிட்டாரும் தழுவக் குழைந்தான் பட்டன் உள்ளிட்டாரும் ஆளும்பிரான் பட்டன் சிவஞான . தேவரு இப்படிக்கு கோயிற் கரணத்தாரோம் ஸ்ரீ ஊஹெஶ்வர ரக்ஷை॥

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 366/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 5
வட்டம்	: பொன்னேரி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1182
ஊர்	: மேலூர்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 5, 5அ

அரசன் : வீரசோழன் குலோத்துங்கன் III

இடம் : திருமணங்கீஸ்வரர் கோயில் கருவறை மேற்கு, தெற்கு.

குறிப்புரை : கல்வெட்டு 5, 5அ இரண்டாகப் படியெடுத்திருப்பினும் ஒரே கல்வெட்டு எனலாம். 5அ யில் கடைசி வரியில் திரிபுவன வீரதேவர் என வருவதால் மூன்றாம் குலோத்துங்க சோழர் கல்வெட்டு எனலாம். பல இடங்களில் எழுத்துகள் சிதைந்துள்ளதால் முழுமையாக வாசகம் படிக்க இயலவில்லை. தொடக்கமும் இறுதியுமில்லை. வாணிய நகரத்தார் பிரிவினர் திருமணங்கீஸ்வரரமுடைய நாயனார்க்கு வீரதேவன் ஆட்சியின் போது கொடை தந்ததாகத் தெரிகிறது. ஐந்தாவது முதல் என்பதால் 5-ஆம் ஆட்சியாண்டு எனலாம். நெல் வர்க்கம் பொன் வர்க்கம் என இரு நிலைகளில் வரி வாங்கப்பட்டது. வல்லூர் ஊர்ப்பெயர், இறைவன் பெயர் சாசனத்தில் காண்கிறோம்.

Summary : On the west and south wall of the same shrine. Chōḻa-dynasty Vīradēva (Kulōttuṅga dēva III) Regnal Year 5. (C.E.1182) Dameged.

Mentions the Villege Vallūr, Tirumangīsveramudaya nāyamar and Vāniyanagarattar. Gift of some lands to the temple by a certain person. This donation was inscripted to the temple wall and copperplate.

கல்வெட்டு :

1. [ஸ்வஸ்திஸ்ரீ] . . . . லெ திருப்பண்டாரத்தில் வல்லூர் வாணிய நகரத்தார் சொல்லுகையா . . . . . .
2. மான்யமாக இவ்வூர் ஆளுடையார் திருமணங்கீசுரன் நாயநார் . . . . . .
3. யிடத்து நாயக்கரோம் பணியாளைக் கொண்டு அட்டி . . . ண

5அ

1. . . . ன லட்ட . . . . . யெட்ட . . . . கண்டு னாயக்கர் கட்டளையான படி . . . .

திருநாமத்துக் காணியான . . . த . . அஞ்சாவது முதல் இவ்வூர் நிற் செயற் . . . டமான மானியம் வைத்த . . . ம்மா வரும் பொன் வற்க்கமும் நெல்லுவர்க்கமும் அத்தமும் மடற் . . . கலனையும் . . . விட்ட

2. நன் . . . கோ . . தே . . கு . . . ணக்க . . . . விட்டோம் பிடிபாடாகக் கொண்டு சந்திராதித்த வரையும் செல்வதாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்ளக்கடவதாகச் சம்மதித்தோம் புழற்கோட்டமான . . .

3. . . . . ளி ந இ . . . . காணிக்கை செல்ல *ஸ்ரீதிரிபுவந* வீர தேவற்கு *ஸ்ரீஸா*துவன் குமணவல்லுர் திரிஜெகத்தைக் . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 367/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 15
வட்டம்	: பொன்னேரி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1223
ஊர்	: மேலூர்	இ.க. ஆண்டறிக்கை	: 141/1916
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: S.I.I.39
எழுத்து	: தமிழ்		
அரசு	: பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 5-2
அரசன்	: சுந்தரபாண்டியன்		

இடம் : திருமணங்கீஸ்வரர் கோயில் கருவறை அதிட்டானம் தெற்கு.

குறிப்புரை : சுந்தரபாண்டிய தேவனுடைய ஆட்சியின்போது கோயில் தானத்தாரும் நாட்டவரும் ஓர் உடன்படிக்கை செய்து கொள்கின்றனர். திருப்பணிக்கு முதலில்லாத படியால் கொடையாளி (பெயர் அழிந்து விட்டது) தந்த முதல் பெற்று அதனை முதலில் கல்வெட்டாக வெட்டி வைக்கின்றனர். நாற்பத் தெண்ணாயிர பட்டன் பெயர் இறுதியில் வருகிறது.

Summary : On the south wall of the same shrine. Sundrapāndiya dēvaṉ. Regnal Year 15 (1223 C.E.). Built in at the end . Gift of money for repairs to the same temple. Mentions Nāṟppattu Eṇṇāyira Baṭṭan.

கல்வெட்டு :

1. . . . . ன் திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தர பாண்டிய தேவற்க்கு யாண்டு பதினஞ்சாவது ஜயங்கொண்ட சோழமண்-
2. டலத்து புழற் கோட்டமான விக்கிரம சோழ நாட்டவரோம் நாயனார் கோயில் தானத்தார்க்கு பிடிபாடு பண்ணிக் குடுத்தபடி இன்னாயனார் கோயில் திருப்பணிக்கு ஒரு முதலில்லாத படியா . . . .
3. . . . தர . . . பொன் . . . கலே கைக்கொண்டோம் இக்கோயில் காணிஉடைய சிவப்பிரா . .
4. . . . வது தப . . . . க்கு கைக்கொண்டோம் இக்கோயில் காணியுடைய நாறப்பத்தொண்ணாயிற பட்ட . . . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 368/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 15
வட்டம்	: பொன்னேரி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1255
ஊர்	: மேலூர்	இ.க. ஆண்டறிக்கை	: 139/1916
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: S.I.I. 39 எண்.139
எழுத்து	: தமிழ்		
அரசு	: தெலுங்குப்பல்லவர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 6
அரசன்	: விசய கண்ட கோபால தேவர்		

இடம் : திருமணங்கீஸ்வரர் கோயில் கருவறை மேற்கு ஜகதி.

குறிப்புரை : விஜயகண்ட கோபால தேவனுடைய ஆட்சியின்போது அருளாளன் வானவன் மற்றும் அருளாளப் பெருமான் திருப்பாலைவனமுடையான் செழியர்கோன் இருவரும் வல்லூர் திருமணங்காடுடைய நாயனார் கோயிலில் உள்ள திருக்காமக் கோட்டத்து திருவுடை நாச்சியார் திருவமுதுக்காக 100 பணம் முதலீடு வைத்து, நாள்தோறும் குறுணி நெல், திருவமுதுக்காக வழங்க வேண்டும் என்று கட்டளை ஏற்படுத்தி உள்ளார்கள்.

Summary : On the west wall of the same shrine. Telugu Pallava king Vijayagaṇḍa gōpāla dēvar. Regnal Year-5. (1255. C.E.)

Gift of money for offerings to the shrine of Tirumaṅkāḍu-udaiya nāyaṉār. The donors names are mentioned. They gifted 100 panam to temple priest Daily supplied one kuruni paddy for food offering.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ . . . . திரிபுவனச் சக்கரவத்திகள் சீவிசைய கண்ட கோபால தேவற்க்கு யா[ண்]டு ‘ரு‘ வது கற்கடக நாயிற்று பூர்வ்வபக்ஷ வஞ்சமியும் நாயிற்றுக் கிழமையும் பெற்ற உத்திரத்து நாள்

2. புழற்கோட்டத்து நாயறு நாட்டுவல்லுர் ஆளுடையார் திருமணங்கா அரைய நாயநார்திருக்காமக் கோட்டமுடைய திருவுடைநாச்சியார்க்கு இவ்வூற்பக்கல் அருளாநேந் வான காவான் அருள்ளாளப்-

3. பெருமான் திருப்பாலைவனமுடையான் செம்பியர்கோன் சந்திராதித்தவரை செலுத்துவதாக வைத்த அமுதுபடிக்கு நாளொன்றுக்கு குறுணி நெல்லு சந்திராதித்த வரை அமுதுபடி

4. செலுத்துவதாக குடுத்த பணம் ro இப்பணம் நூறும் கைக்கொண்டு சந்திராதித்தவரை செலுத்துவதாக யிக்கோயிற்காணியுடைய *ஶிவப்ஹ்ராஹ்மணர் ஸாரஸ்ராஜமேஶாத்ரத்து*

5. சேனாபதிபட்டன் பெரிய நாயன் உள்ளிட்டாரும் இக்குடிதழுவக்குழைந்தான் பட்டன் அவையம்புக்கா னுள்ளிட்டாரும் கௌஶிக மொத்ரத்து நாற்பத்தெண்ணாயிர பட்டன் சரணபட்டனும் ஆளும்பிரான் பட்டன் சிவஞான தேவரும்

6. . . . இப்பணம் நூறும் கைக்கொண்டோம் நாற்பத்தெண்ணாயிரம் சரணப்பிள்ளையும் சேனாபதி . . . . பெரிய நூ . . . . புக்கானுள்ளிட்டாரும் சிவஞானதேவரும் இவ்வனைவோம் இவை பன்மாஹேஶ்வர ரக்ஷை॥

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 369/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 4
வட்டம்	: பொன்னேரி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1150
ஊர்	: மேலூர்	இ.க. ஆண்டறிக்கை	: 139/1916
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: S.I.I. 39 எண்.139
எழுத்து	: தமிழ்		
அரசு	: பிற்காலச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 7
அரசன்	: இரண்டாம் இராஜாதிராஜன்		

இடம் : திருமணங்கீஸ்வரர் கோயில் கருவறை மேற்கு ஜகதி.

குறிப்புரை : இரண்டாம் இராஜாதிராஜனுடைய ஆட்சியின்போது வழங்கப்பட்ட கொடையை இது குறிக்கிறது. இக்கல்வெட்டில் காஞ்சிபுரத்துத் திருப்பாடகத்தாழ்வார் கோயில் இடம் பெறுகிறது. வைஷ்ணவ கண்காணி, குடிதாங்கி வைஷ்ணவாள் ஆகியோர் இடம் பெறுகின்றனர். கைக்கோளர் 18 நாட்டு வைஷ்ணவாளுக்குச்சபை சிலாலேகை செய்து தந்துள்ளது. உறந்தையூருடையான் சேதிராயன் என்பவன் மேலூர் கோயிலில் ஒரு விளக்கு வைக்க 32 பசுக்களை வழங்கி உள்ளான்.

Summary : On the east wall of the same shrine. King Rājathirājan II. Regnal Year 4. (1150 C.E.).

Kāṅchipura brāhmanās Thiruppāḍagathu koil priest, Sivarāmanga Nāgābaran Sri Goudhamaṉ and Thiruvattiyūr Aḻwār Thathasarmabaṭṭṉ, Vaishnava kaṅkāni kudithaṅgiyāṉ thiruppāda nāmbi made an ugreement to kōil kāriyamcheyvār. One of the officer Chēdhirāyan gifed 32 cows to the temple.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீதிரிபுவநச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜாயிராஜதெவர்க்கு யாண்டு ௪ ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து எயிலுர் கோட்டத்து நகரம் ஸ்ரீகாஞ்சிபுரத்து திருப்பாடகத்தாழ்வார் கோயில் காணியுடைய ஸ்ரீஸாஸிவரன் மங்கலத்து ஸ்ரீமௌதமன்னாகபரன் மகன் திருவத்தியூராழ்வானான யஜ்ஞ ஸாரமஹட்டனேன் இக்கோயில் வயிஷ்ணவ திருப்பாடகமுடையான் மகன் குடிதாங்கியான் திருப்பாடகத்தினப்பிக்கும் ஸ்ரீகாரியஞ்செய்வானுங் கேயிற்கணக்[கு] கண்காணி இவ்வேஉவூஉான் அடியான்

2. இத்தெருவிற் கைகோளர்க்கும் பதினெட்டுனாட்[டு]க்கு ஸ்ரீவயிஷ்ணவா[ர்க்]கும் ஶிலாலெகை பண்ணிக்குடுத்த பரிசாவது இ[வ்]வெம்பெருமானுர்க்கு சம்புகாரியாகன்மீகளில் சோழ மண்டலத்து ராஜராஜ வளநாட்டுப்பனங்குடி யுறந்தையூருடையான் னீறணிந்தானான சேதிராயன் வைத்த திருனுந்தா விளக்கு ஒன்றுக்கும் விட்ட பசு ௯௰௨ முப்பதிரண்டும் பசுவும் கைக்கொண்டு இவ்விளக்கு எரிக்கும்படி திருவத்தியூராழ்வா[னு]க்கும் விளக்கு எரிக்கவும் இக்கொயிலிற் எம்பெருமாள் பி -

3. பாடகமுடையான் மகனான குடிதாங்கி எரிக்கக் கடவ விளக்குகாலும் ஆக விளக்கு ஒன்றும் சந்ூராஉதிவரெ மெரிக்கக்கடவோமாகவும் திருக்கோயிற்மாஹேஸ்ஶ்வர ரக்ஷை॥

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 370/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பொன்னேரி	வரலாற்று ஆண்டு	: 13-ஆம் நூற்.
ஊர்	: மேலூர்	இ.க. ஆண்டறிக்கை	: 142/1916
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: S.I.I. 39 -142
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 8
அரசன்	: விக்ரமசோழர் ?		

இடம் : திருமணங்கீஸ்வரர் கோயில் கருவறைத் தென்புறச்சுவர்.

குறிப்புரை : மிகவும் சிதைந்து விட்ட இக்கல்வெட்டில் 2 வரி மட்டுமே உள்ளது. விக்ரம சோழவளநாட்டு நாட்டவர் மேற்கொண்ட செயல் தெரிகிறது. நாயறுநாடு இடம் பெறுகிறது. இக்கல்வெட்டு தற்போதில்லை. தென்னிந்திய கல்வெட்டு தொகுதி வாசகமே இங்குள்ளது.

Summary : On the south wall of the same temple. Built in at the end. The inscription mentions Puḻarkōṭṭam alias Vikramachōḻa Vāḷānāḍu in Nāyiru nāḍu.

கல்வெட்டு :

1. ஸ்ரீஉநூ ஹீஷெவி ஊ௺தூஸ்ஹ ஸாதவன் குஜொத்ஸவ ஸவூஜொகூ ஹிதாத்தாய ஸிதூமேனி . . . . . .
2. ழ மண்டலத்து புழற்கோட்டமான விக்கிறம சோழ வளநாட்டு நாட்டவரோம் நாயறுநாட்டு . . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 371/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பொன்னேரி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1716
ஊர்	: மேலூர்	இ.க. ஆண்டறிக்கை	: 143/1916
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: S.I.I. 39 -143
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 9
அரசன்	: –		

இடம் : திருமணங்கீஸ்வரர் கோயில் முற்றத்தில் உள்ள தனிக்கல்.

குறிப்புரை : தமிழகத் தொல்லியல் துறை படியெடுக்கவில்லை. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதியின் பாடமே இங்கே இடம் பெறுகிறது. அரசன் பெயர், ஆட்சியாண்டு சாசனத்தில் இல்லையெனினும் கலியுக ஆண்டு இடம் பெறுவதால் சாசனத்தின் காலம் பொ.ஆ.1716 எனலாம். பெரியபாளயத்தைச் சேர்ந்த கன்னந்தை மகாரிஷிகோத்திரம் பாளையம் தும்முணிகுமாரன் தும்மணி என்ற வியாபாரி வல்லூராகிய மேலையூரில் திருமணங்காவலில் திருமணங்கீஸ்வர் கோயில் வளாகத்தில் திருவுடைத்தாய் சன்னதியருகே திருமடைப்பள்ளியும் யாகசாலையும் கட்டி உள்ளார். திருமணங்காவுடையார் என்ற தமிழ்ப்பெயரே தற்போது சுகந்தபுரீஸ்வரர் என வழங்கப்படுகிறது.

Summary : On a slab lying in the courtyard of the same temple. Not mentions any king's name and regnal year. But Kaliyuga is mentioned. It belongs to 1716.C.E. Tirummuṉi father of merchant Tummunikumaraṉ native of Periyapālaiyam constructed Madappalli and Yāgasālai in the Tirumaṅgisvarar koil. Amman name was called Thiruvudaithāyi in thosedays. Village name was Vallūr. Mēlaiyūr alias Thirumaṅga is also mentioned.

கல்வெட்டு :

1. ஸ்ரீஉநு ஶ௱ஹஉஷ்ரூ கலியுகம் சகூஅ௱யஎ ஆவது துன்முகி ௵ அர்ப்பசி மீ௴ கூ உ வல்லூர்
2. மேலையூர் திருமணங்காவலில் திருமணங்கீஸ்வரர் திருவுடைத்தாயி அம்மன் கோயிலி-
3. ல் வியாபாரிகளில் பெரியபாளையக் கர்த்தாரில் கனனந்தை மகாரிஷி கோத்திரம் பா-
4. ளையம் தும்முணி குமாரன் தும்முணி கட்டிவிச்ச யாகசாலை மடப்பள்ளி ௨

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 372/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: 13-ஆம் நூற்.
ஊர்	: குத்தம்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 1
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		

இடம் : திரிபுராந்தகயீஸ்வரர் கோயில் வளாகத்தில் திரிபுரசுந்தரி அம்மன் சன்னதி வெளிமண்டபச் சுவர்.

குறிப்புரை : பூந்தமல்லியிலிருந்து திருப்பதி செல்லும் நெடுஞ்சாலையில் திருமழிசை என்ற ஊருக்கருகில் குத்தம்பாக்கம் என்ற பெயரில் தொன்மை வாய்ந்த ஊர் உண்டு. சமண அல்லது புத்த வணிகருடன் தொடர்புடைய குப்த என்ற சொல்லே இங்குக் குத்த என வந்தது போலும். இவ்வூரில் 6-க்கு மேற்பட்ட புராதனமான கோயில்கள் உள்ளன. திரிபுராந்தகர் மற்றும் துறையாத்தம்மன் பெயரில் உள்ள கோயில்களில் இருந்து கல்வெட்டுளைப் படியெடுத்தோம்.

திரிபுராந்தகர் கோயிலில் 13 கல்வெட்டுகள் உள்ளன. திருப்பணி காரணமாகப் பல சாசனங்கள் சிதைந்தும் உருமாறியுமுள்ளன. இம்முதல் கல்வெட்டில் சிவப்பிராமணர்கள் ஒரு நிவந்தம் ஏற்படுத்திய விபரம் உள்ளது. திருவையாறுடையான் என்று சுவாமியின் பெயர் உள்ளது. காலம் பொ.ஆ.13-ஆம் நூற்றாண்டெனலாம்.

Summary : Engraved on the outarwall of the Tiripurasundari shrine in the Tiripurāndagaīśvarar temple at Kuttampākkam in Pūndamalli taluk.

A certain person (name lost) gifted coins to siva brahamana for lightining purpose in the temple. Some words damaged.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்க . . . .
2. ப்புலியூர் கோட்ட . . . .
3. யாறுடைய நாயனார் . . . .
4. க்கு ஒன்றுக்கு விட்டப . . . .

5. டைய பயினூருடைய-

6. பொலிமுறை நாகுஇர . . . . . .

7. ய ஶிவவ்ராஹ்மணரில் க . . . . . .

8. யுடையான் பட்டன் கைக்கொண்ட சந்திராதித்த வரை அளக்க

9. கடவோமாகச் சம்மதித்து சிலாலேகை . . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 373/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 38
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1215-16.
ஊர்	: குத்தம்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 2
அரசன்	: மூன்றாம் குலோத்துங்க சோழன்		
இடம்	: சிவன் கோயில் கருவறை வடபுறச் சுவர்.		

குறிப்புரை : மூன்றாம் குலோத்துங்கனாகிய திரிபுவன வீரதேவனுடைய ஆட்சியின்போது களத்தூர்க் கோட்டத்து செங்குன்ற நாட்டு ஐஞ்சூர் முல்லைப்பாடித் திருச்சுர கண்ணப்பன் ஆதிநாயகன் பஞ்சநதிவாணன் நீலகங்கரையன் என்ற அதிகாரி, புலியூர்க் கோட்டமான குலோத்துங்க சோழவளநாட்டு மேல்மாங்காடு நாட்டுக் குத்தம்பாக்கத்து உடையார் திருவையாறு உடையார்க்கு இரண்டு விளக்குகள் வைக்க 64 பசுக்கள் 2 காளைகளை வழங்கியுள்ளார். பிள்ளைப்பாக்க மன்றாடி மழலைக்கோனும் இவ்வூர்ச் சாமிக்கோனும் பசுக்களையும் ரிஷபங்களையும் பெற்றுக்கொண்டு நெய் வழங்க உடன்பட்டு ஒப்பமிட்டுள்ளனர். நீலங்கரையனைத் திருமழிசையில் உள்ள சிலசாசனங்களும் குறிப்பிடுகின்றன.

Summary : On the north wall of the Amman shrine in the same temple. Kulōttuṅga Chōḻa - III. Regnal Year 38. (1215-16 C.E.).

Records a gift of 64 cows and two bulls for two perpetual lighting purpose to the temple. The donor name was Paṅchanadhivānaṉ Nīlagaṅgaraiyaṉ alias Tiruchchura Kaṇṇappaṉ Ādhināyaga residing at Aiynjurmullaippādī. Two shephereds namely Malaḻikoṉ and Sāmikkōn received the above and supplied daily ghee to the Tiruvaiyāruḍaiyār temple at Kuttampākkam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் ஈழமுங்கருவூருங் கொண்டு வீரா அபிஷெகமும் விசையா அபிஷெகமும் பண்ணியருளின திரிபுவன வீரதேவற்கு யாண்டு ௩௰அ ஆவது பங்குனி மாஸத்து செயங்கொண்ட சோழமண்டலத்து புலியூற் கோட்டமான குலோத்துங்க சோழ வளனாட்டு மேன்மாங்காடு னாட்டுக் குத்தன்பாக்கத்து உடையார் திருவைய்யாறுடைய னாயானாற்கு இ[ம்]மண்டலத்து

2. களத்தூர் கோட்டத்து செங்குன்றனாட்டு ஐஞ்சூர் முல்லைப்பாடித் திருச்சுரக் கண்ணப்பன் ஆதினாயகன் பஞ்சநதிவானன் நீலகங்கரையன் வைத்த திருநந்தா விளக்கு இரண்டுக்கு விட்ட பசு அறுபத்து னாலும் ரிஷபம் இரண்டும் ஆக உரு அறுபத்தாறு இதில் இன்னாயனா[ர்] கோயிற் சுரபிக்காணி இவ்வாண்டுடைய இம்மண்டலத்து புலியூற்(ர்) கோட்டத்து பிள்ளைபாக்கத்தில் மன்றாடி நம்பிக்கோன் மகன் மழலைக்கோன் விளக்-

3. கு ஒன்றுக்கு கைக்கொண்ட உரு முப்பத்து மூன்றும் இவ்வூர் சாணக்கோன் மகன் சாமிக்கோன் விளக்கு ஒன்றுக்கு கைக்கொண்ட உரு முப்பத்து மூன்றும் ஆக உரு அறுபத்தாறுங் கைக்கொண்டு நாள் ஒன்றுக்கு ஐஞ்சு பத்தாம் ஊற்[ர்] காலாலே உரிய நெய் நித்த நிமந்தமாகச் சந்திராதித்தவரை அளக்கக் கடவோமாகச் சம்மதித்துச் சிலாலேகை பண்ணிக் குடுத்தோம் நம்பிக்கோன் மகன் மழலைக்கோனும் சாணக்கோன் மகன் சாமிக்கோனும்

4. இவ்விருவோம் இது பன்மாஹேஸ்வர ரக்ஷை॥

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 374/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: 12-13 ஆம்நூற்றாண்டு.
ஊர்	: குத்தம்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 3
அரசன்	: மூன்றாம் குலோத்துங்க சோழன்		

இடம் : திரிபுராந்தகயீஸ்வரர் கோயில் வளாகத்தில் திரிபுரசுந்தரி அம்மன் சன்னதி மண்டபக் கிழக்குச் சுவர்.

குறிப்புரை : இக்கல்வெட்டின் முதல்பகுதி கிடைக்கவில்லை. சோமீசுரமுடையான் என்பவன் பசுக்களை வழங்கி, கோயிலுக்கு வருவாய் தேடி உள்ளான். பிராமணன் கூத்தனான காமக்கோன் கொடையைப்பெற்றுக்கொண்டு நெய் வழங்க உடன்பட்டுள்ளான்.

Summary : On the east well of the Amman shrine in the same temple. Kulōttuṅga - III. 12th-13th Century. Begining portion of the inscription is missing. Sōmēśvaramudaiyān donated sheep to the temple sivabrahmanas.

கல்வெட்டு :

1. யன் குலோத்துங்க சோழ . . . .
2. கு வைத்த உல்லியக்குத் . . . .
3. நற்பசு ஒன்றும் பொலி . . . . .
4. ளன சோமீசுரமுடையான் . . .
5. ண்டும் ஆக உரு மூன்றும்
6. தரக கூத்தனான காமக் காம [க்கோன்]-

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 375/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 22
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1200
ஊர்	: குத்தம்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழன்	ஊர்க் கல்வெட்டு எண்	: 4
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		

இடம் : திரிபுராந்தகர் அம்மன் கோயில் மண்டப கிழக்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை : மூன்றாம் குலோத்துங்க சோழனுடைய 22-ஆவது ஆட்சியாண்டில் வெட்டப்பட்ட இக்கல்வெட்டின் முதல்பகுதி கிடைக்கவில்லை. கல்வெட்டு எண் 2 இன் தொடர்ச்சி போல் வாக்கியம் உள்ளது. அரும்பாக்கத்தில் 40 வேலி நிலம் கோயிலுக்கு விடப்பட்டுள்ளது. 'நாற்பதிற்று' என்ற தொடர் பழையமரமாகும். அரும்பாக்கம் சென்னை மாநகரில் உள்ளது. அரும்பாக்கம் வேறு சாசனங்களிலும் வந்துள்ளது. திருவாடுதுறை ஆதினம் 12-ஆவது குருமகான் இந்த அரும்பாக்கத்தில் பிறந்தவர் ஆவார்.

Summary : On the east wall of the maṇḍapa in the Amman shrine. King Kulōttuṅga-III. Regnal Year 22. (C.E.1200).

Records a certain person (name lost) donated lands at Arumpakkam to the temple. Inscription dameged and unfinished.

கல்வெட்டு :

1. கோட்டமான குலோத்துங்க சோழ வளநாட்டு மாங்காட்டு
2. . . . ளி செய்வார்களுக்கும் ஸ்ரீகாரியஞ்செய்வானுக்கும்
3. பத்தைய வேலியும் அரும்பாக்கம் நிலம் நாற்பதிற்று வே
4. . . . . க விடக் கடவதாகப் பெறவேணுமென்று . . . .
5. ற் இப்படி செய்யக் கடவதாகச் சொல்லி கணக்கி . . .
6. இருபத்தொன்றாவதின் எதிராமாண்டு . . . . .
7. ப்பண்ணுக யாண்டு உ௰க வது நாள் உ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 376/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 12
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1190
ஊர்	: குத்தம்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 5
அரசன்	: மூன்றாம் குலோத்துங்க சோழன்		
இடம்	: திரிபுராந்தகர் கோயிலில் அம்மன் சன்னதி கிழக்குச் சுவர்.		

குறிப்புரை : மூன்றாம் குலோத்துங்கனுடைய ஆட்சியின்போது சிவன் கோயிலுக்கு நந்திபன்மன் என்ற அதிகாரி தந்த கொடை இக்கல்வெட்டில் உள்ளது. கல்வெட்டின் சிறுபகுதி கிடைக்கவில்லை. சிவன் கோயில் பெயர் இதில் இல்லை. பிள்ளையார் நிலம் இடம் பெறுகிறது. அழியாவர விநாயகர் என்ற கோயில் ஊரில் உள்ளது. இவர் பெயரிலேயே தற்போதும் ஏராளமான நிலங்கள் உள்ளன. எனவே அந்த விநாயகரையே இக்கல்வெட்டு சுட்டும் போலும்.

Summary : On the east wall of the Amman shrine in the same temple. Chōḻa-king Kulōttuṅga III. Regnal year 13 (C.E.1190).

Nandipanman an officer of the Kulōttuṅga III donated lamps as well as cows to the temple for the lighting purpose.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவத்தி . . . . .
2. தேவற்கு யாண்டு ‘௰௩’ வது ஜயங் . . . . . .
3. துப் புலியூற் கோட்டமான குலோத்துங்க . . . . . .
4. நாட்டுக் குத்தன்பாக்கத்து உடையார்க்-
5. கு இன்னாயனார் ஸ்ரீ பண்டாரத்தில் சந்திவிள . . . . . .
6. . . . . லி முறை நாகு இரண்டும் பிள்ளையார் நிலக் . . . .
7. நந்தனை நந்திபன்மன் வைத்தி சந்தி விளக்கு

த.நா.அ. தொல்லியல் துறை ***தொடர் எண் : 377/2024***

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 4
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1200
ஊர்	: குத்தம்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 6
அரசன்	: மூன்றாம் இராசராசன்		

இடம் : திரிபுராந்தகர் அம்மன் சன்னதி மண்டபம், கிழக்குச் சுவர்.

குறிப்புரை : மூன்றாம் இராசராச சோழன் ஆட்சியின்போது சோழப்பேரரசு முற்றிலும் வலிமை குன்றியது. பேரரசின் கீழ் ஆட்சி புரிந்தவர்கள் தாங்களே ஆணை பிறப்பித்துள்ளார்கள். தொண்டை மண்டலத்தின் வடபகுதியில் இருந்த நரசிங்கயாதவராயன் தேவதான இறையிலி நிலம் வழங்கியுள்ளான்.

Summary : On the wall of the maṇḍapa in the Amman shrine at Kuttampakkam. King Naraingadeva yādhavarāyaṉ. Regnal Year 4 (1200 C.E.). The king issued an order tax free for the temple lands. This inscription is unfinished. Naraśingadēva-yādavarāya was a powerful feudatory of Rājarāja III.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ . . . .
2. குலோத்துங்க சோழவளநாட்டு மாங்காடு நாட்டு . . . . .
3. நாரசிங்க தேவரான யாதவராயன் இவ்வாண்டு . . . . .
4. ன்னாள் புழற்கோட்டத்து வேற்காட்டு நாட்டு வட . . . .
5. தேவதான நீக்கி நாலாவது தைய்ம் மாத முதல் . . . . .
6. யும் வேலிச் சின்னம் அதிகாரப் பொன் புழகுவ . . . . .
7. மையும் புறக்கலனை யுட்பட மற்றும் அவிரத்தி-
8. யாக கண்காணி செய்வார்களுக்கும் சீ காரியம் செய் .

(தொடர்ச்சி கிடைக்கவில்லை.)

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 378/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1178-1218
ஊர்	: குத்தம்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 7
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: திரிபுராந்தகர் கோயில் அம்மன் சன்னதி கிழக்குச் சுவர்.		

குறிப்புரை : மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியின்போது அதிகாரி யொருவன் கேட்டுக்கொண்டதற்கிணங்க அரசன் தேவதான இறையிலியாக மாத்தூரில் பத்துவேலி நிலம் வழங்க ஆணை வழங்கியுள்ளான். இக்கல்வெட்டின் சிறு பகுதி கிடைக்கவில்லை. கல்வெட்டில் திருவையாறுடையார் பெயர் வருகிறது.

Summary : On the east wall of Amman shrine. King-Kulotunga III. Some portions were missing.

Records that a person (name lost) gifted lands in Māttūr to the Kuttampākkam Tiruvaiyerur uḍaiyār temple for maintaining purpose.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச் சக்கரவத்தி (கொலோத்துங்க) . . . .
2. நாட்டுக் குத்தன் பாக்கத்து திருவையாறுடைய சீநாயக . .
3. இத்தேவர்க்கு வேண்டும் நிவந்தங்களுக்கு இறுப்பதான . . . .
4. லியும் மாத்தூரில் நிலம் பதிற்று வேலியு . . . . .
5. நதராயன் நமக்குச் சொல்லி வரக்காட்டிபெய . . . .
6. லும் இட்டுக்கொள்ளக் கடவர்களாகக் வரிகூறு செ . . . .
7. முதல் இத்தேவற்கு தேவதான இறையிலி . . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 379/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: 13-ஆம் நூற்றாண்டு.
ஊர்	: குத்தம்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 8
அரசன்	: –		

இடம் : திரிபுராந்தகர் கோயில் அம்மன் சன்னதி வெளிமண்டபச் சுவர்.

குறிப்புரை : கல்வெட்டின் தொடர்ச்சியும் இறுதிப்பகுதியும் கிடைக்கவில்லை. புலியூர் கோட்டத்தில் இருந்த மாத்தூரில் திருநாமத்துக்காணியாக நிலம் கோயிலுக்கு வழங்கப்பட்டது. சில வரிகள் சுட்டப்படுகின்றன. பிள்ளைப்பாக்கம் என்ற ஊர் தற்போதும் உள்ளது.

Summary : On the wall of the maṇḍapa in the Amman shrine. Period 13th century. Damaged and unfinished Mentions. Māttur village and some taxes.

கல்வெட்டு :

1. மாங்காட்டு நாட்டுக் குத்தம்பாக்கத்து உடையார் . . . . .
2. நிவந்தங்களுக்கு இறுப்பதாக இன்னாட்டுப் புலியூர் க் . . . . .
3. . . . . .பொலி வேலியும் வடக்கில் மாத்தூரில் திரு நாமத்துக்க . . . . . .
4. க . . . . ந . . . . காசு கடமையும் பூட்டதற்றியமும் ஆக வ . . .
5. நிலத்துக்கும் வடக்கிலும் பிள்ளைப் பாக்கத்து

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 380/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 13
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1201
ஊர்	: குத்தம்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 9
அரசன்	: மூன்றாம் குலோத்துங்க சோழன்		
இடம்	: திரிபுராந்தகர் கோயில் அம்மன் வடக்கு பிரகாரம்.		

குறிப்புரை : மூன்றாம் குலோத்துங்கனாகிய வீரதேவனுடைய ஆட்சியின்போது அதிகாரியாக இருந்த திருச்சுரக்கண்ணப்பன் ஆதிநாயகன் ராஜராஜ நீலகங்கரையன் என்பவன் கோயிலுக்கு நிவந்தம் ஏற்படுத்துகிறான். பூந்தமல்லியில் 10 வேலி நிலம் தந்ததுடன் செக்குநிலை, கடமை, ஆயம் உட்படப் பலவரிகளும் வழங்க ஆணையிட்டுள்ளான். திருவையாறுடையார் கோயில் கல்வெட்டொன்றிலும் கண்ணப்பன் பெயர் உள்ளது.

Summary : On the wall of the maṇḍapa in the Amman shrine. King Kulōttuṅga III. Regnal Year 13 (C.E.1201). Records that tax free lands and some taxes to the temple by Rājarāja Nīlagangaraiya native of Tirumullaippāḍi. Ganga was one of the vasals of the later Chōḻa kings.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன வீரதேவற்கு யாண்டு ‘௰௩’ ஐயங் [கொண்ட சோழ மண்டலத்து] புலியூர்க்கோட்டமான குலோத்துங்க சோழ வளநாட்டு மேல்மா . . . .
2. முல்லைப்பாடித் திருச்சுரக் கண்ணப்பன் ஆதிராஜ நீலகங்கரையேந் இன்னாயநாற்க்கு வேண்டு நித்த-
3. நாறபாற்க் கெல்லைக்கு உட்பட்ட ஏரிவாய் கோலமும் பூந்தமல்லி தூணி நிலம் திருவையாற்று விளாகம் நிலம் பதினை -
4. வேலியும் இவ்வூர் செக்குநிலை ஒன்றும் உட்பட கடமையும் ஆயமும் வெட்டி அரிமுக்கை உள்ளிட்ட அனைத்தாயங். . . .
5. யூரீட்டமும் செக்கு நிலைகளுக்கு காத்திகைப் பட்டி கடமையும் செக்கும் பழங்காசும் விடகிறு மாத்தூர்-
6. களுக்கும் தேவகன்மி கோயிற் கணக்கனுக்கும் இறுப்பதாகச் சொன்னோம் இராஜராஜ நீலக்கங்கரையநேன்.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 381/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1178-1218
ஊர்	: குத்தம்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 10
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		

இடம் : திரிபுராந்தகர் கோயில் அம்மன் சன்னதி வடக்குச் சுவர்.

குறிப்புரை : மூன்றாம் குலோத்துங்கனுடைய இக்கல்வெட்டும் முழுமமையாக இல்லை. சீ நாயனார்பிள்ளையார் என்ற தொடர் அழியாவரவிநாயகரைக் குறிக்கும். அரும்பாக்கத்தில் 10 வேலி நிலமும் வேறோர் இடத்தில் 12 வேலி நிலமும் செக்குக்கடமை, பொன்வரி, தறிஇறை உட்படப் பலவரிகளும் கோயிலுக்கு வழங்குமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்து சமய அறநிலையத்துறை ஆவணங்களில் அழியாவரவிநாயகர் கோயிலே முதன்மையாகவும் இதைச் சார்ந்தே பிற கோயில்களும் இடம் பெறுகின்றன. விநாயகர் கோயிலுக்கு மிகுதியான நிலங்கள் தற்போதும் உள்ளன.

Summary : On the east wall of the maṇḍapa in the Amman shrine. King-Kulōttuṅga III. 13th century. Records that 22 vēḷi lands donated to Sri Vināyagar temple and Sivā tample at Kuttampākkam. Mentions some taxes. Sri Vinayagar temple is called Aḻiyāvara Vināyagar temple.

கல்வெட்டு :

1. ரும் பாண்டியன் முடித்தலையும் கொண்டு வீரா . . . . . . லத்துப் புலியூர்க் கோட்டமான
2. திருவையாறுடைய நாயனாற்கு இம்மண்டலத்து சீ . . . . நாயனார்க்குப் பிள்ளையார் வீர-
3. கோட்டத்து அரும்பாக்கம் நாற்பாற்கெல்லைக்கு உட்பட்ட நாட . . . . . . ம்மையந் திருவோணமும் மா-
4. ண்ய[ம]ாக நாம் கொண்டு விட்ட நிலம் பத்துவேலியும் . . . . (பன்)னிரண்டு வேலியும் உள்ளூரித் . . .
5. நிலம் நீக்கி கடமையும் தறிஇறைக் கடமையும் அனைத்தாயங்களுங் காசு கடமை . . .
6. லத்துப் பொன்வரியும் விட்டோம் இக்கோயில் சம . . . . . பேர் கடமையும் செக்குக் கடமையும் . . . . . .
7. (விட்)டோம் இக்கோயில் சீமாஹேசுர . . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 382/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1178-1218
ஊர்	: குத்தம்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 11-1
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		
இடம்	: திரிபுராந்தகர் கோயில் அம்மன் சன்னதி மண்டபச் சுவர்.		

குறிப்புரை : மூன்றாம் குலோத்துங்கனின் ஆட்சியின்போது பஞ்சநதிவாணன் என்பவன் காணிநிலம், சிலவரிகளுடன் சிவன் கோயிலுக்கு விடப்பட்டதாகத் தெரிகிறது. சாசனம் சிதைந்து முழுமையின்றி உள்ளது.

Summary : On the east wall of the maṇḍapa in the Amman shrine. 13th century. Mentions Panjanadhivānan. He gifted lands to the temple.

கல்வெட்டு :

1. கொண்டு சோழ மண்டலத்துப் புலி . . . .
2. ஆதி நாயகன் பஞ்சநதி வாணனார் இநா . . . .
3. ம் நீர் நிலம் ஊர் நத்தம் உட்பட்ட நிலம்
4. இவ்வூர்களும் காணி நிலங்களும் ச . .
5. திருநாட்ப்படி மூட்டை எண்ணை . . . .
6. படியால் வந்த இறை சீ பண்டாரத்துக்கு . . . .

(கல்வெட்டின் தொடர்ச்சி கிடைக்கவில்லை.)

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 383/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1178-1218
ஊர்	: குத்தம்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 11-2
அரசன்	: –		

இடம் : திரிபுராந்தகர் கோயில் அம்மன் சன்னதி சுவர்.

குறிப்புரை : இத்துண்டுக் கல்வெட்டு கி.பி. 13-ஆம் நூற்றாண்டு எனலாம். சந்திவிளக்கினை ஏற்றி விளக்கெரிக்க சிவப்பிராமணர் சம்மதித்த விவரம் உள்ளது.

Summary : On the wall of the Amman shrine. Damaged. Mentions Sandivilakku.

கல்வெட்டு :

1. ஸ்ரீ இப் . . . . ன் பரப்பு ந . . .
2. றும் ஆக சந்தி வி . . . .
3. டிய சிவப்பிராம . . . .
4. ண்ட சந்திவிளக் . . . . .
5. ந்தி விளக்கு . . . . ஒன் . . . . ..
6. சந்திராதித்த வரை . . . . .

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 384/2024*

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1178-1218
ஊர்	: குத்தம்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 11-3
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கன்		

இடம் : திரிபுராந்தகர் கோயில் வளாகம் அம்மன் சன்னதி சுவர்.

குறிப்புரை : மூன்றாம் குலோத்துங்க சோழனின் மெய்க்கீர்த்தியின் சிறுபகுதி உள்ளது. பாரிபாக்கம் என்ற ஊரில் கோயிலுக்கு நிலம்விடப்பட்ட விவரம் உள்ளது. இதே கோயிலில் உள்ள வேறோர் கல்வெட்டிலும் பாரிப்பாக்கம் இடம் பெறுகிறது.

Summary : On the wall of the Amman shrine. Damaged and unfinished. King Kulōttuṅga Chōḻa III.

Mentions Pārippākkam village and gifted lands.

கல்வெட்டு :

1. . . . . வீராபிஷேகமும் விசையா பிஷேகமும் பண்ணி . . . . . .
2. . . . செங்குன்ற நாட்டு களத்தூர்க் கோட்டத்து அஞ்சூர மு . . . . .
3. . . . நீர்நிலம் ஊர்ந்த . . உள்பட்ட நிலம் பாரிப்பாக்க . . . .
4. . . . கலம் பிள்ளை . . . த்தில் காணிநிலம் இரண்டு . . . .
5. ற்க் கணணை . . . . ம் வேண்டியபடி மாநியங் .
6. [ட]ஷவரக்கண்காணி செல் . . . . . களுக்கு சீகாரியம் செய்வார்

(கல்வெட்டின் தொடர்ச்சி இல்லை.)

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 385/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: 13-ஆம் நூற்.
ஊர்	: குத்தம்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 12
அரசன்	: –		

இடம் : திரிபுராந்தகர் கோயிலில் உள்ள அம்மன் சன்னதி மண்டபம் கிழக்குச் சுவர்.

குறிப்புரை : இத்துண்டுக்கல்வெட்டு பிற்காலச் சோழர்காலத்தது எனலாம். பாற்பசு மற்றும் நிலக்கொடையை இது குறிப்பிடுகிறது போலும்.

Summary : On the east wall of the maṇḍapa in the Amman shrine. Damaged Mentions Pālpasu (cow).

கல்வெட்டு :

1. . . . .
2. வீபாற்பசு இ . .
3. ல் காணி . . . . .
4. ம் கைக் . . . . .
5. கொண்ட . . . .
6. கொண்டு . . . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 386/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 43
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1218
ஊர்	: குத்தம்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 13
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கள்		

இடம் : திரிபுராந்தகர் கோயிலில் உள்ள அம்மன் சன்னதி வாயிலருகே உள்ளது.

குறிப்புரை : மூன்றாம் குலோத்துங்கனின் ஆட்சியின்போது கோயிலுக்கு வழங்கிய கொடை இடம் பெறுகிறது. பஞ்சாங்கக் குறிப்பு உள்ளது. சாசனம் சிதைந்துள்ளதால் முழுவிபரம் அறிய முடியவில்லை. குத்தம்பாக்கத்தில் துறையாத்தம்மன் என்ற பெயரில் வழங்கும் கோயிலேதிருவையாறுடையார் கோயிலாகும். கல்வெட்டுகள் முழுமையாக உள்ளன. திரிபுராந்தகர் கோயிலில் அம்மன் சன்னதியில் தூண்களில் முழுமையற்ற சாசனங்கள் உள்ளன. திரிபுராந்தகர் பெயர் எக்கல்வெட்டிலும் இல்லை.

Summary : On the entrance of the Amman shrine. King - Kulōttuṅga III. Regnal Year - 43.

Records that some tax free lands to the temple. Inscription is unfinished and damaged.

கல்வெட்டு :

1. தேவற்கு யரண்டு சஉ வது
2. இக் குத்தன்பாக்கத்து உடையார் திருவை . . .
3. . . . றட மகர நாயிற்று பூர்வ பக்ஷத்து பஞ்சமியும் . .
4. கிழமையும் பல கரமபடண . . . . . உட்பட்ட நில . . .
5. ட்டமையும் . . . மும் . . . வெட்டி அறிமுக்கை . . . . .
6. மந்தராயம் அரிசியுந் . . . தறியிறை தட்டார் . . .
7. வந்த இன்னாயார்க்கு தேவதான இறையிலியா . . .
8. ர்களுக்குத் தேவர்கன்மி கோயிற் கணக்கனு . . . . . .

த.நா.அ. தொல்லியல் துறை *தொடர் எண் : 387/2024*

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 13
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1191
ஊர்	: குத்தம்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: I-I, I-II,
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கள்		

இடம் : துறையாத்தம்மன் கோயில் என்ற திருவையாறுடையார் கோயில் அர்த்தமண்டப வடக்கு அதிட்டானம் பட்டி. தற்போது துறையாத்தம்மன் கோயில் என வழங்கப்படுகிறது.

குறிப்புரை : குத்தம்பாக்கம் நகரில் திரிபுரசுந்தரி சமேத திரிபுராந்தகயீஸ்வரர் கோயிலின் அம்மன் சன்னதியில் உள்ள சாசனங்கள், திருவையாறுடையார் என்ற சிவன் பெயரில் உள்ள கோயிலைச் சுட்டுகின்றன. துறையாத்தம்மன் என்று மக்கள் வழங்கும் கோயிலில் உள்ள கல்வெட்டுகளும் திருவையாறுடையார் என்ற சிவன் கோயிலையே சுட்டுகின்றன. கட்டட-சிற்ப அமைப்பும் சாசனவரிகளும் துறையாத்தம்மன் கோயிலே திருவையாறுடையார் கோயிலாக இருக்க வேண்டும் என்று கருதவைக்கிறது. நாம் இந்தக் கோயிலைத் திருவையாறுடையார் கோயில் என்று குறிப்பிட்டுள்ளோம். திருமழிசை ஜகநாதப் பெருமாள் கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டில் பிடாரிபட்டி நிலம் இடம் பெறுகிறது. ஊர்ப்பெயர் (திருமழிசையின் வேறு பெயர்) புக்கதுறை வல்ல சதுர்வேதி மங்கலம் என வழங்கப்பட்டுள்ளது. எனவே துறையாத்தம்மன் ஈண்டுள்ள பிடாரியையே சுட்டும். பிடாரியுடன் கூடிய இதர சப்தமாதர் சிலைகளும் தற்போது கருவறையில் உள்ளன.

மூன்றாம் குலோத்துங்கனுடைய ஆட்சியின்போது குத்தம்பாக்கத்து உடையார் திருவையாறுடைய நாயனார் கோயிலில் விளக்கு வைக்க வளையம் அழகியான் ஒற்றி அரசன் குலோத்துங்க சோழநாடாள்வான், விளக்கு ஒன்று வைக்க 32 பசுக்கள் மற்றும் ரிஷபம் ஒன்றையும் தந்துள்ளான். கோயில் காணியுடைய சிவப்பிராமணர்கள் தேவகுமார், சுந்தரபட்டன் சிந்தை உடையான், காடப்பிள்ளை என நால்வரும் விளக்கு வைக்க சம்மதித்து உடன்பாடு கண்டுள்ளனர். தினமும் உழக்குநெய் கோயிலுக்கு வழங்க வேண்டும்.

இக்கோயிலில் தொன்மையான கல்வெட்டாக இது விளங்குவதால் பொ.ஆ.1191-க்கு முன் இக்கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டும் எனலாம். இக்கோயிலருகே பிடாரியுட்பட சப்த கன்னியர் சன்னதி இருந்திருக்க வேண்டும். கோயிலுடன் அம்மன் சன்னதி இருந்திருக்க வேண்டும். எனவே அங்கிருந்த கற்கள் பிரித்தெடுத்து தற்போதுள்ள திரிபுராந்தகர் கோயில் வளாகத்தில் அம்மன் சன்னதியில் பயன்படுத்தி இருக்க

வேண்டும். எனவே தற்போதுள்ள திரிபுராந்தகர் மற்றும் திரிபுரசுந்திரி கோயில் பெயர்கள் பிற்காலப்பெயர்கள் ஆகும். ஒரு கல்வெட்டில் கூட திரிபுராந்தகர், திரிபுரசுந்தரி பெயர் இடம் பெறவில்லை. திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயில் வளாகத்தில் திரிபுரசுந்தர அம்மன் சன்னதியில் சோழர்கால சாசனங்கள் இருப்பதை ஒப்பிட்டுப் பார்க்கலாம். அங்கும் சாசனங்கள் சிவன் கோயிலையே சுட்டுகின்றன. இங்கே கல்வெட்டு 1-2 காணப்பிள்ளை உட்படச் சிலர் விளக்கு வைக்க ஏற்பாடு செய்த விபரமே உள்ளது. மேலும் சிலவரிகள் சிதைந்துள்ளன.

Summary : Kūttampakkam is located on Pūndamalli - Tiruppadi highway near Tirumaḻisai village. Here Thuraiyattamman kovil is one of the ancient temple. Our department has copied seven inscritions in this temple.

The first one is Kulōttuṅga III. Regnal Year 13 (1191C.E.). Vaḻaiyam Aḻagiya Oṟṟiarasaṉ Kulōttuṅga Chōḻa Nadāḻvār native of Paiyūr is one of the officer of Chōḻa dynosty, gifted a perpetual lamp as well as 32 cows and one bull to the Tiruvaiyāruḍaiyār at Kuttampākkam temple authority. The Siva brāhmanās were agreed to ghee suppley to the temple.

கல்வெட்டு:

I-I

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவீராஜெந்த்ர சோழ தேவர்க்கு யாண்டு ௰௩ வது ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டமா[ன]-
2. குலோத்துங்க சோழவளநாட்டு மாங்காடு நாட்டுக் குத்தன்பாக்கத்து உடையார் திருவையாறுடைய நாயனார்க்கு வளையம் அழகிய ஒற்றி-
3. அரசன் குலோத்துங்கசோழப் பையூர் நாடாழ்வானேன் வைத்த திரிநந்தா விளக்கு ஒன்றுக்கு விட்ட பசு முப்பத்திரண்டும் இஷபம் ஒன்றும் ஆக உரு மு[ப்] -
4. பத்து மூன்றும் இக்கோயிற்காணி உடைய சிவப்ராஹ்மணரில் சாணப்பிள்ளையான தேவகுமார பட்டன் கைக்கொண்ட விளக்குக் காலும் சுந்தரக் கூத்தனான -

I-II

1. . . . ட பட்டன் கைக்கொண்ட விளக்குக் காலும் காடப்பிள்ளை கொண்ட விளக்குக் காலும் சாணபட்டன் கைக்கொண்ட [விளக்கு] . . . யான் சிந்தை உடையான் பட்டன் கைக் கொ . . . . . .
2. காலும் ஆக விளக்கு ஒன்றும் இவ்வனைவோங்கைக் . . . றுக்கு ஐஞ்சு பத்தாம் ஊர்க்காலாலே உழக்கு நெய் கொண்டு சந்திராதித்தவரை நாளென்றுக்கு-
3. திரிநந்தா விளக்கு எரிக்கக் கடவோமாக ஸம்மதித்து இவ்வனைவோம் ஸ்ரீமாஹேஸ்வர இரக்ஷை சிலாலேகை பண்ணிக்குடுத்தேன்
4. இவன் இந்நாயனார் கோயிற் கணக்குக்காணி உடைய மயிஅடுனை குடையேன் வான சோமீசுரமுடையான்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 388/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: 13-ஆம் நூற்.
ஊர்	: குத்தம்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 2
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கள்		

இடம் : துறையாத்தம்மன் சன்னதி கிழக்குச் சுவர் (நந்தி சிலையருகே உள்ளது.)

குறிப்புரை : கல்வெட்டின் முதல் பகுதி திருப்பணி காரணமாக மாறிவிட்டது. மூன்றாம் குலோத்துங்கன் காலத்ததாக இருக்கலாம். தொண்டைமான் என்ற அதிகாரி அரசரிடம் தேவதான இறையிலி நிலம் வழங்குமாறு வேண்ட அரசனும் ஆணை பிறப்பித்துள்ளான். பாரிப்பாக்கம் பொத்தகப்படி என்றுள்ளது. கல்வெட்டு எண் 1 இன் தொடர்ச்சியாக இருக்கலாம். மேலும் கல்வெட்டு எண் 4 எண் 2 இன் தொடர்ச்சியாக இருக்கலாம்.

Summary : On the east outer wall of the Amman shrine in the same temple. one portion is missing.

An officer named Toṇḍaimaṉ requested to king change the tax less dēvedēna land from lands in Kutthampākkam. It is connected to previsus inscription.

கல்வெட்டு :

1. . . . ான் ஜயங்கொண்ட சோழமண்டலத்து புலியூர்க் . . . . .
2. மல்ல தேவகன்மிக்கும் ஸ்ரீமாஹெஶ்வரக் கண்காணி . . . . . .
3. இன்னாட்டுப் பாரிப்பாக்கம் பொத்தகப்படி நில . . . . . .
4. ம் இத்தேவற்குத் தேவதான இறையிலியா
5. . . . தொண்டைமானும் நமக்குச் சொன்னவாறு . . . . .
6. ய வீரர்களுக்குச் சொந்னோம் இன்னி . . . . .
7. கைக்கொண்டு நிவந்தஞ் செலுத்தினேன்.

த.நா.அ. தொல்லியல் துறை ***தொடர் எண் : 389/2024***

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 27
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1205
ஊர்	: குத்தம்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 3
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கள்		

இடம் : சிவன் கோயில் கருவறை வடக்கு அதிட்டான பட்டி (துறையாத்தம்மன் சன்னதி).

குறிப்புரை : மூன்றாம் குலோத்துங்கனுடைய ஆட்சியின்போது முல்லைப்பாடி திருச்சுரக்கண்ணப்பன் ஆதிநாயனான் குலோத்துங்க சோழ கண்ணப்பன் என்ற அதிகாரி திருவையாறுடையார் கோயிலில் விளக்கு ஒன்று வைக்க 32 பசுக்களையும் 1 ரிஷபத்தையும் இடையர் குடும்பத்திடம் வழங்கி உடன்படிக்கை செய்துள்ளான். தினமும் உழக்கு நெய் வழங்க இடையரும் சம்மதித்தனர். தானம் தந்த அதிகாரி முன் குறிப்பிட்ட கண்ணப்பன் போல் அதிகாரியாக இருக்க வேண்டும். வன்னியநாயனான் என்பதால் வன்னிய மரபினன் என்பது உறுதியாகிறது. மாங்காடு நாடு இரண்டாக இருந்தது தெரிகிறது.

Summary : On the north basement of the Thuṟaiyāttammaṉ temple. Chōḻa king Kulōttuṅga III. Regnal Year 27 (1205 C.E.).

States that the shepherds (Manrādis) of Kuttappākkam received 32 cows from Kaṇṇappaṉ Ādhināyaṉ vanniyanāyanāṉ alias Kulōttuṅga Chōḻa Kannappaṉ at Mullaippādi and agreed to suppuly one uri ghee to the temple daily.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருவாய்க்கேழ்வி முன்னாக திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு ௨௰௭வது ஆனிமாதத்து ஜெயங்கொண்ட சோழமண்டலத்துப் புலியூர்க் கோட்டமான குலோத்துங்க சோழ வளநாட்டு மேன்மாங்காட்டு னாட்டுக் குத்தம்பாக்கத்து உடை[யார்]-

2. க்கு இம்மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து செங்குன்ற னாட்டு ஐஞ்சுர முல்லைபாடித் திருச்சுரக்கண்ணப்பன் ஆதிநாயன் வன்னியனாயனான குலோத்துங்க சோழக்கண்ணப்பன் வைத்த திருநந்தாவிளக்கு ஒன்றுக்கு

விட்ட பசு முப்பத்திரண்டு இஷபம் ஒன்று ஆக உரு முப்பத்து மூன்றும்-

3. [இ]வ்வாண்டு கைக்கொண்டுடைய மன்றாடி சேகரன் மகன் பிள்ளானும் இவன் தம்பி குழைந்தானும் இவர் பக்கற் கைக்கொண்ட திருநந்தா விளக்கு ஒன்றுக்கு நாளொன்றுக்கு ஐஞ்சு பத்தாம் ஊர்க்காலாலே உழக்கு நெய் நித்தம் நிவந்தமாகச் சந்திராதித்த வரை எங்களிலேச் ச-

4. ம்மதித்துச் சிலாலேகை பண்ணிக் குடுத்தோம் இக்கோயிற் சுரபிக்காணி இவ்வாண்டு கைக்கொண்டுடைய பிள்ளாநும் குழைந்தானும் இவ்விருவோம் இது பன்மாஹேஶ்வர ரக்ஷை॥

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 390/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 31
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1209
ஊர்	: குத்தம்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 4
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கள்		

இடம் : துறையாத்தம்மன் கோயில் கருவறை மேற்கு அதிட்டானம் முப்பட்டைக் குமுதம்.

குறிப்புரை : ஜயங்கொண்ட சோழமண்டலத்துப் புலியூர்க் கோட்டமான குலோத்துங்க சோழ வளநாட்டு மேல்மாங்காடு நாட்டில் குத்தம்பாக்கம் கிராமத்தில் உள்ள திருவையாறு உடையார் கோயிலில் விளக்கு ஒன்று வைக்கப் படுகிறது. தானம் தந்தவன் திருச்சுரக்கண்ணப்பன் ஆதிநாயகன் பஞ்சநதி வாணன் ராஜராஜ நீலகங்கரையன் ஆவான். முன் கூறப்பட்ட இருவரின் சகோதரராக இருக்க வேண்டும். கோயில் சிவப்பிராமணரிடம் பசுக்களும் ரிஷபமும் ஒப்படைக்க, காமக்கோடிபட்டன் உழக்கு நெய் தினமும் வழங்க உடன்பட்டுள்ளான்.

Summary : On the west basement of the central shrine in the same temple. Chōḻa king Kulōttuṅga III. Regnal Year 31 (1209 C.E.).

Rājarāja Nīlagaṅgaraiyaṉ was given a lamp and 32 cows to siva brāhmanās of Tiruvaiyaru udaiya nāyanar temple at Kuttampākkam. Then Siva brāhmanās supply ulakku measured ghee to the temple.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் வீராஅபிஷேகமும் - பண்ணி அருள திரிபுவன வீரதேவர்க்கு யாண்டு ௩௰௧ ஆடி மாஸத்து ஜயங்கொண்ட சோழ மண்டலத்து புலியூர் கோட்டமா-
2. னக் கொலோத்துங்க சோழவளநாட்டு மேற்மாங்காட்டு நாட்டு குத்தன் பா[க்க]த்து உடையார் திருவையாறுடையார்க்கு இம்மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து செங்குன்ற-
3. நாட்டு ஐஞ்சுரமுல்லைப்பாடித் திருச்சுரக் கண்ணப்பன் ஆதிநாயகன் பஞ்சநதிவாணன் ராஜராஜ நீல கங்கரையன் வைத்த திருநந்தா விளக்கு ஒன்றுக்கு மிருத்தக்கோன் மெய்யலாய் விட்ட பசு முப்-

4. பத்திரண்டும் இஷபம் ஒன்றும் ஆக உரு முப்பத்து மூன்றும் இக்கோயில் காணி முப்பது வட்டத்து செம்பாதி உடைய சிவ ஹாமணன் பாரத்துவாசி பிள்ளான் மகன் காமக்கோடி பட்டனேன் கைக்-

5. கொண்டு சந்திராதித்தவரை நாள் ஒன்றுக்கு ஐஞ்சுபத்தாம் ஊர் காலாலே உழக்கு நெய்க்கு ஒரு திருநந்தாவிளக்கு எரிக்கக் கடவேனாக சம்மதித்து சிலாலேகை பண்ணி குடுத்தே-

6. ன் காமக்கோடி பட்டநேன் இது ஸ்ரீமாஹேஸ்வர இரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 391/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 31
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1209
ஊர்	: குத்தம்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 5
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கள்		
இடம்	: துறையாத்தம்மன் கோயில் கருவறை மேற்குச் சுவர்.		

குறிப்புரை : கல்வெட்டு எண். 4 இல் இடம் பெறும் நீலகங்கரையனே இக்கல்வெட்டிலும் கொடையாளியாகக் கூறப்பட்டுள்ளான். பிள்ளைப்பாக்கத்து மன்றாடி குன்றன் மற்றும் அல்லாளர்கோன் என்ற இரு இடையர் பசுக்களைப் பெற்றுக் கொண்டு நெய் வழங்க உடன்பட்டுள்ளனர். தானம் செய்த நீலகங்கரையன், ஜெயங்கொண்ட சோழமண்டலத்து களத்தூர் கோட்டத்து செங்குன்றநாட்டு அஞ்சுரமுல்லைப்பாடி திருச்சுரகண்ணப்பன் ஆதிநாயகன் பஞ்சநதிவாணன் நீலகங்கரையன் என அழைக்கப்பட்டுள்ளான்.

Summary : On the same place. King-Kulōttuga Chōḻa III. Regnal Year 31 (1209 C.E.).

Registers an agreement for given by the Maṉṟādis to burn twilight lamp in the temple for a gift of 32 cows and one calf made by Nīlagangaraiyaṉ.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும் பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளிய ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு ௩௰க ஆவது ஆனி மாஸத்து ஜயங்கொண்ட சோழமண்டலத்து புலியூர் கோட்டமான குலோத்துங்க சோழ வளநாட்டு மேந் மாங்காட்டு நாட்டு குத்தன்பாக்கத்து உடை-

2. யாற்கு இம்மண்டலத்து களத்தூற்கோட்டத்து செங்குன்ற நாட்டு அஞ்சுர முல்லைபாடித் திருச்சுரக் கண்ணப்பன் ஆதிநாயகன் பஞ்சநதி வாணன் நீலகங்கரையன் வைத்த திருனந்தா விளக்கு ஒன்றுக்கு விட்ட பசு முப்பத்திரண்டும் இஷபம் ஒன்றும் ஆக உரு முப்பத்து மூன்றும் இன்னாயனார் கோயிற் காம[க்]கோன் இ -

3. வ்வாண்டு இம்மண்டலத்து புலியூற் கோட்டத்து பிள்ளைப்பாக்கத்து மன்றாடி காமக்கோன் மகன் குன்றனும் இவ்வூரிலிருக்கும் மன்றாடியார் மகன் அல்லாளர்க் கோனும் இக்காணி எங்களிலே கைக்கொண்டு நாள் ஒன்றுக்கு ஐஞ்சுபத்தாம் ஊற் காலாலே உழக்குனெய் நித்த நிவந்தமாகச் சந்திராதித்தவ -

4. ரை எங்களிலொக்க அளக்கக் கடவோமாகச் சிலாலேகை பண்ணிக் குடுத்தோம் காமக்கோன் மகன் குன்றனும் அல்லாளாக் கோனும் இவ்விருவரோம் பன்மாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 392/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 32
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1210
ஊர்	: குத்தம்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 6
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கள்		

இடம் : துறையாத்தம்மன் கோயில் தெற்குக் கருவறைச் சுவர்.

குறிப்புரை : மூன்றாம் குலோத்துங்க சோழனுடைய அதிகாரி வற்சரான் மன்னனிடம் குத்தம்பாக்கம் திருவையாறு உடையார்க்கு பூந்தமல்லியில் தூணிநிலமும், திருவையாற்று விளாகத்தில் 15 வேலி நிலமும் தேவதான இறையிலியாக வழங்க வேண்டுகிறான். மன்னனும் ஆணையிட கணக்கர்களும் வரியீடு செய்பவர்களும் தங்கள் ஏடுகளில் குறித்துக் கொள்கின்றனர். முன்னதாகக் கோயில் ஸ்ரீமாகேஸ்வர கண்காணி செய்பவர், ஸ்ரீகாரியம் செய்பவர், தேவகன்மம் கணக்கனும் கோயிலுக்கு நிவந்தங்கள் வேண்டி வற்சராயனிடம் முறையிட்டுள்ளார்கள்.

Summary : On the south wall of the central shrine in the same temple. King- Kulōttuṅga III. Regnal Year 32 (1210 C.E.).

Varcharāyan̲ one of the Chōl̲a officer requested to king remittance for dēvadhāna lands located at Pūndamalli tuni land and Kuttanūr Tiruvaiyyār̲r̲uvilagam. King issued the order and sent the letter to Kardmattan and varikkūruccyvār.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்தி கோனேரின்மை கொண்டான் ஜயங்கொண்ட சோழமண்டலத்து புலியூர்க் கோட்டமான குலோத்துங்க சோழ வளநாட்டு மாங்காட்டு நாட்டு குத்தன்பாக்கத்து உடையார் திருவையாலு[று]டைய நாயனார் கோ-

2. யில் ஸ்ரீமாகேஸ்வரக் கங்காணி செய்வார்களுக்கும் ஸ்ரீகாரியம் செய்வார்களுக்கும் தேவகன்மியும் கணக்கனுக்கும் இத்தேவர்க்கு வேண்டும் நிவந்தங்கள் இறுப்பதாக இன்னாட்டுப் பூந்தமல்லியிற் தூணி நிலம் திருவையாற்று விளாகம் நிலம் பதினைய் வேலி-

3. யும் இத்தேவர்க்கு தேவதான இறையிலியாக விடக்கடவதாக வற்ஸராயன் நமக்கு சொன்னமையில் (நாம்) சொல்லக்கணக்கநும் இட்டுகொள்வார்களாக வரிக்கூறு செய்வார்களுக்கும் சொன்னோம் இந்நிலம் முப்பத்திரண்டாவது முதல் இத்தேவற்கு தே-

4. வதான இறையிலியாக கைக்கொண்டு நிமந்தம் செலுத்தப் பண்ணுவதே.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 393/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 22
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ.1200
ஊர்	: குத்தம்பாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 7
அரசன்	: மூன்றாம் குலோத்துங்கள்		

இடம் : துறையாத்தம்மன் கோயில் கருவறைத் தென்புறத்து அதிட்டானம்.

குறிப்புரை : மூன்றாம் குலோத்துங்கனுடைய ஆட்சியின் போது மேல்மாங்காடு நாட்டுக் குத்தம்பாக்கத்து உடையார் திருவையாறு உடையார்க்கு ஆதிநாயகன் பஞ்ச நதிவாணன் ராஜராஜ நீலகங்கரையன் என்ற அதிகாரி 1½ விளக்கு எரிக்க 48 பசுக்களும் ஒரு ரிஷபமும் வழங்கினான். தயிரமுதுக்காகத் தனியாக 3 பசுக்களையும் வழங்கினான். பசுக்களையும் ரிஷபத்தையும் பெற்றுக்கொண்ட மன்றாடிகள் தினமும் நெய் மற்றும் தயிர் வழங்க உடன்படுகின்றனர். மன்றாடிகளில் ஒருவன் வண்டுவராபதி நாயக்கர் ஆவான். மற்றொருவன் நாயக்ககோன் ஆவான். நெய்வழங்க இவர்கள் உடன்பட்டு கோயிலில் கல்வெட்டும் வெட்டிவைத்தனர்.

Summary : On the south wall of the central shrine in the same temple. King- Kulōttuṅga III. Regnal Year 22 (1200 C.E.).

Records a gift of 32 cows and one bull for 1½ perpetual lamps to god Tiruvaiyaruḍaiyār by Ādhināyagan̲ Panchanadivānan̲ alias Rājarāja Nīla Gaṅgaraya native of Mullaippādi.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவந சக்ரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு உ௰உ வது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து புலியூற் கோட்டத்து குலோத்துங்க சோழ வளநாட்டு மேன் மாங்காடு நாட்டுக் குத்தன்பாக்கத்து உடையார் திருவையாறுடையார்க்கு இம்மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து செங்குன்றனாட்-

2. ட்டு ஐஞ்சுர முல்லைபாடித் திருச்சுரக்கண்ணப்பன் ஆதிநாயகன் பஞ்சநதிவாணன் ராஜராஜ நீலகங்கரையன் வைத்த திரினந்தா விளக்கு ஒன்றரைக்கு விட்ட பசு நாற்பத்தெட்டு இஷபம் ஒன்றும் ஆக

உரு நாற்பத்தொன்பதும் தயிரமுதுக்கு விட்ட பசு மூன்று ஆக உரு ஐம்பத்திரண்டு இக்கோயில் சுரபிக் கா-

3. ணிக்கைக் கொண்ட மன்றாடி உய்ய வந்தான் மகன் ஏரம்பனும் ஏறன்மகன் திருமுத்தருக்கோயிலான் வண்டுவராபதி நாயகனும் நாயக்ககோனும் இவ்வனைவோம் இவர் பக்கல் கைக்கொண்ட திரிநந்தாவிளக்கு ஒன்றரைக்கு நாளொன்னுக்கு பத்தாம் ஊற்காலாலே உழக்காழாக்கு நெய்யும் தயிரமுது நாளொன்றுக்கு இன்னாழியாலே நாழித் த-

4. யிரும் நித்த நிவந்தமாக சந்திராதித்த வரை எங்களிலொக்க அளக்கக் கடவோமா சம்மதித்து சிலாலேகை பண்ணிக்குடுத்தோம் இக்கோயில் காமக்காணி இவ்வாண்டு கைக்கொண்ட சோமயனும் தாமற்திருக்கோவிலான் வண்டுவராபதிக் கோனும் நாயக்ககோனு மிவ்வனைவோம் இது பன்ஊாஹேஶ்வர ரக்ஷை॥

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 394/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: 16- ஆம் நூற்.
ஊர்	: மாங்காடு	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: விஜய நகர அரசர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 1
அரசன்	: கிருஷ்ணதேவராயர்		

இடம் : திரளபதி அம்மன் கோயில் தூணில் உள்ள கல்வெட்டு.

குறிப்புரை : வீரநரசிங்க நாய்க்கரான தழுவக்குழைந்தான் தம்பி செல்லப்பன் என்பவன் கிருஷ்ணதேவராயன் ஆட்சியின்போது மாங்காடு நயினார், பரம நயினார்க்கு நிலம் வழங்கி உள்ளார். நாற்புற எல்லையில் தண்டலை விளாகம் நொச்சிலாம்பட்டி, வலம்பட்டி, காட்டூர்பாக்கம் இடம் பெறுகிறது.

Summary : It is located on a stone in the Dhraupadhi Amman temple at Māṅgādu in Pūndamalli taluk. Vijayanaghra King. Krishnadevarāyar 16th century.

One Sellappan brother of Viranarasingayadavaraya Nāyakka donated lands to Māṅgāḍu Siva temple. Kattuppakkam Village is mentioned in this inscription.

கல்வெட்டு :

1. ஸ்ரீ ஸ்வஸ்து–
2. ஸ்ரீ ஸ்ரீமா–
3. மண்ட லே ஸ்ர–
4. வர க்ருஷ்ணப்ப-
5. தெவ மகாரா-
6. யற்க்குச் செ-
7. ல்லா நின்ற-
8. ஸாவ வருஷ-

9. த்து துலாநா-

10. யற்று யபரப-

11. க்ஷத்து ஶுதவார-

12. அஷ்மியும் பூச ந-

13. க்ஷத்ரமும் பெற்ற -

14. யிந்த திவசத்தில் -

15. வீர நரசிங்கரா-

16. ய நாயக்கரான த-

17. ழுவக் குழைந்தா ந-

18. ம்பியார் செல்லப்ப-

19. ன் தன்மம் மா-

20. ங்காடு நயினார் ப-

21. ரம நயினார்க்கு மட-

22. விளாகமாக விட்ட தே-

23. வதான நத்தமான எல்-

24. லைக்கு விபரம் தண்ட-

25. த[லை] விளாகத்துக் கிழ-

26. க்கு நொச்சிலாம் படி-

27. க்கு தெற்க்கு கோயில்-

28. வாம பட்டிக்கு மேற்க்கு-

29. காட்டூப் பாக்காறு கா-

30. றுக்கு வடக்கு இந்த கு-

31. . . . நடுமல்லையும் நி-

32. றத்தில் . . ந்த நிலம் திரு-

33. வேகம்பவிளாகம் விளர -

34. நமாந் யிடுத்தனை யிரண்டு -

35. குழி ருய. . . தென் மேற்கு -

36. தட்டான் பட்டிகுழி ருள -

37. தட்டான் பட்டி குழிரு . . .

38. ஆக வூவின பட்டு -

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 395/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பூந்தமல்லி	வரலாற்று ஆண்டு	: –
ஊர்	: மாங்காடு	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: விஜயநகரப் பேரரசு	ஊர்க் கல்வெட்டு எண்	: 1-அ
அரசன்	: கிருஷ்ணதேவராயர்		

இடம் : திரளபதி அம்மன் கோயில் தூணில் பின் பக்கம்.

குறிப்புரை : அரசன் பெயர், ஆட்சியாண்டு எதுவும் இல்லாத இத்தூண் கல்வெட்டு முழுமையின்றி உள்ளது. மான்யமாக நிலம் விடப்பட்டுள்ளது. இத்தானத்துக்கு எதிரானவர் கங்கைக் கரையில் காராம் பசுவைக்கொன்ற பாவத்தில் படுவர் என உள்ளது.

Summary : It is located on a stone in the Dhraupadhi Amman shrine at Māṅgādu unfinished.

A certan person to the temple donated lands.

கல்வெட்டு :

1. அந்தரா-
2. யமும் மான்–
3. னிய நிலம்-
4. சந்திராதி-
5. த்த வரை-
6. யும் செல்ல-
7. க் கடவதா-
8. கவும் யிந்-
9. த நயினாரை -

10. யும் பூை-
11. ச யே நடத்த -
12. கடவதாக -
13. வும் யித்தன் -
14. மத்ததுக்கூ
15. ய் யாதொ-
16. ருவர் அகிது
17. மானால் ெ -
18. கங்கை க ை -
19. ரயிலே கா-
20. ராம் பசு -
21. வை கொ -
22. ன்ற பாவத் -
23. திலே போக -
24. க் கடவர்க -
25. ளாகவும்.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 396/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 38
வட்டம்	: பள்ளிப்பட்டு	வரலாற்று ஆண்டு	: 13-ஆம் நூற் அல்லது பொ. ஆ. 1243.
ஊர்	: வெளியகரம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: யாதவராயர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 1
அரசன்	: வீரநரசிங்க தேவன்		

இடம் : சோமநாத ஈஸ்வரர் கோயில் மேற்கு மண்டப உட்சுவர்.

குறிப்புரை : தொண்டை மண்டலத்தின் வடபகுதியில் குறிப்பாகத் திருவள்ளூர், ஆந்திராவில் உள்ள சித்தூர்ப் பகுதிகளை யாதவராயர் ஆட்சிசெய்து வந்துள்ளனர். அம்மரபில் வீரநரசிங்க தேவன் ஒருவன் ஆவான். வெளியகரம் கிராமத்தில் இன்றுள்ள சோமநாத ஈஸ்வரர் கோயிலில் ஓர் செப்புத்திருமேனியை வள்ளுவராயன் செய்து வைத்துள்ளான். திருவெளிப்பாக்கம் பஞ்சவன் மாதேவிச்சேரி எனவும் ஊர் வழங்கப்பட்டுள்ளது. மணவூர் என்ற ஊரிலும் நரசிங்க தேவராயன் கல்வெட்டுள்ளது. திருமலை திருப்பதி தேவஸ்தானம் கி.பி.1993 - இல் பதிப்பித்த முதல் தொகுதி கல்வெட்டில் பத்மாவதி அம்மன் கோயிலில் உள்ள சாசனம் ஒன்றில் வள்ளுவக்கோன் என்ற பெயர் வருகிறது. விஜயாதித்தன் என்ற மன்னர் பெயரில் இக்கல்வெட்டுள்ளது. பிற்காலப் பல்லவர் காலமாகும் என்று அந்த நூல் குறிப்பிடுகிறது.

இங்கு வரும் வள்ளுவராயன் என்பவன் வீரநரசிங்க யாதவராயன் காலத்தில் வாழ்ந்துள்ளான். நம் கல்வெட்டின் காலம் பொ.ஆ.1243. சோழர்காலத்தில் சிற்றரசராக இருந்த மரபினர் சோழர் வீழ்ச்சிக்குப் பின் தனியரசராக ஆட்சி செய்துள்ளனர். இந்த யாதவராயர் கல்வெட்டுகள் திருப்பதி கோயிலில் பல உள்ளன. திருவொற்றியூரில் உள்ள கல்வெட்டுகள் சிலவற்றில் வீர நரசிங்க தேவயாதவராயர் மூன்றாம் இராசராசன் காலத்தில் ஆணை பிறப்பிக்கும் அதிகாரியாக இருந்துள்ளார். (A.R.E 227/1912 மற்றும் 199/11912 காண்க). வள்ளுவராயனே வள்ளவராயன் என வெட்டப்பட்டுள்ளது.

Summary : On the west base (innerwall) of the mahā maṇḍapa in Sōmanādha Īsvarar temple. Yādavarāya dynosty. King Vīranārasiṅga dēvan. Regnal Year 38 (1243 C.E.).

Gift of copper image by Vāluvaraya to Sōmanātha Īsvara temple at Vēḷip-pākam alias Panchavan mādhēvichēri. The donor was a powerful officer of the 13th Century. Narasinga deva's inscription are seen in Thiruppadhi and Thiṟuoṟṟiyūr temples also.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் வீரநரசிங்க-
2. தேவர் யாதவராயற்கு யாண்டு 'ஃ௰அ' ஆவது . ந்தி நாட்டு வெள்-
3. ளிகுளத்து உடையார் சோமீசுரமுடைய நாயனார் கோயில்-
4. திருவெளிப்பாக்கமானப் பஞ்சவர்ணமாதேவிச் சேரியற்கு இந்த இத்திருமேனிக்கு
5. . . . . . . ஆத்ரயன்
6. அதிகாரம் செய்வோன் வள்ளுவராயன் தன்மம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 397/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 20
வட்டம்	: பள்ளிப்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ. 927.
ஊர்	: ஈச்சம்பாடி	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 1 மற்றும் 1அ
அரசன்	: முதலாம் பராந்தகன்		

இடம் : கைலாசநாதர் கோயில் கருவறை மேற்குக் குமுதம்.

குறிப்புரை : முதலாம்பராந்தகசோழனுடய20-ஆவது ஆட்சியின்போது திருநின்றவூரைச் சேர்ந்தவன், ஈச்சம்பாடியில் உள்ள கொண்டீஸ்வரமுடைய நாயனார்க்குக் கொடை அளித்ததாகத் தெரிகிறது. கல்வெட்டில் எண்ணை, விரை போன்ற சொற்கள் இடம் பெறுகின்றன. கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது.

Summary : On the west wall of the central shrine in the same temple. King-Chōḻa Parāntakā I. Regnal Year 20 (C.E.927).

This is unfinished and damaged. Registers a gift of paddy seed to the temple lands for cultivation purpose at Ichchampādi village by the Sabhā. Mentions Tiruninṟaivūr. (Ninṟai in inscription) The second inscription totally damaged.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மதிரை கொண்ட கோப்பரகேசரி பன்மற்கு யாண்டிருபதாவது புழல் கோட்டத்து நின்றவூர் . . . .

2. கொண்டீஸ்வரத்துக்கு குடுத்தோ மிப்பத[ற்]கு நெல்விரை தேவ . . . . நோக்கின . . கா . . . . எண்ணை செய் . . கெல்லை போயை (கொண்டீ) ஸ்வரத்துக் காணியாகக் கட்டளை ஓடைக்கு . . . .

2A

1. லிரு பெரும் பாணூர்பளி . . . .

கல்வெட்டு முடியவில்லை.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 398/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 20
வட்டம்	: பள்ளிப்பட்டு	வரலாற்று ஆண்டு	: 13-ஆம் நூற்.
ஊர்	: பெருமாநல்லூர்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர் ?	ஊர்க் கல்வெட்டு எண்	: 1 -(1-1, 1-2)
அரசன்	: –		

இடம் : விஜயராகவ பெருமாள் கோயில் கருவறை வடக்கு ஜகதி.

குறிப்புரை : கல்வெட்டின் தொடக்கப்பகுதி இல்லாததால் மன்னன் பெயர், ஆட்சியாண்டு, அல்லது காலம் அறிய முடியவில்லை. எனினும் சாசன எழுத்துகளும் தொடரமைப்பும் பிற்காலச் சோழர் காலத்ததாகக் கருத முடிகிறது. காடுகாழ் தெறு என்ற தொடர் காடு கிழாள் நிலம் எனலாம் விஜயராகவப் பெருமாள் கோயிலில் ஸ்ரீபலிகொட்ட இறையிழிச்சி நிலம் வழங்கப்பட்டுள்ளது. சபை, இரண்டாம் குழி, மூன்றாம் குழி போன்ற தொடர்கள் வந்துள்ளன. விஜயராகவ என்ற பெயரில் வடதமிழ் நாட்டில் பல கோயில்கள் உள்ளன. கல்வெட்டாண்டறிக்கையில் சந்திரசேகர நூற்றெண்மன் மற்றும் நாவிசன் என்ற சொற்கள் உள்ளன.

வேறொரு கல்வெட்டு தொடர்ச்சிபோல் தோன்றுகிறது. பாட்டு கூறும் கடிகையான பாவாதி மல்லுகின்ற சந்திரசேகரன் பெயர் வருகிறது. 150 பொன்னுக்குச்சில இடங்களில் நிலம் வாங்கப்பட்டு, கொடை தரப்பட்டுள்ளது. சில நிலங்களின் பெயர்களும் காண்கிறோம். அரைக்கால் பொன் பெற்றுக்கொண்ட சபை இறையிழிச்சி தந்துள்ளது. நாவிசன் நாவிதர். விநாயகக்குழி நிலத்தின் பெயர். பாட்டு கூறும் கடிகை - புலவர் எனலாம்.

Summary : On the north wall base portion (jagadhi) of the central shrine in Vijayaraghava perumāl at Perumānallūr in Pallipattu taluk. King name and year is not known. Any how this is Chōḻa period.

Registers a gift of land by certain person namely Chandrasēkara nūṟṟenman to the members of the sabah. The sabah gave this land to one navisoṉ(barber) with out tax. Also gave Araikkalapon for water purpose. Kadukāl daity mentions.

கல்வெட்டு :

I

1. தியும் ஸ்ரீபலிகொட்ட பன்னிரு . . . . [இ]ழிஞ்சியுங் கொட்டுவதாகு

இறைஇழிச்சி வைய்த்த நிலமாவது காடுகாழி தெறுவும் இதின் தெற்கு-

2. மல்லனாளையில் மூன்றாங்குழியும் இரண்டாம் குழியும் பூமியும் ஒடுவணங்க இப்படியும் வைத்தோம் ஸஹெயொம் மற்றும் எங்களூர் ஸ்ரீசெத்தாற்கு . . . . லைவுச்சோலை . . .

II

1. ஸஹெயொறும் இவ்வூர்த் தேவர்கள் திருவிழாவுக்குப் பாட்டுக் கூறுங் கடிகையான பாவாதி ம-
2. ல்லுகின்ற சந்திர சேகரனான் னூற்றைண்ம்பது பொ[ந்நு] [ந]ம்பிக்குப் புத்தேரி வள்ளை னாவிசன் திருத்தி-
3. னஞ்சையில் களிம்பு உடையான் திருத்தின குண்டில்களும் திடியில் வினாயகக் குழி நானூற்றும் . . . .
4. ணிலத் . . . முண்ணீல மொழிவின்ரி இறை இழிச்சிப் போமாகத்தி அரைக்கால்ப் பொன் இடுவித்தோம் இப்பரி . . .
5. ஸஹொம் இப்பரிவு வைய்[த்]தது.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 399/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 47
வட்டம்	: பள்ளிப்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ. 1118
ஊர்	: கொளத்தூர்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 1.1, 1.2, 1.3
அரசன்	: குலோத்துங்கன்		

இடம் : திருமூலஸ்தானமுடையார் கோயில் கருவறை வடக்குச் சுவர்.

குறிப்புரை : கொளத்தூர் என்று தற்போது வழங்கப்படும் ஊர் முன்பு குளத்தூர் என்றே வழங்கப்பட்டது. இந்தக் குளத்தூரில் திருமூலஸ்தானமுடையார் என்ற பெயரில் சிவன் கோயில் உள்ளது. முதலாம் குலோத்துங்கன் ஆட்சியின் போது மும்முடி சோழ காங்கன் கினையான் அகமுடையாள் மாந்தை என்பவள் குளத்தூர் திருமூலஸ்தானமுடைய மகாதேவர் கோயிலில் இரண்டு விளக்குகள் வைக்க இரண்டு காசுகளை வழங்கி உள்ளார். காணியுடைய கோயில் சிவப்பிராமணர்கள் மேற்படி காசுகளைப் பெற்றுக் கொண்டு தினமும் விளக்கெரிக்க உடன்பட்டனர்.

இக்கல்வெட்டு சற்றுச்சிதைந்துள்ளது. 1.1, 1.2, 1.3 என படியெடுக்கபட்டாலும் ஒரே கல்வெட்டாகவே கொள்ளலாம். 1-2 யில் தானத்திற்கு எதிரானவருக்கு நேரும் பாவம் சுட்டப்படுகிறது. அகமுடையாள் என்பது மனைவி. இனி அகமுடையார் சாதியையும் குறிக்கும். தற்போதும் இப்பிரிவினர் இங்குள்ளனர். திருவாவடுதுறை ஆதீனக்கவிஞர் சிவஞான முனிவர் இங்கே வந்து குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் என்ற நூல் இயற்றியது வரலாறு ஆகும். தம்பிகளின் பெயர்களைக் குறிப்பிடும் போது ஓர் ஒழுங்கு முறை பின்பற்றப்பட்டது. தனக்குப்பின் பிறந்தவனே தம்பி. மூத்தவன் பெயரை பிறதம்பிகளுடன் சேர்க்காமல் முன் பிறந்தார் என்றே இடம் பெறுகிறார்.

Summary : On the north wall of the central shrine in the Tirumūlasthana muḍaiyār temple. Chōḻa - Kulottuga I. Regnal Year 47 (1118C.E.)

Records an agreement made by the Siva-brāhmanās of the temple of Mūlasthāṇa mudaiya-Mahādēva at Kulattūr a brahmadeya in Puḻālnāḍu a sub division of Jayaṅgonda Sōḻa maṇḍāḷ am to maintain lamps in the temple from the interest on 2 kāsu received by them from Agamudaiyal (Wife) of Mummadi Sōḻagangan Kīḻaiyūr. The temple priest names are also mentioned.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவந சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு நாற்பத்தேழாவது-
2. ஜயங்கொண்ட சோழ மண்டலத்து புழல் கோட்டத்து புழல் நாட்டு குளத்தூரரான-
3. திருமூலஸ்தானமுடைய மஹாதேவற்கு இக்கோயில் காணிஉடைய ஸிவப்ராஹ்மண கௌண்டிந்ய கோத்ரத்து குமண்டி கமலபிராண-
4. பட்டனும் இவன் தம்பி சந்திரசெகர பட்டனும் இவன் தம்பி பொ[ன்]னம்பல பட்டனு[ம்] இவன் தம்பி திருக்காளத்திப் பட்டனு[ம்] தி . . . .
5. கௌஶிகய கோத்ரத்து திருவகத்தி பட்டனும் இவன் தம்பி கேசவபட்டனும் மும்முடி சோழ கங்கன் கிணையன் அகமுடை-
6. யாள் மாந்தை பக்கல் திருநுந்தாவிளக்கு ஒன்று கைக்கொண்டு சந்தி ஏழுக்கும் சந்தி விளக்கு இரண்டு எரிக்கக் கைக்கொ-
7. ண்ட காசு இரண்டு இக்காசு இரண்டுக்கும் . . ஒருசந்திக்கு னாநாழி எண்ணையக்கு பொலியூட்டாக இவர்கள் காணி ெ . . . .
8. இ . . . வாகன் கா . . . .
9. ழமா விகாதம்மன . . . . இதற்கு விசுநம் கெங்கையிடை குமரியிடைக் குரால் (பசுவை) குத்தினான் பாவத்திற் படுவானாக

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 400/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	:	11
வட்டம்	: பள்ளிப்பட்டு	வரலாற்று ஆண்டு	:	பொ. ஆ. 1129.
ஊர்	: கொளத்தூர்	இ.க. ஆண்டறிக்கை	:	–
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	: தமிழ்			
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	2-1, 2-2, 2-3
அரசன்	: விக்கிரம சோழன்			

இடம் : திருமூலஸ்தானமுடையார் கோயில் கருவறை வடக்குச் சுவர்.

குறிப்புரை : விக்கிரம சோழனுடைய 11-ஆம் ஆட்சியின்போது குளத்தூர் மூலஸ்தானமுடைய மகாதேவர் கோயிலில் சந்தி விளக்கு வைக்க 3 காசு முதலீடாக வைக்கப்பட்டது. கோயில் காணியுடைய சிவப்பிராமணர் முதலீடு பெற்றுக் கொண்டு விளக்கெரிக்க எண்ணெய் வழங்க உடன்பட்டனர். சுப்பிரமணியதேவர் கொடையாளாராக இருக்கலாம் ணகர மெய் இரட்டித்து வந்துள்ளது.

Summary : On the west wall of the central shrine in the same temple. King-Vikkirama Chōḻan. Regnal Year 11.

This inscription records the gift of 3 Kāsu, left in the hands of the sivabrahmanas, of the temple by Subramanya uḍaiyār for burning of a perpetual lamp in the temple of Tirumūlasthāna udaiyamahādēver koil.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவந சக்ரவத்திகள் விக்ரம சோழ தெவற்கு யாண்டு பதின் ஒன்றாவது திருமூலஸ்தானமுடைய மஹாதெவற்கு
2. சந்தி விளக்கு ஒன்றுக்குக் காசு . . . இக்காசு திங்கள் நாழி எண்ணையால் யிக்கோயில் காணி உடையான்
3. சுப்பிரமண்ணிய உடையார் காணிக்கை . . . . காசு ஒன்று தி . . . விந்தானு[ம்] மையன் சோமன் பூபாலன்
4. . . . . ஜயங்கொண்ட [சோ]ழ . . . ல் கைக்கொண்ட . . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 401/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 18
வட்டம்	: பள்ளிப்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ. 1136.
ஊர்	: கொளத்தூர்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 2.3, 2.4
அரசன்	: விக்கிரம சோழன்		

இடம் : திருமூலஸ்தானமுடையார் கோயில் கருவறை மேற்குச் சுவர்.

குறிப்புரை : விக்கிரம சோழனுடைய 18-ஆம் ஆட்சியின்போது திருமூலஸ்தானமுடையார் கோயிலில் விளக்கு வைக்க ஏற்பாடு செய்த விபரம் இக்கல்வெட்டில் உள்ளது. கொடையாளி 200 காசுகளை முதலீடாகக் கோயில் பிராமணர்களிடம் தந்து அதன் வட்டி கொண்டு விளக்கு எரிக்க வழிவகை செய்துள்ளான்.

Summary : On the north wall of the central shrine in the same temple. King-Vikkirama sōḻan. Regnal Year 11. (1136 C.E.)

Records the gift of 200 kasu left on the hands of Brahamanas of the temple by the donor for burning a perpetual lamp in the temple.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்ரவத்திகள் ஸ்ரீவிக்கிரம சோழதேவற்கு யாண்டு 18-வது-
2. ன் ஜயமேருச் சதுர்வேதி மங்கலத்து திருமூலஸ்தான முடையமஹாதெவற்கு இக்-
3. கோயிந்தன் தம்பி . . . . பட்டனுமிவன் தம்பி சந்திரசேகர பட்டனு யிவ-
4. ன் தம்பி . . . . . . நந்தியபட்டனும் கேரளந்தக . . . . . . திருக்கழிப் . . . . . .
5. க்கு . . . . . .னெல் கூ . . . . சந்திரா . . . . ல . . . . பட்டனும்
6. . . . .
7. இட்டகாசு இருநூறும் மூலஸ்தான . . . . . .
8. கைக் கொண்டு . . . . . திட்டா . . . .
9. க்கு விகநத்துக்கு அழிவு பண்ணினார்க்கு

கல்வெட்டு முடியவில்லை.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 402/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: 16.1.1958
வட்டம்	: பள்ளிப்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ. 1136.
ஊர்	: மேல்பூடி	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 3
அரசன்	: –		

இடம் : இராதாருக்குமணி சமேத வேணுகோபால் கோயில் - மடைப்பள்ளியில் உள்ளது.

குறிப்புரை : மடைப்பள்ளியைப் பஞ்சவர்ணம்மாள் கட்டியதை இந்த நவீன சாசனம் குறிப்பிடுகிறது.

Summary : On the wall of the Madaippalli (temple kitchan room) Modern characet. Mentions Sāmpasivapiḷḷai and Panchavarna ammal.

கல்வெட்டு :

1. மாஸ்டிஸ்ரீ: கணக்கு சாம்பசிவப்பிள்ளை
2. சௌமாணி பஞ்சவர்ணம்மாள் திருப்பணி 16.1.1958.

த.நா.அ. தொல்லியல் துறை ***தொடர் எண் : 403/2024***

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பள்ளிப்பட்டு	வரலாற்று ஆண்டு	: 14-ஆம் நூற்.
ஊர்	: ஆர்.கே.பேட்டை	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 1-2
அரசன்	: –		
இடம்	: பள்ளிவளாகம் பலகைக்கல்.		

குறிப்புரை : இக்கல்வெட்டின் தொடக்கப்பகுதி கிடைக்கவில்லை. இடையிடையே சிதைந்துள்ளது. கோயிலுக்கு ஏதோ தானம் தந்துள்ளனர் எனத்தெரிகிறது.

Summary : On a separat stone near school. King name and regnal year damaged. Mentions 52 Mādai (gold Coins), period 14th Century.

கல்வெட்டு :

1. ஈலழ கல்லண்ணாரும் மு-
2. . . . . பாசூம் விலக்கலன்னாம் . . . .
3. ம்மான ணோம் . . . . . .
4. மும் யிரத்தி . . . . .
5. ஸ்ரீபாத . . . . டைலா . . . .
6. லை மேல்வயி . . .
7. ங்காந் அஹிதம் வெ . . . .
8. ளவுடின்னா . . . . ஶ ஶ . . . கங்கை
9. யிடை குமரியிடை
10. குராற்[ப]சு முன்சேகாளில் . . .
11. தமாவி ய . . . .

12. யிட . . . . . கட்ட ாரும்

13. யிதவெஒட்டாரும் . . . . . .

14. இதுவே பன்மாகே-

15. ஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 404/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: சகம் . 1308
வட்டம்	: பள்ளிப்பட்டு	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ. 1386
ஊர்	: விளக்கணாம்பூண்டி	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: விஜயநகர அரசர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 1
அரசன்	: வீரபொக்கன்ன உடையார்		

இடம் : விசயாலயஈஸ்வரமுடையார் கோயில் நந்திச் சிலையருயே உள்ள கல்பலகை.

குறிப்புரை : விஜயநகர அரசர் வீரபொக்கன்ன உடையார் ஆட்சியின்போது பொ.ஆ.1386-இல் வெட்டப்பட்டது. இக்கல்வெட்டில் விசையாலேந்திர சோழீசர் கோயிலில் சந்திவிளக்கு வைக்க, கட்டளை ஏற்படுத்தப்பட்டதும். பல்வேறு வணிகர், தொழிலாளர்க்குரிய மகமையும் இதில் இடம் பெறுகிறது. இக்கல்வெட்டின் தொடக்கத்தில் சூரிய, சந்திர, சூல உருவங்கள் உள்ளன.

Summary : On a separat stone near Nandi statue. Vijayanaghre King. Vīra Pokkanna uḍaiyār. Year 1386 C.E.

Verious merchant peoples together and donated magamaī (tax) to Visaiyalaya Sōḻiśvarar kovil for sandi vilakku (lighting purpose. Mentions Ellamarasar Thirukkadigai nāḍu and Vilakkanampūndi.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மஹாமண்ட–
2. லேஸ்வரர் ஹரியராய விபாடான்-
3. பாஷெக்கு தப்புமிராயர்க் க-
4. ண்டு வீரஸ்ரீ புக்கண்[ண] உடை-
5. ய[ா]ற்க்கு செல்லாநின்ற சகாப்த–
6. ம் ௲௩௱அ ன் செல்லாநின்ற வியவ-
7. ஸம்வற்ஸரத்து மிதி(ஞ)ந நாயிற்று பூர்வ-

8. பக்ஷத்து தி ஊகையும் பெற்ற புணர்-
9. பூசத்து னாள் செயங்கொண்ட சோழ-
10. மண்டலத்துத் திருக்கடிகைக் கோ-
11. ட்டத்துத் திருக்கடிகை நாட்டில் விழக்-
12. கண[ா] பூண்டி உடையார் விசைஆலே-
13. ந்திர சோளீஶ்வரமுடைய நாயனார் கயம-
14. டை வளாகம் நாலு கல்நாட்டுக்கும் நடு-
15. ஏறின குடியர் வள்ளி பட்டடை ஆயம்-
16. நூலாயம் முத்தயதண்யக்கிர மகமை ம-
17. ற்றும் ஆயத்தை நோக்கி வந்த பல்வகையும்-
18. உடைய[ா]ர் சந்திராதித்தவரையும் செல்லுவதா-
19. கக்குடுத்த நெயிப்படிக்குப் பொக்கராயனுக்கு-
20. சந்திவிளக்கு இடக்கடவதாக எல்லமராசர்-
21. வட்டம்காரப்புக்கு தாழ்வற நடத்தவும் இத்-
22. தந்ஊத்துக்கு விஹ்னம் பண்ணிணவர்கள் கெ-
23. ங்கைக்கரையில் குரால் பசுவைக் கொ-
24. ன்றான் பாவத்தை பெறுவர்கள் பஞ்சபாத-
25. கம் பண்ணினயர்வர்கள் பண்ணின பாவத்தை-
26. ப் பெறுவார்கள் ஸ்ரீஊஹாஹேஶ்வர ரெக்ஷ
27. . . . .
28. . . . .

கடைசி இரண்டு வரி தெலுங்கில் உள்ளது.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 405/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பள்ளிப்பட்டு	வரலாற்று ஆண்டு	: 18-ஆம் நூற்.
ஊர்	: விளக்கணாம்பூண்டி	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 2
அரசன்	: –		

இடம் : விசயாலய ஈஸ்வரமுடையார் கோயில் வாயில்படி.

குறிப்புரை : அருகஸ்தானம் என்பதால் சமணர் என்பது தெரிகிறது. மேலும் நயனார் என்பதும் சமணர் என்பதை உணர்த்துகிறது. வாயில்படி அமைத்துக் கொடுத்தார் போலும். கொடையாளி குங்குலியநாயினார்.

Summary : At the entrance to the maṇḍapa in the central shrine in the same temple. Mentions Jain Saint Kuṅguliya nāyinār. (Nayinār associated to Jains)

கல்வெட்டு :

1. ௨ அருகஸ்தா-
2. நம் குங்குலி-
3. ய்ய நயினார்-
4. சதா சேர்வை.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 406/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பள்ளிப்பட்டு	வரலாற்று ஆண்டு	: 18-ஆம் நூற்.
ஊர்	: விளக்கணாம்பூண்டி	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 3
அரசன்	: –		

இடம் : விசயாலீஸ்வரர் கோயில் துவாரபாலகர் அருகில் உள்ள தூண்.

குறிப்புரை : தனி நபரின் பெயர் காண்கிறோம். திருப்பணியில் ஈடுபட்டவர் எனலாம். திண்டீபதாசர் என்பது அவர் பெயராகும்.

Summary : At the entrance to the maṇḍapa in the central shrine in the same temple. Mention donarś name Thindibadāsar.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ-
2. திண்டிஶ்ஶாச[ர்]

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 407/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பள்ளிப்பட்டு	வரலாற்று ஆண்டு	: 18-ஆம் நூற்.
ஊர்	: விளக்கணாம்பூண்டி	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 4
அரசன்	: –		

இடம் : விசாலாட்சி அம்மன் நுழைவு வாயில்.

குறிப்புரை : ஆவுடையப்பன் திருப்பணியில் ஈடுபட்ட விவரம் இதில் உள்ளது.

Summary : At the entrance to the Ammen shrine Ardhamaṇḍapa in the same temple. Mentions donor name Āvudaiappan.

கல்வெட்டு :

1. ஆவுடை[ட]யப்பந் ச[தாசேர்வை]

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 408/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பள்ளிப்பட்டு	வரலாற்று ஆண்டு	: 18-ஆம் நூற்.
ஊர்	: விளக்கணாம்பூண்டி	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 5
அரசன்	: –		

இடம் : விசாலீஸ்வரர் கோயில் அர்த்த மண்டபம் தரை.

குறிப்புரை : கல்வெட்டு மிகவும் சிதைந்து வாசிக்க முடியாதபடி உள்ளது. எனவே சில எழுத்துகள் மட்டுமே தரப்பட்டுள்ளன.

Summary : At the ground leval of the Ardhamaṇḍapa in the same temple. Badly damaged.

கல்வெட்டு :

1. . . . .
2. ப . . . . . டை . . . .
3. . . . .லிக உ . . . . . .
4. . . . . . . ந . . . . .
5. . . . . மா . . ள் . . . . .
6. கங் . . . . . ய
7 க்க . . . . அ .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 409/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பள்ளிப்பட்டு	வரலாற்று ஆண்டு	: 18-ஆம் நூற்.
ஊர்	: விளக்கணாம்பூண்டி	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 6
அரசன்	: –		

இடம் : விசாலீஸ்வரர் கோயில் அர்த்த மண்டபத்தூண்.

குறிப்புரை : மிகவும் சிதைந்த இக்கல்வெட்டு கி.பி.13-ஆம் நூற்றாண்டு எனலாம். எண்.6 நீக்கப்பட்டது.

Summary : A pillar in the outer maṇḍapa in the same temple. damaged.

கல்வெட்டு :

1. ஜய . . தெ . . . புன வு–
2. விதராஜ்யர்க்கு செல்ல . .
3. யிதில்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 410/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பள்ளிப்பட்டு	வரலாற்று ஆண்டு	: 18-ஆம் நூற்.
ஊர்	: விளக்கணாம்பூண்டி	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 7
அரசன்	: –		

இடம் : விசாலீஸ்வரர் கோயில் அர்த்த மண்டபச் சுவர்.

குறிப்புரை : திருப்பணியில் ஈடுபட்ட நபரின் பெயர் காண்கிறோம். ஊர்க்கல்வெட்டு 3-இல் திண்டிபர் பெயர் உள்ளது. திண்டிபருடைய சேவகன் ஆலையான் இக்கல்வெட்டில் இடம் பெறுகிறார்.

Summary : On the wall of the Ardhamaṇḍapa in the same temple. Mentions Tirumayānamuḍaiyār and Tindipar Alaiyan.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ தி-
2. ருமயான மடமு-
3. டைய திண்டிஜ–
4. ச் சேவகன் ஆ-
5. லையன்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 411/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பள்ளிப்பட்டு	வரலாற்று ஆண்டு	: 18-ஆம் நூற்.
ஊர்	: விளக்கணாம்பூண்டி	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 8
அரசன்	: –		

இடம் : விசாயாலீஸ்வரர் கோயில் அர்த்த மண்டபச் சுவர்.

குறிப்புரை : கி.பி.18-ஆம் நூற்றாண்டளவில் பாதிரி கந்தப்பம் சின்னரெட்டி என்பவர் கோயில் திருப்பணியோ கொடையோ தந்ததாகத் தெரிகிறது.

Summary : On the wall of the Ardhamaṇḍapa in the same temple. Modern character. Mentions Simma reddi of Padhiri Kandappam.

கல்வெட்டு :

1. பாதிரி கநூப்பம் சிண்[ன]-
2. ன ரெ[ட்]டி சதாசேர்வை.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 412/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பள்ளிப்பட்டு	வரலாற்று ஆண்டு	: 14-15-ஆம் நூற்.
ஊர்	: விளக்கணாம்பூண்டி	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 9
அரசன்	: விஜயாதத்தன்		

இடம் : விசயாலீஸ்வரர் கோயில் அர்த்த மண்டபத் தெற்குக் குமுதப்படை.

குறிப்புரை : இக்கல்வெட்டு சிதைந்தநிலையில் உள்ளது. விஜயாதித்தன் பாணநாயகத்தின் அடியான் ஒருவனுடைய பெயரைச் சுட்டுகிறது. விஜயாதித்தன் சிற்றரசன் எனலாம். தானம் செய்த விவரம் உள்ளது.

Summary : On the southern wall of the ardhamaṇḍapa in the central shrine in the same temple. It damaged and incompleted. Mentions Vijayadittan Bānanāyagaṉ Adiyurkiḻavaṇ and land.

கல்வெட்டு :

1. . . வ஀வ஀ ஸ்வஸ்ரீ விஜயாஜித்த வாணநாயகம் அடியார் கிழவன் . . . .
2. வைய்த்தேன் இதுக்காக . . . . டை . . . டன்னமே மேலன இதுக்கு குழிக்கு . . . . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 413/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: பள்ளிப்பட்டு	வரலாற்று ஆண்டு	: 15-ஆம் நூற்.
ஊர்	: விளக்கணாம்பூண்டி	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: விஜய நகர அரசு	ஊர்க் கல்வெட்டு எண்	: 10
அரசன்	: –		

இடம் : விசாயாலீஸ்வரர் கோயில் கொடி மரம் அருகில் உள்ள தனிக்கல்.

குறிப்புரை : விஜய நகரப் பேரரசு காலத்தில் வெட்டப்பட்ட இக்கல்வெட்டின் தொடக்கத்தில் சூரிய சந்திர சூல உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. சூல உருவம் சிவன் கோயில் நிலத்தைச் சுட்ட, சூரியன் சந்திரன் உள்ள வரை இத்தானம் நிலைக்க என்பதை சூரிய சந்திரன் உருவங்கள் சுட்டும். இடங்கை மகாசேனையார். விளக்கணாம்பூண்டி நாயனார் விசையாலீஸ்வரர் கோயில் வளாகத்தில் ஒன்று கூடி இடங்கை மகா சேனையர் செலுத்த வேண்டிய மகமை அளவை தீர்மானித்தனர். வரிகளில் சிற்றூர் பேரூர் வித்தியாசமுண்டு.

Summary : A separate stone near the Kodikkambam. Vijayanagare dymosty. 15th Various.

Idangai sect mahāsabaiyār assembled in the Visaiyalīśvara temple complex and decided to magamai panam and oil mesurement.

கல்வெட்டு :

1. . . ஸ்வஸ்திஸ்ரீ உருஉஹாஉணுலேஸ்ரூன்-
2. வி᷊கிவி ரா-
3. ச்சியம் பண்ணா நின்ற பவ வரு-
4. ஷ௸ ஆவணி மாதம் ஜயங்கொ-
5. ண்ட சோழ மண்டலத்து-
6. திருக்கடிகை கோட்டத்து
7. திருக்கடிகை நாட்டில் விழ[ள]-

8. க்கண[ா]பூண்டி நாயினார் வி-
9. சைஆலீஸ்ரூஉ உடைய நாய-
10. னாற்[ர்] திருமந்திர கிரி சூழ்ந்த பலபற்-
11. றில் இடங்கை மகா சேனையார்
12. யிடங்கை மீகாமன் திருவாசலிலே
13. நிறைவற நிறைந்து குறை[வர] கூடி-
14. யிருந்து சமைய இதர இத்தபடி இ-
15. ருந்த இரண்டு பணமும் சிற்றூற்கு
16. இரு பணமும் செக்கு பாதிப்பண
17. மும் குறுணி எண்ணையும் மண்-
18. கலமுடைத்துமி[ெ]வண்கல மெடு -
19. த்து கொள்ளவும் இம்மடை வி-
20. [ளாகத்தில் இடங்கை] குடியில்

கல்வெட்டு முடியவில்லை.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 414/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: ஊத்துக்கோட்டை	வரலாற்று ஆண்டு	: 18-ஆம் நூற்.
ஊர்	: வெள்ளாத்துக்கோட்டை	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 1
அரசன்	: –		
இடம்	: ஊர் அருகே தூம்பில் உள்ளது.		

குறிப்புரை : தமிழ் மற்றும் தெலுங்கு மொழியிலும் வெட்டப்பட்ட இக்கல்வெட்டின் தமிழ்வாசகம் மட்டும் இங்கே இடம் பெறுகிறது. வெள்ளாத்து ஏரிக்குத் தூம்பு ஏற்படுத்தி வைத்ததை இச்சாசனம் சுட்டுகிறது. அரசன் பெயர், ஆட்சியாண்டு எதுவும் இடம் பெறவில்லை. விய வருஷம் தை மாதம் இடம் பெறுகிறது. தொண்டை மண்டலம் என்ற சொல்லும் உள்ளது. தை என்பது ‘தய்’ என வெட்டப்பட்டுள்ளது. ஐயனார் என்பதை அய்யனார் என எழுதப்பட்டது. இப்போக்கு தமிழி கல்வெட்டு காலந்தொடங்கிக் காண்கிறோம். ஐ மற்றும் ஔ இரண்டும் எழுதாமலே ‘அய்’ என்றும் ‘அவ்’ என்றும் நாம் எழுதலாம். வரதப்ப நாயக்கனுடைய தாயார் எல்லாம்மாள் தூம்பு ஏற்படுத்தி உள்ளார்.

Summary : Vellattukottai Village Both Tamil and Telugu inscription.

Records that the Thūmbu was the precious gift of Ellammal, the mother of Vardappa Nayakkan of Toṇḍaimaṇḍāḷam in late charactor.

கல்வெட்டு :

1. ஶ்ரீ கி(ரு)ஷ்ணசுவாமிச் சுபம் விய ஷ தய் ம[ா]சம் ச ம்
2. தேதிப் புதன் கிழமை அகிலாண்[ட்]டிகோடி பிற-
3. மாண்டனாயகரான ஶ்ரீகிஷ்ணசுவாமி யிந்த தற்மம் . . . . .
4. . . . விழுக்கவிட்டவாற . . . ஶ்ரீ தொண்ட மண்டலம் கொ-
5. ண்டித் தறவறுதப்ப னாயக்கற்த[ா]யார் எல்லம்மாள் தற்மம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 415/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: ஊத்துக்கோட்டை	வரலாற்று ஆண்டு	: 18-ஆம் நூற்.
ஊர்	: போந்தவாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 1
அரசன்	: –		
இடம்	: பிச்சாலீஸ்வரர் கோயில் தூண்.		

குறிப்புரை : கல்வெட்டு சிதைந்துள்ளது. கச்சியூர் நாட்டு வெண்குன்றத்தைச் சேர்ந்த ஒருவன் போந்தவாக்கம் கோயிலுக்கு இந்த தூண் தந்தான் போலும். வெண்குன்றம் என்ற ஊர் வந்தவாசி அருகே இன்றும் இதே பெயரில் உள்ளது. வெண்குன்றம் ஒரு கோட்டமாகவும் இருந்துள்ளது.

Summary : Pōndavākkam - Siva temple first piller in the maṇḍapa. States that the pillar was gifted from Veṉkuṉram resident.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ உடையார் -
2. வெட்டிந புக -
3. கச்சியூர் நாட்-
4. டு வெண்குன்ற -
5. த்து . . . . . று பூ-
6. டண போதகம்
7. ஈண்டு . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 416/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: ஊத்துக்கோட்டை	வரலாற்று ஆண்டு	: 18-ஆம் நூற்.
ஊர்	: போந்தவாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 2
அரசன்	: –		

இடம் : பிச்சாலீஸ்வரர் கோயில் தூண்.

குறிப்புரை : கல்வெட்டு சிதைந்துள்ளது. கச்சி மற்றும் வேண்டான்பள்ளி என்ற சொற்கள் உள்ளன. திருப்பணிக்கு உதவியவர் விவரம் எனலாம்.

Summary : States that the pillar was construced by Vēndānpaḷḷi of Kachchiyūr. In charactor of 18th century.

கல்வெட்டு :

1. . . . நய்யும் நன்-
2. றாக கச்சியாக-
3. . . . . ன்றாடு வேன்
4. டான் பள்ளி ஆ-
5. ய வராமல் . . .
6. ண . . . . ரண்டும் . . .
7. . . . லெ . . . ன்று கண்டும்-
8. று . . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 417/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: ஊத்துக்கோட்டை	வரலாற்று ஆண்டு	: 18-ஆம் நூற்.
ஊர்	: போந்தவாக்கம்	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 3
அரசன்	: –		

இடம் : பிச்சாலீஸ்வரர் கோயில் தூண்.

குறிப்புரை : கல்வெட்டு சிதைந்துள்ளது. குணமேவன் என்ற பெயரும் வேளான் என்ற சொல்லும் உள்ளது. வேளான் - குயவர் ஆவான்.

Summary : Pōndavākkame - Siva temple (Pichchalisvarar temple) 3-rd pillar in the maṇḍapa. States that the pillar was gift from Vēlaṉ of Kachchiyūr-Nāḍu. States that the Pillar was gifted from Aludaiparappi Gunamevan.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ . . . வே[ண்]
2. டாதன் த . கச்சி
3. . . . . நாட்டு வே-
4. ளான் தந்து ஆளு-
5. யரப்பி குனமே-
6. வன் தன்மம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 418/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: ஊத்துக்கோட்டை	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1349.
ஊர்	: சுருட்டப்பள்ளி	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: விஜயநகரப் பேரரசு	ஊர்க் கல்வெட்டு எண்	: 1
அரசன்	: இரண்டாம் ஹரிஹரன்		

இடம் : பள்ளிகொண்டீஸ்வரர் கோயில் கருவறை வடபுறச் சுவர்.

குறிப்புரை : விஜயநகரப் பேரரச மரபில் வந்த இரண்டாம் ஹரிஹரனுடைய ஆட்சி காலத்தில் 400 பண மதிப்பில் தனிநபர்கள் கோயிலுக்கு நிலங்கள் விலைக்கு பெற்றுக் கொடையாக வழங்கியுள்ளனர். கல்வெட்டில் நெல்லூர் இடம் பெறுகின்றது. கல்வெட்டு சிதைந்துள்ளது.

Summary : On the north wall of the central shrine in the Paḷḷikoṇḍīśvarar temple. King - Vijayanagharar Harihara II. Year 1349 C.E.

Gifted lands to the temple by a private person. The land prise was 400 Panam. Mentions Nellūr Slightly damaged.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ௨ன் ௨ஹா ௨ணுலெஸ்ரூ அரி . . . . . . இராயற்கு செல்லாநின்ற வருஷம் ஆயிரத்து யிருநூற்று எழுபது தான்டி செல்ல நள்தன வருஷத்து மார்கழி மாதம் சு . . . . .
2. புத்தாலையும் நித்த . . . மற்திங்கள் . . . நிற்றே . . ௨நாணருஜ௨ . . . சியூர் . . . டட சிறுவரையிட்ட இப்பளில் தவதனம தானியவட்டு . . . து ௨ாயபலியில்
3. யரு . . ப நெல்லூரில் கலி . . மாந்துவதும் பாநாடம்பரில் ப . . . பற்கட்டளை யிட்டு சொன்னார். மகனார் கோயில் நன்தாய வடக்கெல்லை. . . . .
4. ஆனாச்சை வாசாய பலதளிகை உட்பட விற்ற பணம் சா இப்பணம் நாநூற்றுக்கும் விற்று விலை வ௨ாணம் பண்ணிக் குடுத்தேன் . . . .
5. போனஸம் பெவலாடத்து . . அம்ப . . . வரதனங்களேன் இவை . . . . அ . . . இது யிந்த . . . நாள் . . . இது .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 419/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: ஊத்துக்கோட்டை	வரலாற்று ஆண்டு	: 14-ஆம் நூற்.
ஊர்	: சுருட்டப்பள்ளி	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 2
அரசன்	: –		

இடம் : பள்ளிகொண்டீஸ்வரர் கோயில் கருவறைத் தெற்குச்சுவர்.

குறிப்புரை : கல்வெட்டு சிதைந்துள்ளது. சந்திரசேகர சுப்பநார் என்பவரின் பெயர் வருகிறது. கோயிலுக்குக் கொடை தந்திருக்கலாம்.

Summary : On the south wall of the central shrine in the same temple. The King name and regnal year is not mentioned.

Chandrasekar Subbanar gifted lands or panam to the temple. It is slightly damaged.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ உன். . . யங்கரை கலவே . . . .
2. ணி . . . . ஸிரி சந்திரசேகர-
3. சுப்ப நாருமிதாசாய . . . .
4. . . . ரும் யோதயே . . . நாத . . . .
5. யார் திங்கள் பணியே . . . .
6. ளான மீ நணயவப்ப . . .
7. பன்மாஹேஶ்வரரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 420/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: ஊத்துக்கோட்டை	வரலாற்று ஆண்டு	: பொ. ஆ. 985-1014
ஊர்	: கச்சூர் (நம்பாக்கம்)	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	: 1
அரசன்	: முதலாம் இராசராசன்		
இடம்	: கோயில் முன் உள்ள கல்தூண்.		

குறிப்புரை : முதலாம் இராசராசனுடைய மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் இக்கல்வெட்டில் ஆட்சியாண்டு சிதைந்துவிட்டதால் காலம் துல்லியமாக அறிய முடியவில்லை. காட்டூர் நாட்டுக் காட்டூரான ஏரி குத்தகைக்கு விடப்பட்டு அதிலிருந்து வரும் பணம் கொண்டு நிலங்கள் விலைக்கு வாங்கி கோயிலுக்கு வழங்கப்பட்டன. சோமாசியாரிடமிருந்து நிலங்கள் வாங்கப்பட்டன. இறையிழிச்சி தரப்பட்டது. சில தனி நபர்களின் பெயர்களும் ஊர்களும் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளன.

Summary : One of the pillar in the Kachchālīsvavar temple at Kachchūr. King Rājarāja Cholā I (985-1014 C.E.).

This inscription contains his historical introduction 'Tirumagal Pōla'. The Kāṭṭūr Sabha, was leased Kattur lake and purchased some lands to the temple. The lands were with out tax (iṟaiyilinilam). Mentions some villages and indepenant persons. Slightly damaged this inscription.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. திருமகள் போலப் பெருநிலச்-
3. செல்வியுந் தனக்கே வுரிமை பூ-
4. ண்டமை மநக்கொள காந்த-
5. ளூர்ச் சாலை கலமறுத்தருளி-
6. கங்கபாடியும் தடிகைபாடியும் -

7. வேங்கை நாடும் குடமலை நாடும்-
8. தெண்டிறல் ஈழ மண்டலமு-
9. எண்டிசை புகழ்தர ஈழமண்டிலமு-
10. தன்னெழில் வளரூழியில் எ-
11. ல்லா[யா]ண்டுந் தொழுதக விளங்கும்-
12. யாண்டே செழியரைத் தேசுகொள் [கோ]-
13. இராசகேசரி வர்மரான-
14. உடையார் ஸ்ரீ இராசராச-
15. தேவர்க்கு . . . விற்காட்டூர்-
16. கோட்டத்து காட்டூர் நாட்டுக் காட்டூர்-
17. ரான ஏரிக்கு குத்தய . . செழுப்பயு பெருஞ்செ . . . .
18. உள்ளமும் பொந்சை . . க்கு-
19. குண்டிலும் ஊருடையார் பெருந்-
20. தரத்து செங்கரும் மங்கல ப-
21. ன்னாழியில் கோகண்ட சோமா-
22. சியார் பக்கல் விலையாக விலைக்கு விலை-
23. யற விற்றுக் கொண்டு இறையிழிச்சி-
24. இடக்கடவதாகவும் ஏரிபாசியாவிரங் கு-
25. டுத்த முள்ளியம் கிழவன் கோலன் பக்கல் படுகாயன்படி குடுக்கக் கடவோமாக.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 421/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: ஊத்துக்கோட்டை	வரலாற்று ஆண்டு	: 11-ஆம் நூற்.
ஊர்	: கச்சூர் (நம்பாக்கம்)	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 2
அரசன்	: –		

இடம் : கச்சாலீஸ்வரர் கோயில் முன் உள்ள கல்தூண் பின்புறமுள்ள கல்வெட்டு.

குறிப்புரை : இக்கல்வெட்டின் தொடக்கப்பகுதியும் இறுதிப்பகுதியும் கிடைக்கவில்லை. பிற்காலச் சோழர் கல்வெட்டாகத் தோன்றுகிறது.

Summary : One of the pillar in the Kachchālīsvavar temple at Kachchūr. It is badly damaged.

It may be chōḻa period. Mentions peruvaḻi and lands.

கல்வெட்டு :

1. பாற்கெல்லை தாங்குய கரை-
2. யிநவ மேல்பாற் கெல்லை
3. பெருவழியின் கிழக்கும் வடபாற்-
4. கெல்லை கோ . . . .
5. யங்கன் கிழக்கும் நாற்பாற்க்-
6. கெல்லைக்குட்பட்ட நிலமாக . . . க்கு . .
7. மிழ . . . வை . . . ளுக்குய . . . .
8. . . . . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 422/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: ஊத்துக்கோட்டை	வரலாற்று ஆண்டு	: 18-ஆம் நூற்.
ஊர்	: ஊத்துக்கோட்டை	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 1
அரசன்	: –		

இடம் : சுந்தரவரதராஜபெருமாள் கோயில் தூண்.

குறிப்புரை : சுந்தர வரதராஜ பெருமாள் கோயிலுக்குக் தூண் ஒன்றை வழங்கிய கொடையாளியின் பெயர் (நெடுங்குமாரகுமார மோகன்) உள்ளது.

Summary : On the pillar in the Sundaravaradha Perumal temple. This pillar was donated by Mohan perumāḷ son of Kumaran.

கல்வெட்டு :

1. கன க-
2. ன் நெடுங்-
3. குமார-
4. குமரன் மே-
5. ாகன் பெ-
6. ருமாள் இ-
7. ட்ட தூண்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 423/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: ஊத்துக்கோட்டை	வரலாற்று ஆண்டு	: 18-ஆம் நூற்.
ஊர்	: ஊத்துக்கோட்டை	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 2
அரசன்	: –		

இடம் : சுந்தர வரதராஜபெருமாள் சன்னதியில் உள்ள தூண்.

குறிப்புரை : கோயிலில் தூண் ஒன்றை வழங்கிய கொடையாளியை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. வீரபாண்டியன் பெரியநங்கை அழகன் கொடையாளியின் பெயர்.

Summary : On the pillar in the Sundaravaradha Perumāl temple. King name and year is not mentioned.

This is gifted by Virapāndiya periyanagai alias Aḻagan.

கல்வெட்டு :

1. வீர பாண்டிய-
2. ன் பெரிய ந-
3. ங்கை அ-
4. ழகன் இ-
5. ட்ட தூண்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 424/2024**

மாவட்டம்	: திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	: –
வட்டம்	: ஊத்துக்கோட்டை	வரலாற்று ஆண்டு	: 18-ஆம் நூற்.
ஊர்	: ஊத்துக்கோட்டை	இ.க. ஆண்டறிக்கை	: –
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: –
எழுத்து	: தமிழ்		
அரசு	: –	ஊர்க் கல்வெட்டு எண்	: 3
அரசன்	: –		

இடம் : சுந்தர வரதராஜபெருமாள் கோயில் தூண்.

குறிப்புரை : கல்வெட்டு சிதைந்துள்ளது. மடவை காருண்ய பெருமான் கோயிலுக்குத் தூண் ஒன்றை ஏற்படுத்தியுள்ளான்.

Summary : Another pillar mentions a person. This piller is given by Kārunya peruman.

கல்வெட்டு :

